உ
சிவமயம்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை மேல்நிலைப் பள்ளி

காரைக்குடி - 630 001.

நூற்றாண்டு விழா மலர்

உன்னதமான கல்விப் பணியில் 100 ஆண்டுகள் 1913 - 2013

1913-2013

CENTENARY CELEBRATION SOUVENIR

SRI MEENAKSHI SUNDARESWARAR VIDYASALA HIGHER SECONDARY SCHOOL
KARAIKUDI



1139

நம் பள்ளி வளாகத்தில் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள



ஸ்ரீ வித்தியார்த்தி விநாயகர் கோவில்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை மேல்நிலைப் பள்ளி

எண் : 2, சிவன் கோயில் தெற்கு, காரைக்குடி–630001. தமிழ்நாடு

Website : smsvhsskaraikudi.in
Ph : 04565 220877

E-mail : smsvcent@gmail.com,
smsvboysschool@gmail.com

நூற்றாண்டு நிறைவு விழா அழைப்பிதழ்
1913 - 2013

நிகழ்முறை : காலை 9.00 மணி தொடக்க விழா

மங்கல இசை

இறைவணக்கம்

திருவிளக்கேற்றுதல்

வரவேற்புரை	:	பள்ளித் தாளாளர் திரு. C. மெய்யப்பன்
முன்னிலை உரை	:	பள்ளி வளர்ச்சிக்குழுத் தலைவர் திரு. A. திருநாவுக்கரசு
அறிமுக உரை	:	பள்ளி வளர்ச்சிக்குழுச் செயலர் திரு. முத்து. பழநியப்பன்
செயலாளர் அறிக்கை	:	பள்ளி வளர்ச்சிக்குழுச் செயலர் திரு. S.L.N.S. பெரியணன்
நூற்றாண்டுவிழா தொடக்க உரை	:	மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. **ப. சிதம்பரம்** அவர்கள்
தலைமை உரை	:	மாண்பமை நீதியரசர் திரு. **மெ. சொக்கலிங்கம்** அவர்கள்
திறப்பு விழா	:	புதிய கட்டிடங்கள், விளையாட்டரங்கம், நவீன ஆய்வகம், SMART வகுப்புகள் தொடக்க மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. **ப.சிதம்பரம்** அவர்கள்

நூற்றாண்டு விழா மலர் வெளியீடு

மலரை வெளியிட்டு வாழ்த்துரை: தொழிலதிபர் கருமுத்து தி. கண்ணன் அவர்கள்

மலரைப் பெற்றுக்கொள்பவர்: கம்பார் நா. முத்தையா செட்டியார் அவர்கள்

விழாச் சிறப்புரை: பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள்

விழாப் பேருரை: தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்

நன்றியுரை: திரு. MR. வள்ளியப்பன்

நிறைவு விழா

மாலை 3-30 மணி		முன்னாள் மாணவர்கள் சந்திப்பு
4-30 மணி		தேனீர் விருந்து
5-00 மணி		வாழ்த்தரங்கம் / கருத்தரங்கம்
தலைமை	:	கோவிலூர் ஆதீனகர்த்தர் சீர்வளர்சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்
வாழ்த்துரை	:	அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சேது சுடலைமுத்து முத்தமிழறிஞர் டாக்டர் தமிழண்ணல் திரைப்பட இயக்குனர் திரு. SP. முத்துராமன் திரைப்பட இயக்குனர் திரு. ராம. நாராயணன் சட்டமன்ற உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி நகர் மன்றத் தலைவர் பேரா. திருமதி கற்பகம் இளங்கோ நற்கதை நம்பி பேராசிரியர் டாக்டர் அய்க்கண்
விழா நிறைவுப் பேருரை	:	சொல்லின் செல்வர், குடிநீர்க் காவலர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பழ. கருப்பையா
நன்றியுரை	:	திரு. SP. பழனிவேலு

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர்
வித்தியாசாலை மேல்நிலைப் பள்ளி

எண் : 2, சிவன் கோயில் தெற்கு, காரைக்குடி-630001. தமிழ்நாடு

Website : smsvhsskaraikudi.in E-mail : smsvcent@gmail.com, smsvboysschool@gmail.com

Ph : 04565 220877

S.M.S.V. Higher Secondary School

KARAIKUDI

Centenary Committee

Thiru. C. Meyyappan
Thiru. Satthi. A. Thirunavukkarasu
Thiru. PL.N. Muthiah Chettiar
Thiru. Muthu. Palaniappan
Thiru. S.L.N.S.Periyanan
Thiru. PR. Chockalingam
Thiru. S.M.AR.N.AR. Narayanan Chettiar
Thiru. A.M.K.M. Karuppan Chettiar
Thiru. AL.S. Alagappa Chettiar
Thiru. SP. Ramasamy
Thiru. SP.M.N.VR. Subramanian
Thiru. Mutha VE.SO.N. Vellaiyan
Thiru. Adv. N. Palaniappan
Thiru. S.RM.S.Narayanan Chettiar
Tmt. M.CT. Deivanai Achi
Thiru. C.RM. Arunachalam
Thiru. Dr.V. Venkatachalam
Thiru. Pala. Karuppiah
Thiru. Er.S. Nachiappan
Thiru. PL. Chidambaram
Thiru. SP. Muthuraman
Thiru. MR. Valliappan
Thiru. SP. Palanivelu
Thiru. P.S.RM.A. Swaminathan
Thiru. AL.M. Ravi
Thiru. K.Vembu Sundaram
Thiru. Rama. Narayanan
Thiru. Pala. Palaniappan
Thiru. PL. Sabarathinam
Thiru. Adv. N. Shankar
Thiru. Dr.KR. Muthiah
Thiru. Dr. S. Ramalingam
Thiru. M.S.P. Raghavan Chettiar
Thiru. Auditor. N. Narayanan
Thiru. M. Abdul Salam
Thiru. PL.N.M. Narayanan

School Committee

Thiru. PR. Chockalingam
Thiru. C. Meyyappan
Thiru. C. Muthappan
Thiru. P.L.N. Muthiah Chettiar
Thiru. Satthi. A. Thirunavukkarasu
Thiru. S.M.AR.N.AR. Narayanan Chettiar
Thiru. KR. Shanmugam
Thiru. Muthu. Palaniappan
Thiru. S.L.N.S. Perianan
Thiru. Pala. Palaniappan
Thiru. SP. Palanivelu
Thiru. MR. Valliappan
Thiru. N. Gopichandran
Thiru. M. Henry Baskar
Thiru. V. Sundararaman

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலைச் சங்கம்

பொதுச் சபை

திரு. சொ. மெய்யப்ப செட்டியார்
திரு. சொ. முத்தப்ப செட்டியார்
திரு. மெ.செ.ச.மு.சித.மு. மெய்யப்ப செட்டியார்
திரு. பி.ஆர். சொக்கலிங்கம் செட்டியார்
திரு. திரு.சா.நா.சா.தெ.சா. தெய்வராயன் செட்டியார்
திரு. மெ.செ. மெய்யப்பச் செட்டியார்
திரு. ஆவி.பள.முரு.மு.பழ. முருகப்ப செட்டியார்
திரு. பெரி.நா.நா.அ.தெ. நாச்சியப்ப செட்டியார்
திரு. வீர.சோமசுந்தரம் செட்டியார்
திரு. செட்டியப்ப செட்டியார்
திரு. ரெ. முத்துக்கணேசன் செட்டியார்
திரு. சி.மு.அரு.நா.அரு.நாராயணன் செட்டியார்
திரு. சா.ராம.சா.நாராயணன் செட்டியார்
திரு. அள.கரு. அடைக்கப்பன் செட்டியார்
திரு. மெய.ஆ.அ.மு. அண்ணாமலை செட்டியார்
திரு. ஏ.ஏல். ராமநாதன் செட்டியார்
திரு. முத்த.வெ.சொ.வெள்ளையன் செட்டியார்
திரு. அ. நாராயணன் செட்டியார்
திரு. வீர.ராம.பெரி. பெரியகருப்பன் செட்டியார்
திரு. சி. பெரியணன் செட்டியார்
திரு. சி. வீரப்பன் செட்டியார்
திரு. சொ. சொக்கலிங்கம் செட்டியார்

நிர்வாகக் குழு

திரு. பி.ஆர்.சொக்கலிங்கம் செட்டியார்
திரு. சொ. மெய்யப்ப செட்டியார்
திரு. தேவ. நாச்சியப்ப செட்டியார்
திரு. சி.மு.அரு.நா.அரு.நாராயணன் செட்டியார்
திரு. எம்.எஸ். மெய்யப்பச் செட்டியார்
திரு. சொ. முத்தப்ப செட்டியார்
திரு. வீ.ஆர்.ஆர்.எம்.பி.ஆர். பெரியகருப்பன் செட்டியார்
திரு. மெய.ஆ.அ.மு. அண்ணாமலை செட்டியார்
திரு. சா.ராம.சா. நாரோயணன் செட்டியார்
திரு. சொ. சொக்கலிங்கம் செட்டியார்
திரு. மெ.செ.ச.மு.சித.மு.மெய்யப்ப செட்டியார்

Higher Secondary Course Organising Committee Members

Thiru. PR. Chockalingam
Thiru. C. Meyyappan
Thiru. Satthi. A. Thirunavukkarsu
Thiru. PL.N. Muthiah
Thiru. Muthu. Palaniappan
Thiru. S.L.N.S. Perianan
Thiru. AL.S. Alagappan
Thiru. SP. Ramaswamy
Thiru. SP. Palanivelu
Thiru. MR. Valliappan
Thiru. N. Narayanan
Thiru. V.S.M. Ramanathan

Old Boys Association

Thiru. Satthi. A. Thirunavukkarsu	- President
Thiru. Muthu. Palaniappan	- Secretary
Thiru. PL.N. Muthiah	- Treasurer

Our Veteran Headmasters

Thiru. R. Meenakshi Sundaram	(July 1913 to Sep 1913)
Thiru. R. Sundarachariar	(Oct 1913 to Nov 1913)
Thiru. R. Ramasubbaier	(July 1914 to Jun 1915)
Thiru. S.G. Subramania Iyer	(Nov 1915 to Feb 1919)
Thiru. N.S. Venkatarama Iyer	(21.3.1919 to 1.4.1940)
Thiru. A. Ramanuja Iyyengar	(May 1940 to 8.2.1946)
Thiru. K.R. Srinivasa Iyer	(1.3.1946 to 6.8.1954)
Thiru. V. Aravamutha Iyyengar	(Sep 1954 to 9.6.1966)
Thiru. M. Ganesan	(13.6.1966 to 16.2.1978)
Thiru. K.S. Minakshi Sundaram	(20.2.1978 to 31.5.1987)
Thiru. SP. Palanivelu	(11.6.1987 to 31.5.2002)
Thiru. MR. Valliappan	(11.11.2002 onwards)

School Staff Members

Thiru. MR. VALLIAPPAN
Thiru. M. HENRY BASKAR
Thiru. L. PALANIAPPAN
Thiru. R. ANNAMALAI
Thiru. N. GOPICHANDRAN
Thiru. V. SUNDARARAMAN
Thiru. M.T. SRINIVASAN
Thiru. SV. MUTHUKUMAR
Thiru. P. RADHAKRISHNAN
Tmt.KR. BHUVANA
Thiru. M. LAKSHMANAN
Thiru. I. PRAGASH
Thiru. P. SENTHIL KUMAR
Thiru. S. GURURAJAN
Thiru. S. KANDASAMY
Thiru. J. PRAKASH MANIMARAN
Thiru. K. KANNAN
Thiru. A. ARULRAJ
Tmt. B. SHANMUGA PRIYA
Thiru. T. YOGEESWARAN
Tmt. T. KALAISELVI
Tmt. A. UMA MAHESWARI
Thiru. V. GANESAN
Thiru. N. RAVICHANDRAN
Tmt. N. VIJAYA
Tmt. KR. VIJAYA
Tmt. R. SHANMUGAVALLI
Tmt. AR. ALAMELU
Tmt. M. VIJAYALAKSHMI
Thiru. K. SENTHILNAATHAN
Thiru. S. PALANIAPPAN
Thiru. S. VENKATESAN

Non Teaching Staffs

Thiru. S. MYTHILI
Thiru. T. JAYAPAUL
Thiru. M. SWAMINATHAN
Thiru. M. KANNAN
Thiru. RM. ANNAMALAI
Thiru. M. BALASUBRAMANIAN
Thiru. K. KULANDHAIVEL
Thiru. C. NEHRU RAJA



எண்ணங்கள்

முனைவர். கரு. முத்தய்யா

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளி நான் பயின்ற பள்ளி (1953 - 1959); 1966ல் ஓர் அறிவியல் ஆசிரியர் மருத்துவ விடுப்பில் இருந்த போது விடுப்புக் காலப் பணியிடத்தில் 40 நாட்கள் அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றிய பள்ளி. பிற்காலத்தில் நான் தமிழ்ப் பேராசிரியராகவும், மேடைப் பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் இன்னும் பல்வேறு பரிமாணங்களிலும் உயரங்களைத் தொடும் அளவிற்கு என் உருவாக்கத்தில் சிறந்த அடித்தளத்தை அமைத்துத் தந்த பள்ளி.

இப்பள்ளிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் என்று கலங்கிய காலங்கள் உண்டு. பெரிய அளவில் இல்லை என்றாலும், சேது அணை கட்டும் போது அணில் செய்த சிறு தொண்டினைப் போலச் சிறு தொண்டு செய்யும் வாய்ப்பு எனக்கு ஒரு முறை இல்லை; இரு முறை கிடைத்தது.

1988இல் பள்ளி பவள விழா கொண்டாடிய போது, பவள விழாக் குழுவினர் என்னைப் பவள விழா மலரின் பதிப்பாசிரியராகப் பணியமர்த்தினர். நன்றியோடும், மகிழ்ச்சியோடும் அப்பணியை என்னால் இயன்ற அளவு செம்மையாகச் செய்தேன்.

இப்போது பள்ளி நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த நேரத்தில், மீண்டும் நூற்றாண்டு விழா மலரின் பதிப்புப் பணி எனும் நல் வாய்ப்பினை விழாக்குழுவினர் எனக்கு அளித்துள்ளனர். அவர்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், எனக்குச் செய்துள்ள பெருமைக்கும் இந்த நேரத்தில் என் உளம் நிறைந்த நன்றியைப் பதிவு செய்கிறேன்.

மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி உதவிய சான்றோர் பெருமக்களுக்கும், கட்டுரைகள் அனுப்பிக் கவினுறச் செய்த அறிஞர் பெருமக்களுக்கும், கவிதைகள் அனுப்பி வளப்படுத்திய கவிஞர் பெருமக்களுக்கும் விழாக்குழுவின் சார்பில் நன்றி.

மலருக்குப் பெருமளவில் விளம்பரங்கள் பெற்றுத்தரப் பெருமுயற்சி மேற்கொண்ட விழாக்குழு உறுப்பினர்கட்கும், பள்ளி ஆசிரியர்கட்கும் நன்றி. விளம்பரம் கொடுத்துச் சிறப்பித்துள்ள வணிகப் பெருமக்களுள் பெரும்பாலோர் நம் பள்ளியின் முன்னாள் மாணவர். விளம்பரம் கொடுத்ததன் மூலம் பள்ளிக்குத் தம் நன்றியைத் தெரியப்படுத்திக் கொண்ட அவர்களுக்கு, பள்ளி தம் நன்றியை என் வாயிலாகப் பதிவு செய்கிறது.

மலர் சிறப்பாகத் தயாராகத் துணை நின்றோர் பலர். எனினும், சிறப்பு நிலையில் துணை செய்த சிலரைக் குறிப்பிட்டு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மலரின் வடிவமைப்பில் (Designs) பெரும் அளவில் ஆலோசனைகள் வழங்கியதோடு, தொடக்கத்திலிருந்து இறுதி வரை எல்லா நிலைகளிலும் என்னோடு தோளோடு தோளாக நின்று துணை செய்தவர் நூற்றாண்டு விழாக் குழுச் செயலர் திரு. முத்து. பழனியப்பன்.

மற்றொரு செயலாளர் திரு. எஸ். பெரியணன், திரு. சக்தி.அ. திருநாவுக்கரசு செட்டியார், முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. சுப. பழனிவேலு, இப்போதைய தலைமை ஆசிரியர் திரு. முரு. வள்ளயப்பன் ஆகியோர் சிறப்பு நிலை நன்றிக்கு உரியோர்.

மலருக்கு வரும் விளம்பரங்கள், கட்டுரைகள், கவிதைகள், செய்திகள் போன்றவற்றைப் பெற்று, பாதுகாத்து என்னிடம் ஒப்படைக்கும் பணியை விழாக் குழுவினர் ஆங்கில ஆசிரியர் திரு. எஸ். கந்தசாமி அவர்களிடம் ஒப்படைத்தனர். அப்பணியைக் கடமை உணர்வோடு கண்ணும் கருத்துமாக நிறைவேற்றிய அவர் தனி நிலை நன்றிக்கு உரியவர் ஆவார்.

மலரை எங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்து, விரைவாக அச்சிட்டு, மணம் பரப்பச் செய்த கே.பி.எஸ்.வி. அச்சகத்திற்கும், குறிப்பாக அதன் உரிமையாளர் திரு. கே. நாச்சியப்பனுக்கும் நன்றி.

நான் பயின்ற பள்ளியின் விழாக் காலங்களில் மலர் உருவாக்கித் தரும் பொறுப்பினை எனக்கு அளித்த நன்னெஞ்சங்கள் அனைத்திற்கும் மீண்டும் மீண்டும் நன்றி

அன்புடன்

கரு. முத்தய்யா
23.6.2013

உ
சிவமயம்



கோவிலூர் மடாலயம்

கோவிலூர் - 630 307.
(வழி - மானகிரி), சிவகங்கை மாவட்டம்.
போன் : **04565 - 236846**

நாள் : 23.05.2013

கோவிலூர் ஆதீனம்
சீர் வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகளின் ஆசியுரை

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலை தோன்றி 100 ஆண்டு கடந்து நூற்றாண்டு விழா கொண்டாடுகிறது என்பது மிக மகிழ்ச்சியான செய்தி.

இந்தப் பகுதியிலே முதன் முதல் தோன்றிய பள்ளி நம் பள்ளி. இப்பள்ளியினுடைய சேவை அளப்பரிது. இந்த நூறாண்டுகளிலே இப்பள்ளி ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளை, அறிஞர்களை, தொழிலதிபர்களை உருவாக்கி இப்பகுதி வளம் பெறச் செய்த சேவை பாராட்டுக்குரியது.

வள்ளல் அழகப்பரும், நம் குருநாதர் நாச்சியப்ப சுவாமிகளும் இப்பள்ளி மாணவர்கள். நாம் இந்தப் பள்ளி மாணவனாக 1951 முதல் 1957 வரை பயின்றோம். அன்றைய ஆசிரியர்களின் அன்பும் ஈடுபாடும் இன்றைக்கும் நினைக்குந்தோறும் மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் தருகிறது.

ஒரு பள்ளி எவ்விதமான தொய்வும் இன்றி ஒரு நூற்றாண்டு காலம் சேவை செய்து மேலும் பயணிக்கிறது என்றால் மிக மிக அரிய செயல்.

இன்றும் அதே தரத்தோடும் ஒழுக்கத்தோடும் இப்பள்ளி நடைபெறுவது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இன்று அதிகமான மாணவர்கள் இருந்தாலும் கூட இந்தப் பள்ளியின் நிர்வாகம் நல்ல முறையிலே நிர்வகித்து மாணவர்களின் தேர்ச்சி விகிதமும் மதிப்பெண் விகிதமும் அதிகமாகப் பெற்று வருவது பாராட்டுக்குரியது.

இந்தப் பள்ளி இன்று போல் இப்பகுதி மக்களுக்கு மேன்மேலும் சிறப்பாகப் பணியாற்ற வாழ்த்துகிறோம்.

இந்த நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் நடைபெற நம்முடைய வாழ்த்துக்கள்.

இப்பள்ளியின் இன்றைய நேற்றைய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் வாழ்விலே எல்லா நலமும் வளமும் பெற்றுச் சிறப்புற. குருமுதல்வர் கோவிலூர் ஆண்டவர் திருவடி சிந்தித்து வாழ்த்துகிறோம்.

வேணும்
ஸ்ரீ சற்குருநாதன் துணை



உ
சிவமயம்

வாழ்க தமிழ் வளர்க சைவம்

அருள்தரு மங்களாம்பிகை உடனாய
அருள்மிகு வாஞ்சிநாத சுவாமி துணை

HIS HOLINESS

Sri La Sri Niramba Alagiya Gnanaprakasa Desika Paramachariya Swamigal
MADATHIPATHI - THULAVUR MADAM
KUNNAKKUDI - Via (Sivaganga Dt.) Pin : 630 206.
Tamilnadu. India
Ph : (04577) 264446

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக
பரமாசிரிய சுவாமிகள்
மடாதிபதி, துலாவூர் மடம்.

விஜய ஆண்டு, வைகாசித் திங்கள் 20ஆம் நாள் - 03.05.2013

வாழ்த்துரை

காரைக்குடி S.M.S.V மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

இப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் திரு ப. மாசிலாமணி தேசிகர் அவர்கள் எமது (அத்தையின் கணவர்) மாமா. அவர்கள் வீட்டில் தங்கி S.M.S.V உயர்நிலைப் பள்ளியில் 1953-54 ஆண்டுகளில் 5,6ம் வகுப்புக்கள் படித்தோம். உயர்நிலைப்பள்ளில் ஐந்தாம் வகுப்பு இருந்தது இப்போது வியப்பாக இருக்கும்.

இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலை மேல்நிலைப்பள்ளி நூறாவது விழா சிறப்பாக நடைபெற இருக்கிறது. நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறவும், இவ்விழாவையொட்டி வெளியிடப் பெறும் விழா மலர் சிறப்பாக அமையவும் திருவருளையும், குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

நலமே தழைக !

ஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

1139



உ

சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு. **குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**
குன்றக்குடி - 630 206.
சிவகங்கை மாவட்டம்.
04577- 264227

06.06.2013

வாழ்த்துரை

நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள் ஈட்டும் பொருளில் ஒரு பகுதியை அறப்பணிக்கென்றே ஒதுக்கி வைத்துத் திருக்கோவில் திருப்பணிகளுக்கும், கல்விப் பணிகளுக்கும் பிற அறப்பணிகளுக்கும் வழங்கி மகிழும் பெருந்தகைமையுடையவர்கள், அந்த வகையில் இப்பெருமக்கள் எடுத்த திருக்கோயில்களும் கல்விக் கோயில்களும் மிகப் பலவாகும். காரைக்குடியில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப்பள்ளி பிரிக்கப்படாத இராமநாதபுர மாவட்டத்தில் முதல் உயர்நிலைப்பள்ளியாக நகரத்தார் குடும்பத்தாரால் நிறுவப்பட்டுப் புகழ் சிறந்து விளங்கி வருகிறது. இந்த அருமையான பள்ளியின் நூற்றாண்டு விழா அண்மையில் நிகழவிருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது.

இந்தக் கல்விக்கோயிலை நூறு ஆண்டுகளாக மிகத்தரமான முறையில் மேலாண்மை செய்து வந்த முற்காலத் தாளாளப் பெருமக்கள் போற்றுதலுக்குரியவர்கள். இக்காலத்தில் சிறப்பாக மேலாண்மை செய்துவரும் தாளாளருக்கும், பெருமக்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் இந்த நூற்றாண்டு விழாக்காலத்தில் உளமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தப்பள்ளி மேலும், மேலும் சிறந்தோங்கித் தொடர்ந்து கல்விப்பணி ஆற்றிவரவும்,நூற்றாண்டு விழா இனிதே நிறைவெய்தவும், நூற்றாண்டு விழா மலர் அறிவுச் சுடரொளி திகழ வெளி வரவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பொன்னம்பல அடிகள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு



P.CHIDAMBARAM
Finance Minister, India
New Delhi - 110001

सत्यमेव जयते

மே 15, 2013

வாழ்த்துச் செய்தி

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் செயல்பட்டுவரும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்தியாசாலை மேல்நிலைப்பள்ளி ஜூன் 1913ம் ஆண்டு தொடங்கி இந்த ஆண்டு நூற்றாண்டை நிறைவு செய்கிறது என்ற செய்தி அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப்பள்ளியில் திரு வள்ளல் அழகப்பர், திரு. ஏ.வி.எம். போன்ற பெருமக்கள் பயின்றனர் என்பது இந்தப்பள்ளிக்குச் சிறப்பைச் சேர்க்கின்றன. மேலும் இந்தப்பள்ளி படிப்பு, விளையாட்டு மற்றும் பல துறைகளிலும் மாணவ மாணவிகளை ஊக்குவிப்பது குறித்து எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முதல்வர் எல்லோருக்கும் எனது பாராட்டுகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூற்றாண்டு விழா கொண்டாடும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை மேல்நிலைப்பள்ளி மென்மேலும் பல விழாக்களைக் கொண்டாடவும், இந்த வருடம் நூற்றாண்டு கொண்டாடுவதை ஒட்டி வெளியிடப்படும் மலர் சிறப்புடன் வெளிவரவும் என்னுடைய இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ப. சிதம்பரம்)



Dr. Justice AR. LAKSHMANAN

Former Judge, Supreme Court of India,
Former Chairman, Law Commission of India

Office : Dev Regency, 1st Floor, No. 11, First Main Road,
Gandhi Nagar, Adyar, Chennai - 600 020.
Phone : 044-24423188, Fax : 044-42121858
e-mail : jusarlakshmanan@gmail.com
justicearl@yahoo.com

25th May 2013

CONGRATULATORY MESSAGE

I am happy to learn that Shri Meenakshi Sundareswarar Vidyasalai Higher Secondary School will be completing its Centenary by June 2013. S.M.S.V. Higher Secondary School is one of the very reputed Higher Secondary Schools being run by the Nagarathaars. Nagarathaars are widely known for their religious, educational, charitable and philanthropic activities from time immemorial. Dr. Alagappa Chettiar, Shri AVM and several others studied in this school. The performance of the students who are going out of the school every year is astounding which is quite possible only due to the teachers who teach their students with duty and dedication. The present Management Committee of the school comprises of very eminent Nagarathaars of Karaikudi. Karaikudi being the Centre place for Chettinad, the School run by the Nagarathars at this place can be rated without fear of contradiction as the best school for imparting education to the poor and needy, haves and have nots and to all sections of society. I wish the function all success.



(Justice AR. LAKSHMANAN)



Hon'ble Justice Shri. M. CHOCKALINGAM
JUDICIAL MEMBER

NATIONAL GREEN TRIBUNAL
SOUTHERN ZONE, CHENNAI

सत्यमेव जयते

நாள் : 02.06.2013

வாழ்த்துச் செய்தி

வானோங்கு தர்மத்தைத் தானோங்கச் செய்த செட்டி நாட்டின் அழகிய நகரங்களில் ஒன்றாம் காரைக்குடி ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் வித்யாசாலை தன்னுடைய நூற்றாண்டை சீர்மிகு விழாவாக 23-06-2013 அன்று காணவிருக்கிறது என்ற தேனான செய்தி மட்டற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

2. இத்தகைய பெருமை வாய்ந்த இந்த மேல்நிலைப் பள்ளியில் 6-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை கல்வி பயின்ற மாணவன் என்பதும் அவ்வாறு நான் பெற்ற கல்வி என் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்தது என்பதும் எனக்குக் கிடைத்த பெரும் பேறு என்றும் பதிவு செய்கிறேன்.

3. ஆரம்ப காலத்தில் ஒரு சிறிய கட்டடத்தில் 1931-ம் ஆண்டு துவங்கப் பெற்று பின்னர் பெரிய கட்டடம் ஒன்று எழுப்பப்பெற்று இந்தக் கல்விச்சாலை சீராகவும் சிறப்பாகவும் இயங்கி வருவதுடன், இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு கல்வியோடு, ஒழுக்கத்தையும் ஆன்மிகத்தையும் போதித்து சமுதாயம் வளம்பெற செய்துவருகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்தக் கல்விச் சாலையில்தான் 'குடியிருந்த வீடும் கொடுத்த கொடைஞ்சன்' டாக்டர் இராம. அழகப்பச் செட்டியார் அவர்களும், திரைத்துறையில் ஒரு அரணாக விளங்கிய ஏவி. மெய்யப்பச் செட்டியார் அவர்களும் கல்வி பயின்றார்கள் எனும் செய்தி சரித்திரம் சொல்லும் உண்மை. இந்தக் கல்விச்சாலையில் பயின்றவர்கள் நீதியரசர்களாகவும், சிறப்புவாய்ந்த கல்வியாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும்,

மருத்துவர்களாகவும், பொறியியல் வல்லுனர்களாகவும் மற்றும் பலதுறைகளில் சிறந்து நாடு போற்றும் நற்பணியாற்றி இந்தக் கல்விசாலைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

4. இந்த உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட்ட சிலகாலங்களிலேயே பழைய மாணவர் சங்கம் ஒன்று உருவாகி இதுநாள்வரை நன்றாக இயங்கி வருகிறது. 1987-ல் இப்பள்ளியில் அமைப்புக் குழு (organising committee) ஒன்று ஏற்படுத்தப்பெற்று இந்த 100-வது ஆண்டு விழா நடைபெறும் வேளையில் பள்ளிக் கட்டடத்தில் முக்கிய பகுதிகளில் புதியதாகப் பல அறைகள் கொண்ட கட்டடம் பெரும் பொருள் செலவில் எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான நிதி உதவி செய்த அனைவரும் பாராட்டுதற்குரியவர்கள்.

5. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப்பள்ளி கல்வியில் உயர்நிலைபெறுவதற்கு மட்டுமல்லாமல், அங்கு கல்வி பயின்ற மாணவர் பலரை வாழ்க்கையிலும் உயர்நிலையில் உயர்த்திப் பார்த்து வருகிறது. இந்தப் பள்ளியின் சீரும் சிறப்புக்கும், தோன்றிய காலந்தொட்டு இன்று வரை பணியாற்றி வருகிற கடமை தவறாத, ஒழுக்க சீலர்களான தலைமை ஆசிரியர்களும், கொள்கை வழி நின்ற மற்ற அனைத்து ஆசிரியர்களின் பணி பாராட்டுதற்குறியது.

6. இவ்வாறாக ஒரு நூற்றாண்டு காலம் சீரும் சிறப்புமாக இயங்கி வரும் இந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலை இன்னும் பல நூற்றாண்டு காலம் மனித வாழ்க்கைக்கு கண்ணெண கல்வியை மாணவர்களுக்குப் புகட்டி சமுதாயத்திற்கு ஒழுக்கம் படைத்த மாணவக் கண்மணிகளை வழங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவன் பொற்பாதங்களை வணங்கி சிரம் தாழ்த்தி இரைஞ்சுகிறோம்.

இவண்,

நீதியரசர் எம். சொக்கலிங்கம்

திருமதி முத்துப்பெரியநாயகி



வாழ்த்துச் செய்தி

सत्यमेव जयते

Justice. **M. KARPAGAVINAYAGAM**
Chairperson

Appellate Tribunal for Electricity
Core 4, 7th Floor, Scope Complex,
Lodhi Road, New Delhi - 110 003.
Tel : 24368495, Fax : 24368495
Mobile : 99903 24999
Res : Bungalow, No.21, New Moti Bagh,
New Delhi - 110023
Tel : 011 - 24673044

07.06.2013

வணக்கம்.

காரைக்குடி S.M.S.V. மேல்நிலைப் பள்ளி தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி.

S.M.S.V. மேல்நிலைப் பள்ளியைப் பற்றி எவ்வளவு பாராட்டினாலும் அது தகும். இப்பள்ளியில் பயின்ற பெருமக்களால் இப்பள்ளிக்கும் பெருமை; அப்பெருமக்களுக்கும் பெருமை.

நகரத்தார்கள் சிறந்த ஒழுக்க சீலர்கள் மற்றும் பண்பாளர்கள். அவர்களால் நடத்தப்படும் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தாங்கள் கல்வி பயிலும் முறையிலும் ஒழுக்கத்திலும் மிகச் சிறந்தவர்களாகவே விளங்குவார்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.


இப் பள்ளியின் நூற்றாண்டு விழா சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்க! வளர்க!

(நீதியரசர் மு.கற்பக விநாயகம்)



AVM PRODUCTIONS



May 22, 2013

அன்புடையீர்,

வணக்கம்.

என் தந்தையார் திரு.ஏவி. மெய்யப்பன், டாக்டர் திரு. RM. அழகப்ப செட்டியார் போன்ற பெருமக்கள் கல்வி பயின்ற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்தியாசாலை மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழா 2013ம் வருடம் ஜுன் மாதம் நடப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

அன்னசத்திரங்களும், ஆலயங்களும் கட்டி அறப்பணி செய்து வந்த காரைக்குடி நகர மக்களின் கல்விப்பணிக்கு 'பிள்ளையார் சுழி'யாக த் தொடங்கிய இக்கல்வி நிறுவனம் நூறு ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றி நிறைவெய்தியிருப்பது மிகவும் போற்றத்தக்கது.


ஒரு நூறு ஆண்டுகள் கல்வி வழங்கிய இப்பள்ளியின் பெரும் சிறப்பு இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் பிற்காலத்தில் துவக்கிய பள்ளிகளும், கல்லூரிகளும் கூட வெள்ளிவிழாவும், பொன்விழாவும் கொண்டாடி இருக்கின்றன என்பது நாம் பதிவு செய்து கொள்ள வேண்டிய ஒன்று.

இப்பள்ளியே செட்டிநாட்டின் 'தாய்க்கல்வி நிறுவனம்' என்று சொன்னால் மிகையாகாது என்று நம்புகிறேன்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்தியாசாலை மேல்நிலைப்பள்ளி இன்னும் பல ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அன்புடன்,

ஏவி.எம். சரவணன்



அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழவின் 'ஏ' கிரேடு அந்தஸ்து பெற்றது)

அழகப்பா நகர், காரைக்குடி - 630 003. தமிழ்நாடு, இந்தியா

அலுவலகம் : (04565) 225200
இல்லம் : (04565) 225201
தொலைநகலி : (04565) 225202
கைபேசி : 94426 01377
மின்னஞ்சல் : vc_alagappa@rediffmail.com

பேரா. **சேது. சுடலைமுத்து**

துணை வேந்தர்

வாழ்த்துரை

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்யாசாலா மேல்நிலைப்பள்ளி கல்விப்பணியில் நூறாண்டுகள் என்னும் சிகரத்தை எட்டியிருப்பது பாராட்டத்தக்கது. ஒழுக்கம் கல்வியின் விழுப்பம் என்னும் நோக்க வாசகத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இப்பள்ளி செயலாற்றி வருவது இதன் மேன்மையை உலகுக்குப் பறைசாற்றும். ஆன்மீக அன்பர் திரு. சொக்கலிங்க ஐயாவின் வழிகாட்டுதலில் திரு. முத்த. வெ. வெள்ளையன் செட்டியார் காரைக்குடி திருவாசக மடத்தில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலா என்னும் பெயரில் 13.06.1913 - இல் இப்பள்ளியைத் தோற்றுவித்திருப்பது தமிழக வரலாற்றுப் பொன்னேட்டில் பொறிக்கத்தக்க நிகழ்வாகும். இதே கால கட்டத்தில் தமிழக மக்களின் உயர்வுக்கு அயராது பாடுபட்ட தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர் மகாகவி பாரதி.

வீடுகள் தோறும் கலையின் விளக்கம், வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளிகள். நாடு முழுவதும் நகரங்கள்தோறும், ஊர்கள்தோறும் பற்பல பள்ளிகள். இது பாரதியின் கனவு. இனிய சுவையுடைய கனிகள் தரும் சோலைகள் அமைத்தல். இனிய குளிர்ந்த நீர் தரும் சுனைகள் இயற்றல், உண்டி கொடுக்கும் சத்திரங்கள் ஆயிரம் வைத்தல். ஆலயங்கள் பதினாயிரம் கட்டுதல். இவை போன்ற தரும காரியங்கள் எல்லாவற்றினும் கோடி புண்ணியத்தைத் தந்து பெயரும் புகழும் விளங்கச் செய்வது ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல். இது பாரதியின் பட்டறிவு. மகாகவி பாரதி இக்கருத்துக்களைத் தம் தீந்தமிழ்ப் பாட்டால் மக்களுக்கு உணர்த்திய ஆண்டு 1914.

மகாகவி பாரதி, "அன்ன யாவினும் புண்ணியங்கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" எனப் பாடுவதற்கு முன்பே ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலையைக் காரைக்குடியில் தோற்றுவித்த நகரத்தார்கள் போற்றத்தக்கவர்கள். இப்பள்ளியில் கல்வி பயின்ற தலைமாணாக்கருள் அழகப்பச் செட்டியாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியின் வெள்ளி விழாவை 1938-இல் வள்ளல் அழகப்பரே தலைமை தாங்கி நடத்தியுள்ளார். இப்பள்ளியின் ஒரு வளாகம் வள்ளல் அழகப்பரின் பெயர் தாங்கி நிற்கிறது. வள்ளல் அழகப்பரின் குடும்பத்தாரும் இப்பள்ளியைப் போற்றியிருப்பதற்குச் சான்றாக வள்ளல் அழகப்பர் நூற்றாண்டு விழா அரங்கம் விளங்குகிறது.

இப்பள்ளியில் பயின்ற மாணாக்கர்கள் பலர் சிறந்த அறிஞர் பெருமக்களாகவும் ஆன்றோர்களாகவும் சான்றோர்களாகவும் நீதியரசர்களாகவும் நல்லாசிரியர்களாகவும் பார்போற்றும் வகையில் உருவாகி உயர்ந்திருப்பது இப்பள்ளியின் கல்விப் பணிக்குச் சான்றாகும். இப்பள்ளி தோன்றிய நாள் முதல் இதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட நிருவாகிகள், தலைமையாசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள், அலுவலர்கள் ஆகிய அனைவரும் பாராட்டுதலுக்குரியவர்கள். கல்விப்பணியில் நூறாண்டுகள் சேவைபுரிந்து விழாக் காணும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலா மேல்நிலைப் பள்ளி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

சேது. சுடலைமுத்து

தேதி : 15-5-2013

(சேது. சுடலைமுத்து)



பழம்பெரும் பள்ளியின் புகழ்மிக்க வரலாறு

- செயலர் முத்து.பழநியப்பன்

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல் - பாரதியார்

<u>தோற்றம்:</u> காரைக்குடியில் நகரத்தார்கள் மிகுதியான அறப்பணிகளைச் செய்துள்ளனர். தொடக்கத்தில் பக்தியில் ஈடுபட்டு ஆலயத்திருப்பணிகளையே பெரும்பாலும் செய்து வந்த நகரத்தார்கள் ஒரு கட்டத்தில் கல்விப் பணி என்ற திசையில் தங்கள் கவனத்தைத் திருப்பினர். அவ்வாறு அவர்கள் செய்த கல்விப் பணியில் காலத்தால் முந்தியது நம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலையைத் தொடங்கியது ஆகும்.

1913-ல் திரு முத்த. வெ. வெள்ளையன் செட்டியார் அவர்கள் சொக்கலிங்க ஐயாவின் ஆலோசனையின் பேரில் இப்பள்ளியைத் தொடங்கினார்கள். கீழ ஊரணி வடகரையில் இருந்த திருவாசக மடத்தில் பள்ளி தொடங்கப்பெற்றது. ஒரு தொடக்கப் பள்ளியாகவே நம் பள்ளி தொடங்கப்பெற்றது என்றாலும் ஆங்கில முறைக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் பள்ளியாகத் தொடங்கப்பெற்றது. அக்கால கட்டத்தில் இந்த வட்டாரத்திலேயே ஆங்கிலமுறைக் கல்வி கற்றுக் கொடுக்கும் பள்ளி வேறு எதுவும் இல்லை.

பள்ளியில் மாணவர் சேர்க்கை நடந்து பள்ளி இயங்கத் தொடங்கியதும், திருவாசக மடத்திலிருந்து ஓரளவு பெரிய வளாகத்திற்கு மாற வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது செஞ்சையில் திரு. எஸ். ஆர்.எம். ஏ.ஆர். சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களுடைய கட்டிடத்திற்கு இடம் பெயர்ந்தது.

சொந்தக் கட்டிடமும், கட்டிடங்களின் வளர்ச்சியும்:

திவான்பகதூர் திரு.ஆவி.பழ.சிதம்பரம் செட்டியார் நம் பள்ளிக்கு ஒரு சொந்தக் கட்டிடத்தை நன்கொடையாகக் கட்டித்தர முன் வந்தார். காரைக்குடி நகரச் சிவன் கோவிலில் இருந்து, ஊருணியின் தென்கரையில் உள்ள ஒரு பெரிய இடத்தை, நகரத்தார்கள் தம் முயற்சியால், பள்ளிக்கு என்று பெற்றனர். அந்த இடத்தில் 1916 இல் அப்போதைய சென்னை மாகாண ஆளுநர் பென்ட்லாண்டு பிரபுவால் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டச் செய்து, கட்டிட வேலையைத் தொடங்கினார் திரு. ஆவி. பழ.சிதம்பரனார்.

இன்றளவும் பள்ளியின் பிரதானக் கட்டிடமாக அமைந்துள்ள இக்கட்டிடம் 1918-ல் கட்டி முடிக்கப்பெற்றது. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி டி.வி. சேசகிரி ஐயர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அது முதற்கொண்டு நம் பள்ளி சொந்தக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது.

நகரச் சிவன் கோவில் அறங்காவலர்கள் நம் பள்ளியின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து துணை நின்று உதவிடுவதை நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

பல பெருமக்களின் முயற்சியினாலும், பல அறமனச் செல்வர்களின் நன்கொடையாலும், பிரதானக் கட்டிடம் ஒன்றுடன் மட்டுமே இயங்கத் தொடங்கிய பள்ளி, இன்று பல்வேறு கட்டிடங்களோடும், விளையாட்டு மைதானத்தோடும், ஆய்வுக் கூடங்கள், கணினி அறைகளோடும் சிறப்பாக இயங்கி வருகிறது.

அவ்வாறு நன்கொடையாகக் கட்டிடத் தரப்பெற்ற கட்டிடங்கள் செய்துதரப் பெற்ற பிற வசதிகள் ஆகியவற்றின் பட்டியல் இவ்வரலாற்றின் இறுதிப் பகுதியில் இணைக்கப்பெற்றுள்ளது. ஓட்டுக் கட்டிடமாக இருந்த பிரதானக் கட்டிடத்தை நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் புதுப்பித்துத் தார்சுக் கட்டிடமாக மாற்றியமைத்துள்ளனர் நூற்றாண்டு விழாக் குழுவினர். அதற்கு நன்கொடை தந்து உதவிய நல்லுள்ளம் படைத்தோரின் பட்டியலும் இணைக்கப்பெற்றுள்ளது. பள்ளி வளர்ச்சிக் குழுச் செயலாளராக என்னோடு பணியாற்றும் திரு. S.பெரியணன் அவர்கள் பள்ளிக் கட்டிடங்கள் சிறப்புடன் அமைந்திட எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் நேரம் காலம் கருதாது செயலாற்றியதையும் இங்கே நன்றியோடு தெரிவித்திட வேண்டியது எனது கடமையாகும்.

தாளாளர்கள்:

பள்ளி தொடங்கிய காலத்தில் இருந்து 1956 ஆம் ஆண்டு வரை திரு. எம்.ஆர்.எம். எம். பெரியணன் செட்டியார் அவர்கள் பள்ளித் தாளாளராகப் பொறுப்பேற்றுப் பள்ளியைத் திறம்பட வழி நடத்தினார்கள்.

1956-ல் திரு.மெ.செ.மெ.மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் தாளாளராகப் பொறுப்பேற்றார்கள். ஆறு ஆண்டுகள் அவரது வழிகாட்டுதலிலும், நிருவாகத்திலும் சிறப்பாக நடைபோட்ட பள்ளிக்கு 1962-ல் அவர் தம் புதல்வர் திரு. மெ.செ.மெ.மெ. சொக்கலிங்கம் செட்டியார் தாளாளர் ஆனார்கள். பதினைந்து ஆண்டுகள் நம் பள்ளியைச் சிறந்த முறையில் அவர்கள் நிருவகித்து வந்தார்கள்.

1977 இல் அவர்தம் திருமகனாகிய, இப்போதைய தாளாளர் திரு. C. மெய்யப்பன் அவர்கள் பொறுப்புக்கு வந்தார்கள். இவர்கள் தாளாளராக இருக்கும்போது தான் நம் பள்ளி 1988-ல் பவள விழாக் கொண்டாடியது. தொடர்ந்து, அதுவரை உயர்நிலைப் பள்ளியாக இருந்த நம் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப் பெற்றதும் இவர்கள் பொறுப்புக் காலத்தில் தான். இப்போது நூற்றாண்டுவிழாவையும் அவர் தாளாளராக இருக்கும் போது தான் நாம் சீரோடும் சிறப்போடும் கொண்டாடுகிறோம்.

திரு. பெரியணன் செட்டியார் குடும்பமும், திரு. மெ. செ.மெ. குடும்பமும், நம் பள்ளி தோற்றுவிக்கப்பெற்ற நாளிலிருந்து இன்றுவரை பள்ளியின் மேம்பாட்டிற்குப் பொருளியல் முறையிலும், நிருவாக வழிகாட்டுதல் முறையிலும், இயன்ற எல்லா வகையிலும் துணைசெய்து வரும் குடும்பங்கள் ஆகும்.

தலைமை ஆசிரியர்கள்:

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி அதன் தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் திறமை, உழைப்பு இவற்றால்தான் விளைவும், முழுமையும் அடைய முடியும். நம் பள்ளியின் இப்போதைய தலைமை ஆசிரியர் பன்னிரண்டாவது தலைமை ஆசிரியர் ஆவார்.

பள்ளி தொடங்கிய ஆண்டில் இரு தலைமை ஆசிரியர்கள் அடுத்தடுத்துப் பொறுப்பேற்றுள்ளனர். 1913 ஜுலையிலிருந்து செப்டம்பர் வரை திரு. ஆர். மீனாட்சி சுந்தரம் அவர்களும், அக்டோபர் - நவம்பர் இரு மாதங்களில் திரு. ஆர். சுந்தராச்சாரியார் அவர்களும் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்கள்.

அடுத்து ஓராண்டுக் காலம் (1914 ஜுலை முதல் 1915 ஜுன் முடிய) திரு. ஆர். இராம சுப்பையர் அவர்களும், நான்காண்டுக் காலம் (1915 நவம்பர் முதல் 1919 பிப்ரவரி முடிய) திரு. எஸ்.ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களும் தலைமை ஆசிரியராக இருந்துள்ளார்கள்.

அதன் பின்னர் தலைமை ஆசிரியர் பொறுப்பினை ஏற்ற திரு. என்.எஸ்.வெங்கட்ராம ஐயர் 21 ஆண்டுக்காலம் பொறுப்பில் இருந்திருக்கிறார். (1.3.1919 - 1.4.1940) பதினொரு தலைமை ஆசிரியர்களுள் நீண்ட காலம் பொறுப்பு வகித்தவர் இவர்தான்.

இவரது காலம் நம் பள்ளியின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். இவரது கண்டிப்பு, திறமை, மாணவரிடம் அன்பு காட்டும் பாங்கு ஆகியவை குறித்து நம் பள்ளிப் பவள விழா மலரில் நம் பள்ளிப் பழைய மாணவர் திரு. டி.பார்த்தசாரதி ஐயங்கார் சிறப்பான பல செய்திகளைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். இவர் காலத்தில்தான் நம் பள்ளி வெள்ளிவிழாக் கொண்டாடியது.

அவரை அடுத்து ஆறாண்டுக்காலம் (மே.1940 - 8.6.1946) திரு. ஏ.இராமனுஜ ஐயங்கார் தலைமை ஆசிரியப் பொறுப்பில் இருந்தார். பின்னர் (1.3.1946 - 6.8.1954) திரு. கே.ஆர்.சீனிவாச ஐயர் பள்ளியை வழிநடத்திச் சென்றார்.

அதன் பின்னர், இப்பள்ளியில் பயின்ற மாணவராகிய திரு.வி.ஆராவமுது ஐயங்கார் தாம் பயின்ற பள்ளியிலேயே தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று, சிறப்பாகப் பணியாற்றினார். (1954 செப்டம்பர் - 1966 ஜுன்)

அவரையடுத்துத் திரு. எம்.கணேசன் அவர்கள் (1966-1978) 12 ஆண்டுகள் தலைமையாசிரியராக இருந்தார். மீண்டும் பழைய மாணவர் ஒருவர்

திரு. கே.எஸ்.மீனாட்சிசுந்தரம் (1978 - 1987) ஒன்பது ஆண்டுக்காலம் பள்ளியை நிருவகித்தார்.

அடுத்த பதினைந்து ஆண்டுகள் (1987 - 2002) பள்ளியின் பழைய மாணவர் திரு.சுப.பழநிவேலு பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். வெங்கட்ராம ஐயருக்குப் பிறகு (21 ஆண்டுகள்) நீண்ட காலம் (15 ஆண்டுகள்) பொறுப்பு வகித்தவர் இவர். வெங்கட்ராமையர் காலத்தைப் பள்ளியின் பொற்காலம் என்று சொன்னால், பழநிவேலு அவர்கள் காலத்தைப் பள்ளியின் மறுமலர்ச்சிக் காலம் எனப் பாராட்டலாம்.

இவர் காலத்தில்தான் பள்ளி பவளவிழாக் கொண்டாடியது; உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்ந்தது. இடைக் காலத்தில் தேர்வு முடிவுகள், மாணவர்களின் கல்வி நிலை, தரம் இவை பற்றியெல்லாம் மக்கள் மத்தியில் நம் பள்ளியின் புகழ் மங்கிக் கொண்டு வந்த காலத்தில் திரு. சுப.பழநிவேலு பள்ளியை நடத்திச் சென்ற முறை பள்ளியின் புகழை மீண்டும் ஓங்கச் செய்தது.

அவரையடுத்து 2002 ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்றவர் இப்போதைய தலைமை ஆசிரியர் திரு.முரு.வள்ளியப்பன் அவர்கள். அண்மையில் தமிழக அரசு இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்திருப்பது இவர் தம் பணியின் சிறப்பை உணர்த்தும் சான்று ஆகும். மிக அமைதியாய்ச் செயல்படுபவர், எல்லோரோடும் இணைந்து செயல்படுபவர்.

பழைய மாணவர் சங்கம்:

1927 இல் நம் பள்ளியின் பழைய மாணவர் சங்கம் தொடங்கப் பெற்றது. அதன் முதல் தலைவர் திரு.வி.ஆர்.எம்.செட்டியார் என இலக்கிய உலகில் ஏற்றத்துடன் விளங்கிய திரு. வி.ஆர்.முத்துக்கருப்பன் செட்டியார் ஆவார். இச்சங்கம் பள்ளியின் வளர்ச்சியில் பல்லாற்றானும் துணை நின்றது, நின்று வருகிறது என்பது குறிப்பிடப்பட வேண்டிய செய்தி ஆகும்.

1938 ல் திரு. A.V.மெய்யப்ப செட்டியார் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும், வள்ளல் Dr.அழகப்ப செட்டியார் அச்சங்கச் செயலாளராகவும் இருந்தபோது அவர்களது சீரிய முயற்சியால் நம் பள்ளியின் வெள்ளிவிழா அப்போது சிறப்புடன் கொண்டாடப்பெற்றது

மனோரஞ்சனி சபா என்ற நாடகக் குழு ஒன்றை அமைத்து, சுற்று வட்டாரங்களில் நாடகங்கள் நடத்தி, கிடைத்த நிதியினைப் பள்ளி வளர்ச்சிக்கு வழங்கி உதவிய சங்கம் இது. இதன் செயல்பாடுகள் குறித்து நம் பள்ளிப் பவள விழாமலரில் திரு. டி. பார்த்தசாரதி ஐயங்கார் தம் கட்டுரையிலும், என்னுடைய செயலர் அறிக்கையிலும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

1953 லிருந்து சிறிது காலம் இயங்காமல் இருந்த பழைய மாணவர் சங்கம் 1986 இல் புத்துயிர் பெற்றது. அப்போது பொறுப்பேற்றுக் கொண்ட செயல்திறம் மிக்க பழைய மாணவர் சங்க தலைவர் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்களும், செயலர் பொறுப்பேற்ற நானும் இன்றளவும் சங்கத்தைச் சிறப்புற நடத்தி வருவதோடு, பள்ளி வளர்ச்சிக்கும் பல்லாற்றானும் துணை நின்று வருகிறோம்.

மேல்நிலைக் கல்வி அமைப்புக்குழு:

பள்ளி வளர்ச்சிக்குழு தலைவர் திரு. A. திருநாவுக்கரசு, முன்னர் செயலராக இருந்து பள்ளி வளர்ச்சியில் கண்ணாக இருந்து செயல்பட்ட மறைந்த திரு. சா.நா. நாராயணன் செட்டியார், இன்றளவும் பள்ளி வளர்ச்சியையே தன் உயிர்மூச்சாய்க் கருதிவரும் கம்பார் திரு.N.முத்தையா செட்டியார், திட்டமிட்டுச் செயல்பட்டுவரும் செயலர் திரு. S.பெரியணன் ஆகியோரின் பணி அளவிடற்கரியது.

நம் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக இயங்கிக் கொண்டிருந்த நிலையில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த வேண்டும் என்பதற்காக அமைக்கப்பெற்ற குழுவே மேல்நிலைக் கல்வி அமைப்புக்குழு. (S.M.S.Vidyasala Higher Secondary Course Organising Committee)

இக்குழு பள்ளியை நிலை உயர்த்தும் பணியைத் திறம்படச் செய்து முடித்தபின்னர், தொடர்ந்து பள்ளியின் நிருவாகத்திற்கும், நிதிமேம்பாட்டிற்கும் பல்வேறு ஆக்கப் பணிகளை இன்றளவும் திறம்படச் செய்து கொண்டிருக்கிறது.

1. <u>பள்ளியில் பணியாற்றிய பெருமைமிகு ஆசிரியர்கள்:</u>

வை.கணபதி ஸ்தபதி,

முத்தமிழறிஞர். தமிழண்ணல்

கவிஞர் முடியரசன்

பாவலர் மணி ஆ.பழநி போன்றவர்கள்

2. <u>பள்ளியில் பயின்ற பெருமைமிகு பழைய மாணவர்கள்:</u>

வள்ளல், டாக்டர். அழகப்ப செட்டியார்

ஏவி.எம்.மெய்யப்ப செட்டியார்

கொத்தமங்கலம் சுப்பு

நீதியரசர். பக்கீர் முகமது,

நீதியரசர். மெ. சொக்கலிங்கம்

இயக்குனர். எஸ்.பி. முத்துராமன்

இயக்குனர். பஞ்சு அருணாசலம்

இயக்குனர். இராம. நாராயணன்

சொல்லின் செல்வர். பழ. கருப்பையா

மாணிக்கதாகூர் எம்.பி.,

3. <u>பள்ளியின் தேர்ச்சி விகிதம்:</u>

சராசரி மாணவர்களைக் கொண்டு தொடர்ந்து பல ஆண்டுகளாக 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் 100% - 99% என தேர்ச்சி பெற்று நகரிலேயே முதன்மையான பள்ளியாக விளங்கி வருகிறது.

பள்ளியின் சிறப்பான தேர்ச்சிக்கு முழுக் காரணமாய் விளங்கிடும் பள்ளி ஆசிரியப் பெருமக்களின் அயராத பணிக்கு நிர்வாகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றி.

நூற்றாண்டு விழா:

1913 இல் தொடங்கப் பெற்ற நம் பள்ளி இந்த ஆண்டு 2013 இல் நூறாண்டுகளை நிறைவு செய்கிறது. அதனைச் சிறப்புறக் கொண்டாடும் பொருட்டு நூற்றாண்டு விழாக்குழு ஒன்று அமைக்கப்பெற்று, இக்குழுவின் சீரிய முயற்சியால் பெருமளவில் நன்கொடை திரட்டப்பெற்று பள்ளிக் கட்டிடங்கள் சீரமைப்பு மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டுதல் விளையாட்டு மைதானம் சீரமைத்தல், நூற்றாண்டு விழாவினைச் சிறப்புறச் கொண்டாடுதல் எனப் பல ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்றுவருகின்றன.

பள்ளியின் வளர்ச்சிக்கு எங்களோடு எப்பொழுதும் துணை நிற்கும் திரு. SP.S.RM.SP. ராமசாமி திரு. S.M.ARN.AR. நாராயணன் செட்டியார், திரு. SP.M.N.VR. சுப்பிரமணியம், திரு. C.RM.அருணாசலம் ஆகியோரின் பங்களிப்பினையும் இங்கு நன்றியோடு நினைவு கூர்வது எனது கடமையாகும்.

நூற்றாண்டு விழா நினைவாக அழகிய மலர் பேராசிரியர் Dr.கரு.முத்தையா அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்படுகிறது. பதிப்பாசிரியரின் பணிக்கு நெஞ்சார்ந்த நன்றி. சென்ற பவளவிழா மலருக்கும் அவரே பதிப்பாசிரியராக இருந்தார்.

நான் பயின்று என்னை ஆளாக்கிய பள்ளியில் பழைய மாணாக்கர் சங்கச் செயலர், பள்ளி வளர்ச்சிக் குழுச் செயலர், பள்ளி நூற்றாண்டு விழாக்குழுச் செயலர், மலர்க்குழுச் செயலர் என பல பொறுப்புக்களில் நான் பணியாற்றிட வாய்ப்பளித்திட்ட பள்ளி நிர்வாகத்தினர் அனைவருக்கும் மகிழ்வான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி இருக்கும் நம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்தியாசாலை மேல்நிலைப் பள்ளி இன்னும் பல சிறப்புகளைப் பெற்று, பல்லாண்டு பல்லாண்டு காலம் சீரிய கல்விப் பணியை மேற்கொள்ள வேண்டும் என அனைவரும் அன்னை மீனாட்சி சுந்தரேசுவரர் அருளை இறைஞ்சுவோமாக..



அரும்புகழ் கொண்டு வாழ்க

பாவலர்மணி. **ஆ. பழநி**
முன்னாள் தமிழாசிரியர்
மீ.சு. மேல்நிலைப் பள்ளி

1. ஊருளார் கல்வித் தேவைக்
  குதவினார் இந்த நாட்டில்
ஆருளார் என்று கேட்பின்
  அருளுளார், நாட்டுக் கோட்டைப்
பேறுளார், நகரத் தாராம்
  பெயருளார், இவரை யன்றி
வேறுளார் ஒருவர்க் காணேன்,
  வென்றிகொள் வாழ்க்கை யாளர்.

2. மீனாட்சி சுந்த ரேசர்
  வெல்பெயர் கொண்ட பள்ளி
நானாட்சி கொஞ்ச காலம்
  நடத்திய துண்டு; அந் நாளில்
கோனாட்சி முறைமை போல
  அதிகாரக் கொடுமை இல்லை.
வானாட்சி சுதந்தி ரத்தின்
  வடிவந்தான் இந்தப் பள்ளி.

3. சுதந்திரச் சிந்த னைப்பூச்
  சொரிகின்ற பசுமைச் சோலை;
விதம்படும் அறிவுத் தேனை
  விருப்புடன் அருத்தும் பள்ளி;
பதம்படச் சிந்தித் தற்கோர்
  பட்டறை நடத்தும் கூடம்;
இது இந்தப் பள்ளிக் குற்ற
  இயல்பென்றால் முற்றும் உண்மை.

4. தூண்டிய சுடராய்ப் பாதத்
துணைவரும் கைவி ளக்காய்
ஈண்டுளார் யாவ ருக்கும்
இணையிலா அறிவு நல்கி
ஆண்டொரு நூறு கண்ட
ஆலயம் இந்தப் பள்ளி;
மூண்டெழும் அறியா மைக்கு
வைத்தது முற்றுப் புள்ளி.

5. தோற்றத்தால் முதன்மைப் பள்ளி;
துலக்கிடும் கல்வி நல்கும்
ஏற்றத்தி னாலும் கூட
இன்றிது முதன்மைப் பள்ளி;
சாற்றிடும் முக்கா லத்தும்
சரித்திரம் படைத்து ஞாலம்
போற்றிடும் மானு டத்தைப்
புதுக்கிய புகழ்சால் பள்ளி

6. கற்றவ ராலும் பள்ளி
புகழினைக் கண்ட துண்டு;
மற்றிங்கே கற்பித் தாரும்
மன்புகழ் சேர்த்த துண்டு;
நற்றவ மாகப் பள்ளி
நாடொறும் பேணிக் காத்த
பெற்றியால் நகரத் தாரும்
நெடும்புகழ் சேர்த்த துண்டு.

7. முப்பெரும் புகழைத் தாங்கி
முன்னெழுந் துயர்ந்த தான
இப்பெரும் பள்ளி நூறு
கண்டதே என்னும் போது
செப்பிடற் கியலா இன்பச்
சிலிர்ப்பிலே மூழ்கு கின்றேன்;
அப்பினாற் சூழ்ந்த வையத்
தரும்புகழ் கொண்டு வாழ்க.



பொன்முடி பதிப்பகம்

நிர்வாகி :
"முத்தமிழ்ப் பேரறிஞர்" "கவிஞர்கோ" "கயிலைமணி"
"காசிஸ்ரீ" "பொற்கிழிக் கவிஞர்" **அரு. சோமசுந்தரன் MA., B.T.,**

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு வாழ்த்து

ஓங்காரக் குடிஎன்றும் உயர்காரைக்
குடி என்றும் உயர்ந்த ஊரில்
பாங்கான அழகப்பர் முன்னாளில்
ஆர்வமுடன் படித்த பள்ளி
தேங்காத செல்வமுடன் தேங்குகிற
கல்வியிலே தேர்ந்த பள்ளி
ஓங்கிவளர் மீனாட்சி சுந்தரேசர்
மேல் பள்ளி உயர்ந்து வாழ்க!





காலத்தால் நிலைப்போம்

குழந்தைக் கவிஞர் **செல்லகணபதி**

கல்வியைக் கொடுப்ப தென்றால்
கண்களைக் கொடுப்ப தாகும்
கல்வியைக் கொடுப்ப தென்றால்
கருத்துகள் பதிப்ப தாகும்
கல்வியைக் கொடுப்ப தென்றால்
கருணையைச் சுரப்ப தாகும்
கல்வியைக் கொடுப்ப தென்றால்
காலத்தால் நிலைப்ப தாகும்

காரைக்குடி நகரத் தார்கள்
கட்டிய பள்ளிக் கூடம்
சீரிய பணியால் கல்வி
செழித்தது ஊர் முழுக்க
வேரினில் நீரை ஊற்றி
விளைவினைப் பெருக்கு தல்போல்
கூர்மையாய் அறிவைத் தீட்டும்
கூடமாய் வளர்ந்த பள்ளி

மீனாட்சி சுந்த ரேசர்
மேல்நிலைப் பள்ளி இன்று
தானாட்சி செய்து நூறைத்
தாண்டிடும் இனிய நன்னாள்
வானாட்சி பகல வன்போல்
வளரொளி பாய்ச்சும் பள்ளி
கூனான எண்ணம் கொண்டோர்
கோபுரம் போலு யர்ந்தார்

நிலைத்ததாம் பணியைச் செய்யும்
நீள்புகழ் பள்ளிக் கூடம்
நிலைத்ததே நூறாண் டாக
நீளுமே பல்லாண்டு இன்னும்
அலைகளோ ஓய்வ தில்லை
அதுபோல இந்தப் பள்ளி
கலைகளைக் கற்பிக் கின்ற
கடமையில் ஓய்வ தில்லை

அழகப்பர் படித்த பள்ளி
அவரிங்கே படித்த தால்தான்
அழகப்பர் கல்விச் சாலை
ஆனது பலநூறா
அழகான திரைப் படங்கள்
ஆக்கிய ஏ.வி.எம் மும்
பழகினார் கல்வி இங்கே
பார்புகழ் மனிதர் ஆனார்

மேல்நிலைப் பள்ளி யான
மேன்மைகொள் எஸ்.எம்.எஸ்.வீ
நால்வகைத் திசையி னோர்க்கும்
நலமிக்க கல்வி தந்து
ஆல் போல விரிந்த துண்டு
அதன் அடி கோடி மக்கள்
கால்கொண்ட கல்வி யாலே
கண்ணியம் பெற்ற துண்டு

வந்ததே நூற்றாண் டின்று
வாழ்த்துவோம் நகரத் தாரை
தந்ததாம் கல்வி யாலே
தன்நிலை உயர்ந்த மக்கள்
சிந்தனை வளத்தால் அன்பைச்
செம்மையாய்ப் போற்று கின்றார்
சொந்தமாய் உறவாய்ப் பள்ளி
சொர்க்கமாய் ஆன தென்ன

வந்தனை செய்வோம் மேலோர்
வழங்கினார் கல்விக் கூடம்
தந்தனர் தம்மை அந்தத்
தரம்மிக்க கல்விக் காக
நிந்தனை தவிர்த்து அன்பை
நெகிழ்ச்சியாய்ச் சொரியக் கல்விச்
சிந்தனை மாற்றம் செய்த
செயலினை வாழ்த்து வோமே



Dr. MEENA MUTHIAH

Kumara Rani of Chettinad


19.06.2013

MESSAGE

May the Almighty Bless the prestigious institution
on its centenary year celebration.

Wishing the school to grow from strength to strength.

(Meena Muthiah)



(பள்ளி வரலாற்றின் இணைப்பு)

நன்கொடையாளர் பட்டியல்

வ.எ	கட்டிடம் / வசதி	கொடையாளர்	திறப்பாளர்	நாள்
1.	பிரதானக் கட்டிடம்	ஏ.வி.பி.எல். சிதம்பரம் செட்டியார்	நீதியரசர் டி.வி.சேசகிரி ஐயர்	6.7.1918
2.	இலக்குமி மாளிகை	அ.மு.க.மு.சித. முத்துக்கருப்பன் செட்டியார்- இலக்குமி ஆச்சி	இராசா சர் மு.அ. முத்தையா செட்டியார்	11.6.1964
3.	ஏ.வி.எம். மேனா கட்டிடம்	ஏ.வி.எம். அறக் கொடை நிறுவனம்	ஏ. சி. முத்தையா	23.10.1988
4.	கம்பார்.நா. நினைவு ஆய்வுக் கூடம்	கம்பார்.பழ.நா. முத்தையா மற்றும் குடும்பத்தினர்	ஏ. சி. முத்தையா	12.01.1990
5.	பெரியணன் செட்டியார் - பார்வதி ஆச்சி கட்டிடம்	பெரி. சொக்கலிங்கம் மற்றும் குடும்பத்தினர்	ஏ.எம்.எம். அருணாசலம்	12.01.1990
6.	கணினி மையம்	ஸ்ரீ ஜோதி அறநிலை Dr. ஏ.அழகப்பன் Dr. வி. வெங்கடாசலம்	ஏ. அருணாசலம் (ஓய்வு பெற்ற வருமான - வரி ஆணையர்)	12.01.1990
7.	இலக்குமி மாளிகை - முதல் மாடி	மு. சிதம்பரம் மற்றும் பவளவிழாக்குழு.	நீதியரசர் எஸ். நடராஜன்	12.01.1990
8.	எம்.ஏ. சிதம்பரம் கட்டிடம்	ஏ.சி. முத்தையா	உச்ச நீதிமன்ற நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன்	12.01.1990
9.	மாணவர் கழிப்பறை	சுழற்குழு	சுழற்குழு 3210 மாவட்ட ஆளுநர் ஏ.வி.ஆர்.எம்.வி சங்கரநாராயணன்	17.03.1992
10.	இந்தியன் வங்கி கட்டிடம்	இந்தியன் வங்கி	எம். கோபால கிருஷ்ணன் (இந்தியன் வங்கித் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்)	20.12.1994

வ.எ	கட்டிடம் / வசதி	கொடையாளர்	திறப்பாளர்	நாள்
11.	ஏ.எம்.கே.எம்.சிடி.எம். சிதம்பரம் நினைவு கட்டிடம்	ஏ.எம்.கே.எம்.சிடி.எம் சிதம்பரம் மற்றும் குடும்பத்தினர்	நீதியரசர் எஸ். நடராசன்	19.12.1995
12.	ஆத்தங்குடியார் கட்டிடம்	எஸ்.பி.எம்.என்.வி.ஆர் எஸ்.பி.எஸ்.எஸ்.பி எஸ்.பி.எஸ்.ஆர்.எம்.எஸ்.பி குடும்பத்தினர்	நீதியரசர் அரு. இலக்குவன்	08.09.1996
13.	மாணவர்க்குக் குடிநீர் வசதி	காரைக்குடி அரிமா சங்கம்	அரிமா 324/பிசி, மாவட்ட ஆளுநர் டி. பாண்டியராஜன்	30.12.2002
14.	கணினி மையக் கட்டிடம்		ஏ.சி, முத்தையா	13.11.2005
15.	சத்திவள்ளி கட்டிடம்	சத்தி.ஏ.திருநாவுக்கரசு	நீதியரசர் எம். சொக்கலிங்கம்	23.04.2008
16.	ஆர்.எம்.அழகப்ப செட்டியார் நினைவு கட்டிடம்	என். முத்தையா மற்றும் மற்றும் குடும்பத்தினர்	நீதியரசர் எம். சொக்கலிங்கம்	23.04.2008
17.	சுத்திகரிக்கப் பெற்ற குடிநீர் வசதி	அரிமாசங்கம்	அரிமா 324/B3 மாவட்ட ஆளுநர் ஆர்.கே. தங்கராஜ்	11.01.2009
18.	பழைய மாணவர் சங்கக் கட்டிடம்	பழைய மாணவர் சங்கம்	இயக்குநர். சுப. முத்துராமன்	12.06.2009
19.	ஆழ்துளைக் கிணறு	காரைக்குடி ஹெரிட்டேஜ் சுழற்குழு		09.09.2009
20.	ஜானகிஆச்சி அறநிலை கட்டிடம்	கம்பார். பழ. நா முத்தையா செட்டியார் மு. நாராயணன்	கரு. முத்து.தி கண்ணன்	05.03.2010
21.	வள்ளல் அழகப்பர் நூற்றாண்டுவிழா அரங்கம்	திருமதி. உமையாள் இராமநாதன்	சேது. சுடலைமுத்து (அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர்)	08.02.2011
22.	சுத்திகரிக்கப்பெற்ற குடிநீர்த் திட்டம்	காரைக்குடி அரிமா சங்கம்	அரிமா 324/BC மாவட்ட ஆளுநர் பி.எஸ். நந்த குமார்	23.01.2012

பிரதானக் கட்டிடத்தைப் புதுப்பிக்க உதவிய நன்கொடையாளர் பட்டியல்

வ.எ	கட்டிடம் / வசதி	கொடையாளர்
1.	அலுவலக அறை	எஸ்.பி.எம்.என்.வி.ஆர் நாராயணன்
2.	4 வகுப்பறைகள்	முத்த.வெ.சொ. நாச்சியப்ப செட்டியார் குடும்பத்தினர்
3.	1 வகுப்பறை	தாளாளர் சி. மெய்யப்பன்
4.	1 வகுப்பறை	நீதியரசர். மெ. சொக்கலிங்கம் பசுமைத் தீர்ப்பாயம், தென்மண்டலம்
5.	1 வகுப்பறை	எஸ்.ஆர்.எம்.எஸ். நாராயணன் செட்டியார்
6.	1 வகுப்பறை	சி.ஆர்.எம்.அருணாசலம்
7.	1 வகுப்பறை	எஸ்.பி.எம்.என்.வி.ஆர். சுப்பிரமணியன் செட்டியார்
8.	1 வகுப்பறை	ஏ.எல்.எம்.ரவி.
9.	விளையாட்டரங்கம் (கூடைப்பந்து மைதானம், கால் பந்து மைதானம், பார்வையாளர் காலரி, நடையாளர் பாதை)	டாக்டர். வி. வெங்கடாசலம்
10.	ஸ்ரீ வித்தியார்த்தி விநாயகர் கோவில்	எஸ். பெரியணன்

(முத்து. பழநியப்பன்)



செயலர் அறிக்கை

- S.L.N.S. பெரியணன்

ஒழுக்கம் கல்வியின் விழுப்பம் என்ற நம் பள்ளியின் குறிக்கோளுக்கு இணங்க நம் பள்ளி 100 ஆண்டுகள் நடந்து வந்த பாதையில் நம் பள்ளி மாணவர்கள் சாதித்த சாதனைகள், சூட்டிய வெற்றி மாலைகள் ஆகியவற்றை எனது அறிக்கையில் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

நம் பள்ளியில் பயிலாதவனாக இருந்தாலும் என்னை நம் பள்ளியின் பள்ளி வளர்ச்சிக் குழுவில் (Organising Committee) செயலராக இணைத்து எனக்கும் வாய்ப்பு அளித்த உயர்திரு. சா. நாராயணன் செட்டியார் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து, எனக்குத் தக்க ஆலோசனைகள் தெரிவித்து உதவிடும் பள்ளித் தாளாளர். திரு.C. மெய்யப்பன் அவர்களுக்கும், திரு.சத்தி. A. திருநாவுக்கரசு அவர்களுக்கும், செயலர். திரு. முத்து. பழநியப்பன் அவர்களுக்கும், பொருளாளர் திரு. கம்பார் முத்தையா செட்டியார் அவர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தாய்ப்பான நம் பள்ளியின் 100 ஆண்டுகளில் மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் நான்கு அம்சங்களான கல்வி, அறிவியல், கலை, விளையாட்டு ஆகிய நான்கு துறைகளிலும் நம் பள்ளி சாதனைகள் பல புரிந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளின் சாதனைகள் சில :

கல்வி :

1. கடந்த 20 ஆண்டுகளாக நம் பள்ளி 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமான தேர்ச்சியைப் பெற்றிருக்கிறது.

2. 2003 ஆம் ஆண்டில் அருண்சங்கர் என்ற மாணவர் 488 மதிப்பெண்கள் எடுத்து சிவகங்கை மாவட்டத்தில் முதன்மை பெற்றார்.

3. நம் பள்ளி கடந்த 2012 - 2013 கல்வியாண்டில் +2 அரசுப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண்ணாக 1121/1200 பெற்று 99.3 தேர்ச்சி சதவீதமும், 10 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண்ணாக 484/500 பெற்று 100 சதவீதத் தேர்ச்சியும் பெற்றுத் திகழ்கிறது. தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக 10 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 100 சதவீதத் தேர்ச்சி பெற்று, காரைக்குடியில் ஸ்டேட் போர்டு பள்ளிகளில் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது.

ஆங்கில வழி வகுப்புகள் (English Medium) நம் பள்ளியில் சுயநிதி அடிப்படையில் (Self Financing Schemeல்) 2004-05 கல்வி ஆண்டில் தொடங்கப் பெற்றது. இதுவரை 10ம் வகுப்பில் தொடர்ந்து 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆங்கில வழியில் இன்று வரை 199 மாணாக்கர்கள் பயின்றுள்ளார்கள்.

இன்று நம் பள்ளியில் ஆங்கில வழியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை 403 மாணாக்கர்களும், தமிழ் வழியில் 1214 மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர். 45 ஆசிரியர்களும் 9 அலுவலர்களும் நம் பள்ளிக்குப் பெருமை சேர்க்கின்றனர்.

கலை இலக்கியம் :

1. 1993 ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக நடைபெற்ற பள்ளிமாணவர்க்கான பேச்சுப் போட்டியில் சிவகங்கை மாவட்டத்திலிருந்து நம் பள்ளி மாணவர் எஸ். குமரேசன் தேர்ந்தெடுக்கப் பெற்று இறுதிப்போட்டியில் சென்னையில் பங்கு பெற்றார்.

2. 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மாநில அளவில் நடத்தப்பெற்ற பள்ளி மாணவர்க்கான பேச்சுப் போட்டியில் நம் பள்ளி மாணவர் கண்ணப்பன் முதலிடம் பெற்றார்.

3. 2005 ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பாகத் தஞ்சையில் நடத்தப்பெற்ற மாநில அளவிலான சுற்றுச்சூழல் பேச்சுப்போட்டியில் நம் பள்ளி மாணவர் முத்துவேல் இரண்டாமிடம் பெற்று 2000 ரூபாய் பரிசு பெற்றார்.

4. 2008 ஆம் ஆண்டு நம் பள்ளி ஆசிரியர் எஸ்.வி. முத்துக்குமார் எழுதி இயக்கிய 'எயிட்ஸ் எரிமலை' என்னும் நாடகம், மாநில அளவிலான நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றது.

5. 2011 -ல் தமிழக அரசின் சார்பாக நடத்தப்பெற்ற மாநில அளவிலான பள்ளி மாணவர்களுக்கான கலை இலக்கியத் தனித்திறன் போட்டிகளில் நம் பள்ளி மாணவர் அரவிந்தன் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசும் ஜெயசூர்யா என்ற மாணவர் நாட்டுப்புற நடனத்தில் இரண்டாம் இடமும் பெற்றனர்.

6. நம் பள்ளி மாணவர்கள் திலீபன், அருண்குமார், அர்ஜுன் குமார் ஆகியோர் சுட்டி விகடன் வார இதழால் சுட்டி ஸ்டார்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருடம் மாணவ நிருபர்களாகப் பணியாற்றிப் பள்ளிக்குப் பெருமை சேர்த்தனர்.

7. நம் பள்ளி அசிரியர் சுந்தரராமன் எழுதி இயக்கிய 'இருக்கையை இழக்கும் இயற்கை' என்னும் நாடகம் மாநில அளவிலான நாடகப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றது.

8. நம் பள்ளி மாணவன் திலீபன் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்தமைக்காகத் தமிழக முதல்வரின் 10,000 ரூபாய் பரிசு பெற்றார்.

9. 2012 ஆம் ஆண்டில் "Gandhi Today" என்ற இணைய தளம் நடத்திய மகாத்மா காந்தி குறித்த கட்டுரைப் போட்டியில் நம் பள்ளி மாணவர் சிவச்சந்திரன் முதலிடம் பெற்று 1000 ரூபாய் பரிசு பெற்றார்.

10. சிவகங்கை மாவட்டத்தின் பாரம்பரியச் சின்னங்கள் என்ற தலைப்பில் நம் பள்ளி அறிவியல் ஆசிரியர் P. செந்தில் குமார் சமர்ப்பித்த கட்டுரை மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று மாநில அளவில் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

11. தமிழக அரசின் சார்பாக ஆண்டுதோறும் நடத்தப்பெறும் பள்ளி மாணவர்க்கான கலையிலக்கியத் தனித்திறன் போட்டிகளில் சிவகங்கை மாவட்ட அளவில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நம் பள்ளி முதன்மை பெற்றுத் திகழ்கிறது. மூன்று ஆண்டுகளிலும் மாதிரிப் பாராளுமன்றத்தில் (MOCK PARLIAMENT) முதலிடம், இரண்டாமிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

12. கடந்த கல்வியாண்டில் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்கள் பங்குபெற்று, திருமயம் St. Joseph Polytechnic கல்லூரியில் நடந்த கலை இலக்கியப் போட்டிகளில் அரசுப்பள்ளிகள் பிரிவில் நம் பள்ளி முதலிடம் பெற்றுத் திகழ்ந்தது.

அறிவியல் :

1. FIT - JEE QUIZ சார்பாக நடத்தப்பட்ட அகில இந்திய அளவிலான வினாடிவினாப் போட்டியில் நம் பள்ளி மாணவர்கள் 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் என 9 பதக்கங்கள் பெற்றனர்.

2. சண்முகநாதன் பொறியியல் கல்லூரியும், ISRO நிறுவனமும் இணைந்து நடத்திய அறிவியல் கண்காட்சியில் நம் மாணவர்களின் படைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு மாணவர்கள் ISRO சென்று வரும் வாய்ப்பைப் பெற்றனர்.

3. "பசுமை உரமாம் அசோலா" வளர்த்து விவசாயிகளுக்கு இலவசமாய் வழங்குகிறது நம் பள்ளி என்ற செய்தியைப் பசுமை விகடன் என்னும் வார இதழ் பாராட்டிக் கட்டுரை வெளியிட்டது.

4. அசோலா கட்டுரையைக் கண்ணுற்ற I GRANDEE நிறுவனம், நம் பள்ளியின் மாணவர் நலனுக்காக ஒரு ஸ்மார்ட் கிளாஸ்ரூம்க்கான தளவாடங்களான CPU, 42 Inch LCD TV, KEYBOARD With Mouse, UPS, School Management System Software ஆகியவற்றை 2½ லட்சம் ரூபாய் செலவில் வழங்கியுள்ளது.

5. அழகப்பா பொறியியல் கல்லூரியில் சுற்றுச் சூழல் குறித்த கண்காட்சியில் POWER POINT PRESENTATION-ல் நம் பள்ளி மாணவர் பதினொன்றாம் வகுப்பைச் சேர்ந்த மணிகண்டன் முதலிடம் பெற்றார்.

6. அழகப்பா பல்கலைக் கழகமும், ரோட்டரி சங்கமும் இணைந்து நடத்திய அறிவியல் கண்காட்சியில் நம் பள்ளி மாணவரின் Automatic Switch படைப்புக்கு 10,000 ரூபாய் பரிசு கிடைத்தது.

7. அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழ் அறக்கட்டளையின் தலைவர் அழகப்பா ராம் மோகன் அவர்கள் நம் பள்ளியில் பயிலும் மாணவர்கள் இயற்பியலில் A to Z தெரிந்து கொள்ளும் வகையில் தமிழில் DVD க்கள் புத்தகங்கள் LCD TV, DVD PLAYER, UPS ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

8. **Leaders Matriculation** பள்ளியில் நடைபெற்ற State Level Science Exhibition-ல் நம் பள்ளி மாணவர்களின் படைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டு 10,000 ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப் பெற்றது.

விளையாட்டு :

1. 2005 - 2006 கல்வியாண்டில் மாநில அளவிலான 800 மீட்டர் நீச்சல் போட்டிகளில் நம் பள்ளி மாணவர் மணிகண்டன் மூன்றாமிடம் பெற்றார்.

2. 2006 - 2007 கல்வியாண்டில் நம் பள்ளி மாணவர் சி. சரவணன் 15 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் தமிழ்நாடு கிரிக்கெட் அணியில் விளையாடும் தகுதி பெற்றார்.

3. 2007 - 2008 கல்வியாண்டில் நம் பள்ளி மாணவர் சி. விக்னேஷ் மாநில அளவிலான Road Cycling போட்டியில் மூன்றாமிடம் பெற்றார். இதே ஆண்டில் நம் பள்ளியின் Badminton Team மாநில அளவில் பங்கேற்றது.

4. 2008 - 2009 கல்வியாண்டில் நம் பள்ளி மாணவர் சி. விக்னேஷ் மாநில அளவிலான Road Cycling போட்டியில் மூன்றாமிடம் பெற்றார். இதே மாணவன் 2009 - 2010 கல்வி ஆண்டில் Road Cycling போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுப் புனேயில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் தமிழ்நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டு நான்காமிடம் பெற்றார்.

5. 2011,12,13 ஆகிய கல்வியாண்டில் செஸ், Road Cycling, நீச்சல் முதலிய போட்டிகளில் மண்டல அளவில் நம் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்றனர்.

இதுவரை நம் மாணவர்கள் விளையாட்டுத் துறையில் 10 தங்கம், 80 வெள்ளி, 160 வெண்கலம் என 250 பதக்கங்களை மொத்தத்தில் பெற்றுள்ளனர்.

பிரதானக் கட்டிடம் :

இந்தப் பள்ளியின் பிரதானக் கட்டிடம் காரைக்குடி திரு. ஆவி.பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களின் நன்கொடையால் 20.09.1916 அன்று சென்னை மாகாணக் கவர்னர் லார்டு பென்ட்லாண்ட் அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று 06.07.1918 அன்று மேதகு நீதிபதி டி.வி.சேஷகிரி அய்யர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

இலக்குமி மாளிகை கட்டிடம் :

01.06.1964 ஆம் தேதியன்று இலக்குமி மாளிகை உள்அரங்கம் (கீழ்தளம்) காரைக்குடி திரு.அ.மு.க.மு.சித. முத்துக்கருப்பன் செட்டியார் - திருமதி இலக்குமி ஆச்சி அவர்களின் நன்கொடையால் உயர்திரு.அ.மு.மு. முருகப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் உயர்திரு. ராஜா சர்.மு.அ. முத்தையா செட்டியார் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

12.01.1990 ஆம் தேதியன்று இலக்குமி மாளிகை கட்டிட மேல்தளத்தில் ஐந்து வகுப்பறைகள் காரைக்குடி திரு.அ.மு.க.மு.சித. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களின் மகன் திரு.எம். சிதம்பரம் செட்டியார் அவர்களின் நன்கொடையால் கட்டப்பெற்று மாண்புமிகு நீதிபதி எஸ். நடராஜன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

வள்ளல் அழகப்பர் வளாகம் :

23.10.1998 ஆம் தேதி அன்று நமது பள்ளியின் பழைய மாணாக்கர் AVM. மெய்யப்பச் செட்டியார் அவர்களின் நினைவாக AVM. சாரிட்டிஸ் நன்கொடையால் AVM. மேனா பிளாக் உயர்திரு. டாக்டர். ஏ.சி. முத்தையா அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

12.01.1990 ஆம் தேதி அன்று கம்பார் நாவன்னா மெமோரியல் சயன்ஸ் லேபரட்டரி. மேற்படி மேனா பிளாக்கில் திரு. கம்பார் நாவன்னா குடும்பத்தினர் நன்கொடையால் டாக்டர். AC. முத்தையா அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

12.01.1990 அன்று உயர்திரு. டாக்டர். AC. முத்தையா செட்டியார் அவர்களின் நன்கொடையால் MA.சிதம்பரம் பிளாக் உச்சநீதிமன்ற நீதியரசர் எஸ். இரத்தினவேல் பாண்டியன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

12.01.1990 அன்று காரைக்குடி உயர்திரு. M.RM.S.PR. சொக்கலிங்கம் குடும்பத்தினர் நன்கொடையால் பெரியணன் செட்டியார்-பார்வதி ஆச்சி பிளாக் உயர்திரு. A.M.M.அருணாசலம் செட்டியார் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

12.01.1990 அன்று மேற்படி பிளாக்கில் கம்ப்யூட்டர் சென்டர் டாக்டர். ஏ. அழகப்பன் மற்றும் டாக்டர். வெங்கடாசலம் அவர்களின் உதவியுடன் ஸ்ரீஜோதி டிரஸ்ட்டின் நன்கொடையால் வருமானவரி கமிஷனர் (ஓய்வு) திரு. ஏ. அருணாசலம் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

20.02.1994 அன்று இந்தியன் பேங்க் பிளாக் திரு. கி.நா. கண்ணன் உதவியுடன் இந்தியன் வங்கி நன்கொடையால் இந்தியன் வங்கி சேர்மன் மற்றும் மேனேஜிங் டைரக்டர் உயர்திரு. M.கோபாலகிருஷ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

08.09.1996 அன்று காரைக்குடி SP.M.N.VR.- SP.S.S.SP - SP.S.RM.SP குடும்பத்தாரின் நன்கொடையால் ஆத்தங்குடியார் பிளாக் மாண்பமை நீதியரசர் AR. லட்சுமணன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

04.10.2006 அன்று சத்தி.எ. திருநாவுக்கரசு அவர்கள் குடும்பத்தினரின் நன்கொடையால் சத்திவள்ளி பிளாக் கட்டிடத்திற்கு உயர்திரு. நீதியரசர் எம். கற்பகவிநாயகம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று, 23.04.2008 அன்று உயர்திரு.நீதியரசர் எம். சொக்கலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

4.10.2006 அன்று உயர்திரு. கம்பார். நா. முத்தையா செட்டியார் குடும்பத்தினர் நன்கொடையில் டாக்டர் RM. அழகப்பச் செட்டியார் மெமோரியல் பிளாக் உயர்திரு. நீதியரசர் M.கற்பகவிநாயகம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று 23.04.2008 அன்று உயர்திரு. நீதியரசர்.மெ. சொக்கலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

அழகப்பர் வளாகம் (மேல் மாடி) :

12.06.2009 அன்று நம் பள்ளி பழைய மாணக்கர் சங்க நன்கொடையால் நான்கு வகுப்பறைகளும், நம் பள்ளியின் ஆர்கனைசிங் கமிட்டி நன்கொடையில் 3 வகுப்பு அறைகளும் அழகப்பர் வளாகம் மேல்மாடியில் கட்டப்பெற்று டாக்டர் திருமதி. உமையாள் ராமநாதன் மற்றும் நம்பள்ளி தாளாளர் C. மெய்யப்பன் அவர்கள் முன்னிலையில் உயர்திரு. இயக்குநர் திலகம். SP. முத்துராமன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

அ.மு.க.சித.மு கட்டிடம் :

19.12.1995 அன்று 5 வகுப்பறைகளுடன் உள்ள A.M.K.M.CT.M. சிதம்பரம் நினைவுக் கட்டிடம் உயர்திரு. A.M.K.M.CT.M. சிதம்பரம் செட்டியார் குடும்பத்தினர் நன்கொடையால் கட்டப்பெற்று உயர்திரு. நீதிபதி.S. நடராஜன் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது.

ஜானகி ஆச்சி சாரிடபிள் டிரஸ்ட் கட்டிடம் :

5.3.2010இல் கம்பார் பழ.நா. முத்தையா செட்டியார் - M. நாராயணன் உதவியுடன் ஜானகி ஆச்சி சாரிடபிள் டிரஸ்ட் நன்கொடையில் 6 வகுப்பறை, இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வக அறை, மாடியில் ஒரு வகுப்பறை கொண்ட ஜானகி ஆச்சி பிளாக் கட்டப்பெற்று தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னிலையில் உயர்திரு. கருமுத்து தி. கண்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

வள்ளல் அழகப்பர் நூற்றாண்டு விழா அரங்கம் :

8.2.2011 அன்று நம் பள்ளி பழைய மாணாக்கர் வள்ளல் டாக்டர் RM. அழகப்ப செட்டியார் நூற்றாண்டு விழாவில் அவர்களின் புதல்வி டாக்டர் உமையாள் இராமநாதன் அவர்களின் நன்கொடையால் கட்டப் பெற்று நம் பள்ளி பழைய மாணாக்கர்கள் உயர்திரு. இயக்குநர் இராம. நாராயணன், உயர்திரு. பழனியப்பன் அவர்கள் முன்னிலையில் அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. முனைவர். எஸ். சுடலைமுத்து அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

09.09.2009 அன்று ரோட்டரி கிளப் ஆப் காரைக்குடி ஹெரிடேஜ் நன்கொடையால் ஆழ்குழாய் கிணறு ஒன்று பள்ளியில் அமைக்கப் பெற்றது.

22.01.2012 அன்று லயன்ஸ் கிளப் ஆப் காரைக்குடி நம் பள்ளி ஆர்கனைசிங் கமிட்டியுடன் இணைந்து மாணாக்கர்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்க RO Water பிளாண்ட் நன்கொடையாக வழங்கப் பெற்றது.

தொண்டு நிறுவனங்கள் பலவும் நம் பள்ளிக்குப் பல வகையான உபகரணங்களை தந்து உதவியுள்ளன.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் புதுப்பித்துக் கட்டப்பெற்ற கட்டிடங்கள் :

பள்ளியின் தொடக்க காலத்தில் திரு. A.V.P.L. சிதம்பரம் செட்டியார் வழங்கிய பிரதான கட்டிடத்தில் உள்ள அனைத்து வகுப்பு அறைகளும் கீழே குறிப்பிட்டுள்ள நன்கொடையாளர்களால் புதுப்பிக்கப் பெற்றது.

1. திரு. C. மெய்யப்பன், தாளாளர்
2. திரு. மெ. சொக்கலிங்கம், நீதிபதி - பசுமைத் தீர்ப்பாயம், தென்மண்டலம்
3. திரு. முத்த.வெ.சொ. நாச்சியப்ப செட்டியார் குடும்பத்தினர்
4. திரு. S.RM.S. நாராயணன் செட்டியார்
5. திரு. C.RM. அருணாசலம் செட்டியார்
6. திரு. SP.M.N.VR. சுப்பிரமணியன் செட்டியார்
7. திரு. AL.M. ரவி

பள்ளி அலுவலக அறை SP.M.N.VR. நாராயணன் அவர்களின் நன்கொடையால் புதுப்பிக்கப் பெற்றது.

நம் பள்ளி வளாகத்தின் முன்புறம் ஸ்ரீ வித்யார்த்தி விநாயகர் கோவில் புதிதாக S.L.N.S. பெரியணன் அவர்கள் நன்கொடையால் கட்டப்பெற்றுள்ளது.

நம் பள்ளி வளாகத்தில் உள்ள குடிநீர்த் தொட்டிகள் உயர்திரு.SP.S.RM.SP. ராமசாமி அவர்கள் நன்கொடையில் நிறுவப்பெற்றது.

பள்ளி விளையாட்டு அரங்கம் :

அமெரிக்காவில் இருக்கும் காரைக்குடி டாக்டர் வி. வெங்கடாசலம் அவர்கள் நம் பள்ளிக்குக் கூடைப்பந்து மைதானம் கால்பந்து மைதானம் பார்வையாளர் காலரி மற்றும் நம்பகுதி மக்கள் பயன்பெற்று உடல்நலத்தைப் பேணுவதற்காக "Walkers Path"நடையாளர் பாதை ஆகிய அனைத்திற்கும் பெரும் பொருள் உதவி அளித்துள்ளார்கள்.

வகுப்பறைக்கான மேஜை நாற்காலி வழங்கிய கொடையாளர்கள்

1. திரு. கம்பார் நா. முத்தையா செட்டியார் (6 வகுப்பறைகள்)
2. திரு. SP.M.N.VR. சுப்பிரமணியன் செட்டியார்
3. திரு. A.C.A. சொக்கலிங்கம் செட்டியார்
4. திரு. A.M.K.M. கருப்பன் செட்டியார்

நம் பள்ளி மாணவர் நலன் கருதி நம் பள்ளிக்கு மிகுதியான பொருட்செலவில் அதிகமான கட்டிடங்கள் கட்டித் தந்துள்ள திரு.AV.PL. சிதம்பரம் செட்டியார் குடும்பத்தினர், திரு.அ.மு.க.மு.சித. குடும்பத்தினர், திரு. கம்பார் நாவன்னா குடும்பத்தினர் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

கட்டிடங்கள் தந்துள்ள நன்கொடையாளர்களுள் பலர் இந்த நூற்றாண்டு விழா சமயத்திலும் தாங்கள் கொடுத்த கட்டிடங்களைப் புதுப்பிக்கும் செலவையும் ஏற்றுக் கொண்டு சிறப்பித்துள்ளனர்.

இந்தப்பள்ளி துவக்கப்பட்டதில் இருந்து நூறு ஆண்டுகளில் கட்டப்பெற்ற கட்டிடங்கள் மற்றும் நிகழ்வுகளை என்னால் இயன்றவரை தொகுத்துச் சமர்ப்பித்துள்ளேன். ஏதேனும் தகவல்கள் விடுபட்டுப்போயிருந்தால் தெரியப்படுத்த வேண்டுகிறேன். பதிவுசெய்து கொள்கிறேன்.

எங்கள் மீதும் எங்கள் பள்ளியின் மீதும் நம்பிக்கையும், பள்ளி வளர்ச்சியில் அக்கறையும் கொண்டு பெருமளவில் நன்கொடை அளித்துப் பெரிதும் உதவிய நன்கொடையாளர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.



எனக்கு அது பள்ளிக்கூடம் மட்டுமன்று, பல்கலைக் கழகம்!

- முனைவர். **தமிழண்ணல்**

காரைக்குடி. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர் வித்தியாசாலை மேனிலைப் பள்ளி. நான் பணி செய்த பள்ளிக்கூடம் மட்டுமன்று; எனக்கு அது ஒரு பல்கலைக் கழகம்!

நான் தமிழ்ப்புலவர்க்குப் (Vidwan2) படித்து முடித்ததும் காரைக்குடிக்கும் ஈரோட்டிற்கும் வேலை கேட்டு விண்ணப்பித்திருந்தேன்.

ஈரோட்டில். பெரியாரிடம் குடியரசு இதழில் வேலை பார்த்த நா.மு. மாணிக்கம். அங்குள்ள மகாசன உயர்நிலைப்பள்ளியில் வேலைக்கு ஆணைபெற்று. 'தந்தி' கொடுத்திருந்தார். இதனால். உடனே அங்கு போய்ச் சேர வேண்டியதாயிற்று.

காரைக்குடிக்கு. கம்பனடிப்பொடி சா. கணேசன் அவர்களுக்கும் ஓர் அஞ்சலட்டை எழுதியிருந்தேன். அவர் தலைமை ஆசிரியரிடம் கூறி. உடனே வந்து சேரும்படி சொல்லி. அதை அப்பொழுது அங்கு வேலை பார்த்த புலவர் ஏரியூர் நடராசன் மூலம் நேரில் நெற்குப்பைக்கு அனுப்பியிருந்தார். இதை என் பெற்றோர் எனக்குக் கூறவில்லை. முறையாக நான் ஈரோடு போய்விட்டதால். அந்த ஆண்டு நமது பள்ளிக்கு வருவது தவறிவிட்டது. ஈரோட்டில் எனக்கு ஒத்துவராததால். நானாக எண்ணி. காரைக்குடிக்குத் தலைமையாசிரியரிடம் வேலை கேட்டு. மீண்டும் ஓர் அஞ்சலட்டை எழுதியிருந்தேன். அவர் மறு அஞ்சலில். உடனே வந்து சேரும்படி. ஓர் அஞ்சலட்டை மூலம் தெரிவித்தார்.

அவ்வாறு. 1949 சூன் திங்களில். நமது பள்ளியில் சேர்ந்தேன்.

1948 சனவரி மாதம். அன்றையக் கல்வி அமைச்சர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் தமிழாசிரியர்களுக்கும் 'B.T' படித்த. பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிகராகச் சம்பளம் கொடுக்கும்படி ஆணை பிறப்பித்தார்.

அதில் அவர் 1948 சனவரிக்கு முன்பாக வேலை பார்த்தவர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிகரான சம்பளமும் 1948 சனவரிக்குப் பின் வேலைக்கு வந்தவர்களுக்குப் புலவர் படிப்புடன், எஸ்.எஸ்.எல்.சி என்ற பள்ளி நிறைவுப் படிப்பும் படித்திருந்தால் மட்டுமே அவ்வாறு சம்பளம் தர வேண்டுமென்றும், பள்ளி இறுதி வகுப்பு முடிக்காது, புலவர் மட்டும் படித்தவர்களுக்கு இடைநிலை ஆசிரியருக்கான சம்பளமே தரவேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

கவியரசு முடியரசன் எனக்குப் பிறகு, சில மாதங்கள் கழித்து நமது பள்ளியில் சேர்ந்தார். முன்னதாகச் சென்னையில் வேலை பார்த்தவர் அவர். நான் ஒன்பதாம் வகுப்பில் படிப்பை நிறுத்தி, பிறகு புலவருக்குப் படித்தவன். அவருக்குப் பட்டதாரி ஆசிரியருக்கு உரிய சம்பளம் கிடைத்தது. எனக்கும் அதைப் போலவே தந்துவிட்டனர். ஆனால் நான் பள்ளி இறுதி வகுப்பை முடிக்காததால், எனக்கு இடைநிலை ஆசிரியர் சம்பளமே தரவேண்டும். எனினும் நகரத்தார் மரபில், தொடக்க கால ஆசிரியரான சிலரில் நானும் ஒருவன் ஆதலாலும் அது நமது நகரத்தார் பள்ளியாதலாலும் எனக்குச் சம்பளம் குறைக்கப்படவில்லை. ஆனால் கல்வி அதிகாரி, இதை ஒப்புக் கொள்ள இயலாதே என்று ஐயத்தைக் கிளப்பினார். தலைமையாசிரியர், சீனிவாச அய்யர் என்னை அழைத்து, "என்ன RMP நீங்கள் இந்த SSLC-யைப் படித்துத் தொலையுங்களேன். கல்வி அதிகாரி (D.E.O) இதை வற்புறுத்துகிறார். இன்றேல் சம்பளத்தைக் குறையுங்கள் என்கிறார்" என எனக்கு ஆதரவாகக் கூறினார்.

ஒரு இடர்ப்பாடு, பிறகு நன்மையாக மாறுவது எனக்குரிய இராசி.

உடனே SSLC யைப் படித்து முடித்து, மனஉணர்வு உந்துதலால், தொடர்ந்து Intermediate, B.A., Economics), தமிழ் எம்.ஏ., என அனைத்தையும் படித்து முடித்தேன். நாற்பது பேர் வேலைபார்த்த பள்ளியில், நான் மட்டுமே, தனிப்படிப்பு மூலம் முதுகலைவரை படித்து முடித்தேன்.

அதற்குக் காரணம் அங்கு என்னுடன் கவியரசு முடியரசனும் வேலை பார்த்தது, மன அமைதியான வாழ்வு, மாணவர்களின் பாசம் நிறைந்த அன்பு முதலியனவாகும்.

ஆசிரியத் தொழிலில் அன்று, அந்தணர்களே மிகுதியும் ஈடுபட்டனர். கற்பிப்பதை ஒரு கடமையாக, குலத்தொழிலாகக் கொண்ட சான்றோர்கள் அவர்கள். நமது பள்ளியில் வேலை பார்த்த நாற்பதுபேரில், முப்பத்தைந்து பேர் அந்தணர்களே. அவர்கள் காட்டிய அன்பை என்னால் மறக்கமுடியாது. நமது பள்ளியில், நான் வேலைபார்த்த பன்னிரெண்டு ஆண்டுகளில் முதுகலை வரை படிக்க முடிந்ததால் அது எனக்குப் பள்ளியன்று, பல்கலைக் கழகமாயிற்று எனலாம்.



நகரத்தாரின் கல்விப்பணிகள்

- முனைவர். கரு. முத்தையா
பதிப்பாசிரியர்

தாம் ஈட்டிய பொருளின் ஒரு பகுதியை அறப்பணிக்கு என ஒதுக்கி, அறப்பணி செய்வதை இயல்பாகக் கொண்ட சமூகம் நம் நகரத்தார் சமூகம். ஆன்மிக ஈடுபாடு காரணமாகக் கோவில் திருப்பணிகளையும், கோவில் சார் அறப்பணிகளாகிய நந்தவனம் அமைத்தல், பசுமடம் அமைத்தல், தேவார பாடசாலை, திருவாசக மடம், வேத பாடசாலை ஆகியவற்றை நிறுவுதல் ஆகியவற்றையும் செய்து வந்தனர்.

ஒரு கட்டத்தில் நகரத்தாரின் பார்வை, கல்விப்பணி எனும் திசை நோக்கித் திரும்பியது. அவர்கள் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்வி நிறுவனங்களை உருவாக்கிக் காத்துவருகின்றனர். சில இடங்களில் தாங்கள் பள்ளிகளைத் தொடங்கிப் பின்னர் அரசிடம் ஒப்படைத்துள்ளனர். வேறு சில இடங்களில் நன்கொடையாக ஒரு தொகை, இடம், கட்டிடம் போன்றவற்றைக் கொடுத்து அரசாங்கம் கல்விப்பணி செய்யத் துணை செய்துள்ளனர்.

செட்டிநாட்டு ஊர்கள் எழுபத்தைந்தனுள் ஆறு ஊர்களில் ஆறு தொடக்கப் பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்திவருகின்றனர். இருபத்து நான்கு ஊர்களில் 26 தொடக்கப்பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் நடத்தி வருகின்றன.

நான்கு ஊர்களில் 4 நடுநிலைப்பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்தி வருகின்றனர். பதினொரு ஊர்களில் 13 நடுநிலைப் பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் நடத்தி வருகின்றன.

ஏழு ஊர்களில் ஏழு உயர்நிலைப்பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்தி வருகின்றனர்.பன்னிரண்டு ஊர்களில் 13 உயர்நிலைப் பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார்கள் நடத்தி வருகின்றனர்.

மூன்று ஊர்களில் 3 மேல்நிலைப் பள்ளிகளை நகரத்தார் பொதுவில் நடத்தி வருகின்றனர். (நம் மீ.சு. மேல்நிலைப் பள்ளி அவற்றுள் ஒன்று) பதினாறு ஊர்களில் 19 மேல்நிலைப்பள்ளிகளைத் தனிப்பட்ட நகரத்தார்கள் நடத்தி வருகின்றனர்.

பள்ளத்தூர், மதுரை, தேவகோட்டை ஆகிய ஊர்களில் மூன்று கலைக்கல்லூரிகளை நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றனர். மேலைச் சிவபுரியிலும், காரைக்குடியிலும் இரண்டு தமிழ்க் கல்லூரிகளை நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

நாட்டரசன்கோட்டை, தேவகோட்டை, கோனாபட்டு ஆகிய ஊர்களில் தொழிற்கல்விக் கூடங்களை (ஐ.டி.ஐ) நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றனர். நேமத்தான் பட்டியில் உடற்பயிற்சி மருத்துவநிலையம் ஒன்றை ஒரு நகரத்தார் தொடங்கி நடத்தி வருகின்றார்.

செட்டிநாடு, சேலம், மதுரை, இராயவரம் ஆகிய ஊர்களில் நகரத்தார்கள் பல்தொழிற்பயிற்சி நிலையங்களை (பாலிடெக்னிக் கல்லூரி) நிறுவி நடத்தி வருகின்றனர். மதுரையில் தியாகராசர் ஒரு கலைக்கல்லூரியையும், ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியையும், ஒரு பொறியியற் கல்லூரியையும் நிறுவியுள்ளார். அண்ணாமலை நகரில் இராசா சர் அண்ணாமலை செட்டியார் நிறுவிய அண்ணாமலை பல்கலைக் கழகம் அண்மைக்காலம் வரை, அவரது வழித் தோன்றல்களின் மேற்பார்வையில் இயங்கியது.

செட்டி நாட்டில் மட்டுமன்றி நகரத்தார்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் கல்வி அறப்பணிகளைச் செய்து வருகின்றனர். இரங்கூனில் கம்பை தனவைசியர் கல்விக்கழகத்தை நிறுவி, மிகச்சிறந்த உயர்நிலைப்பள்ளி ஒன்றை நீண்ட காலம் நடத்தி வந்தனர்.

திருவாரூரில் ஒரு நடுநிலைப்பள்ளியையும், கோவை, சிதம்பரம், நீலகிரி, திருத்தணி, மணப்பாறை ஆகிய ஊர்களில் உயர்நிலைப்பள்ளிகளையும், சென்னை, மதுரை, மானாமதுரை, பொள்ளாச்சி, திருவண்ணாமலை அகிய ஊர்களில் மேல்நிலைப் பள்ளிகளையும் நகரத்தார்கள் நிறுவி நடத்தி வருகின்றனர்.

நகரத்தார்கள் நிறுவிய கோவிலூர் மடம் இந்து சனாதனப் பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்கும் பெருநோக்கத்தோடு, அதன் உறுப்புக்களாக நாதசுர இசைக்கல்லூரி, சிற்பக் கல்லூரி, திருமுறைக் கல்லூரி, வேதாகமக் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றைத் தொங்கி நடத்தி வருகிறது.

காரைக்குடியைக் கல்விக்குடி ஆக்கிய வள்ளல் அழகப்பர் காரைக்குடியில் மழலையர் பள்ளியிலிருந்து பொறியியற் கல்லூரி வரை அனைத்துக்கல்வி நிறுவனங்களையும் நிறுவி, மாபெரும் கல்வி அறப்பணியைச் செய்தவர் என்பது உலகறிந்த உண்மை. அந்நிறுவனங்களுட் சில அழகப்பா பல்கலைக்கழகத்தின் உறுப்புக்களாக இயங்குகின்றன. வேறு சில அரசால் நடத்தப்பெறுகின்றன. சில நிறுவனங்கள் வள்ளலின் திருமகளார் உமையாள் இராமநாதனின் நிருவாகத்தில் இயங்குகின்றன.

இவ்வாறு மிகச் சிறந்த கல்வி அறப்பணிகளை அனைத்து ஊர் நகரத்தார்களும் செய்திருக்கிறார்கள் என்பது பெருமைக்குரிய செய்தி. இந்தக்கல்வி அறப்பணிகள் அத்துணையிலும் காலத்தால் முந்தியது நம். மீ.சு.மேல்நிலைப்பள்ளியை நிறுவிய செயல் (1913) என்பது நமக்குக் கூடுதல் பெருமை சேர்க்கும் செய்தி.

நகரத்தார் கல்வி நிறுவனங்களுள் வேறு எந்த நிறுவனமும் நூற்றாண்டு விழாக் காணவில்லை என்பது காலத்தால் முதன்முதலில் தோன்றிது நம் பள்ளிதான் என்பதற்கு மறுக்கமுடியாத சான்று.

அந்த அடிப்படையில் சிந்தித்தால், அயலூர் நகரத்தார்கள் பலர் கல்வி அறப்பணி செய்யத் தூண்டுதலாகக் காரைக்குடி நகரத்தாரின் இச்செயல் (மீ.சு.மேல்நிலைப்பள்ளியை நிறுவியது) அமைந்திருக்கலாம் என்னும் எண்ணமும் நமக்குத் தோன்றுகிறது. அயலூர் நகரத்தார் அனைவரும் என்றில்லாவிட்டாலும், அவர்களுள் சில பலருக்காவது நம்பள்ளி தூண்டுகோலாக அமைந்திருக்கும் என்பது உறுதி.

கல்வி அறப்பணியை மிகுதியாகச் செய்த ஒரு சமூகம் நகரத்தார் சமூகம் என்பதையும், அதிலும் காலத்தால் முந்திய முதல் கல்வி அறப்பணியைச் செய்தவர்கள் காரைக்குடி நகரத்தார் என்பதையும் எண்ணி, எண்ணி இறும்பூது எய்துவோம்.



வாழ்க ! பள்ளி வரவாய் வளர்த்தே !

- தமிழாகரர். தெ. முருகசாமி
முன்னாள் முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

பலர்புகழ் காரைக் குடிவளர் பள்ளி
மலர்மண மொட்டுப் பிள்ளைகள் தாமும்
வாழையடி வாழையாய் வரிசை வரிசையாய்
ஏழை செல்வர் என்றில் லாமல்
ஆண்பெண் ஆசான் மார்கள் அறிவுடன்
காண்பரி தான அறிவுக் கண்ணையே
திறந்து மலர்த்தும் திறத்தில் ஓங்கிய
சிறந்த பள்ளி எனப்புகழ் பெற்ற
மீனாட்சி சுந்தரே சுவரர் பேரில்
தேனாட்சிப் பள்ளி நூற்றாண்டு காண,
வள்ளல் அழகப்பர் போன்றோரைத் தந்தது,
அள்ளக் குறையாக் கவிஅமிர்த லிங்கர்
மாசிலா மணியாம் தேசிகர் மற்றும்
தேசிகன், தமிழண்ணல், முடியரசன், பழநி
கால வரிசையில் கற்பித்த பள்ளிதான்
சீலமிகு தலைமை ஆசான் பழநிவேல்
கண்டிப் புடனே காத்த பெருமையில்
பண்டைய புகழின் குறையா தென்றும்
ஒளிவளர் விளக்காய் வளருமிந் நாளில்
களிப்புடன் கம்பார் முத்தையா போன்றோர்
காட்டும் கருணையால் கட்டிட விரிவையும்
நாட்டும் நகரத் தாரின் பொறுப்புடன்
சோனா மேனா சுடர்மிகு விலாசம்
தானாய் ஓங்கத் தாளாளர் என்னும்
தம்புகழ் தொடர்ச்சியில் தலைமுறை காக்க
இம்பரில் இரும்புகழ் இன்னும் இன்னும்
கொம்புத் தேனாய்க் கொடுத்தே வளர்கென
அம்புவி யோர்கள் வாழ்த்தும் வாழ்த்தைக்
கொள்ளும் மீ.சு. மேனிலைப்பள்ளி
கொள்முதல் கல்வியை ஐந்தொகை இருப்பின்
வரவாய் வளர்த்து வாழ்க ! வாழ்கென்றே
பரவினன் நானும் பைந்தமி ழாலே!

CENTENARY COMMITTEE MEMBERS



C. Meyyappan



Satthi. A. Thirunavukkarasu



PL.N. Muthiah Chettiar



Muthu. Palaniappan



S.L.N.S. Periyanan



PR. Chockalingam



S.M.AR.N.AR. Narayanan Chettiar



A.M.K.M. Karuppan Chettiar



AL.S. Alagappa Chettiar

CENTENARY COMMITTEE MEMBERS


SP. Ramasamy


SP.M.N.VR. Subramanian


Mutha.Ve.So.N. Vellaiyan


Adv. N. Palaniappan


S.RM.S. Narayanan Chettiar


M.CT. Deivanai Achi


C.RM. Arunachalam


Dr. V. Venkatachalam


Pala. Karuppiah

CENTENARY COMMITTEE MEMBERS


Er. S. Nachiappan


PL. Chidambaram


SP. Muthuraman


MR. Valliappan


SP. Palanivelu


P.S.RM.A. Swaminathan


AL.M. Ravi


K. Vembu Sundaram


Rama. Narayanan

CENTENARY COMMITTEE MEMBERS



Pala. Palaniappan



Dr. PL. Sabarathinam



Adv. N. Shankar



Dr. KR. Muthiah



Dr. S. Ramalingam



M.S.P. Raghavan Chettiar



Auditor. N. Narayanan



M. Abdul Salam



M. Narayanan

SCHOOL COMMITTEE MEMBERS


PR. Chockalingam


C. Meyyappan


C. Muthappan


PL.N. Muthiah Chettiar


Satthi. A. Thirunavukkarasu


S.M.AR.N.AR. Narayanan


KR. Shanmugam


Muthu. Palaniappan


S.L.N.S. Periyanan


Pala. Palaniappan


SP. Palanivelu


MR. Valliappan


M. Henry Baskar


N. Gopichandran


V. Sundararaman

HIGHER SECONDARY COURSE ORGANISING COMMITTEE


PR. Chockalingam


C. Meyyappan


Satthi. A. Thirunavukkarasu


PL.N. Muthiah Chettiar


Muthu. Palaniappan


S.L.N.S. Periyanan


AL.S. Alagappan


SP. Ramaswamy


SP. Palanivelu


MR. Valliappan


N. Narayanan


V.S.M. Ramanathan

OUR SCHOOL CORRESPONDENTS



M.RM.S. Periyanan Chettiar
upto 1956



M.S.M.M. Meyyappa Chettiar
(1956 - 1962)



M.S.M.M. Chockalingam Chettiar
(1962 - 1977)



C. Meyyappan
(from 1977 onwards)

OLD BOYS ASSOCIATION



Satthi. A. Thirunavukkarasu
President



Muthu. Palaniappan
Secretary



PL.N. Muthiah Chettiar
Treasurer

OUR VETERAN HEADMASTERS



S.G. Subramania Iyer
(Nov 1915 to Feb 1919)



N.S. Venkatarama Iyer
(Mar 1919 to Apr 1940)




A. Ramanuja Iyengar
(May 1940 to Feb 1946)



K.R. Srinivasa Iyer
(Mar 1946 to Aug 1954)



V. Aravamutha Iyengar
(Sep 1954 to Jun 1966)



M. Ganesan
(Jun 1966 to Feb 1978)



K.S. Minakshi Sundaram
(Feb 1978 to May 1987)



SP. Palanivelu
(June 1987 to May 2002)



MR. Valliappan
(Nov 2002 onwards)

SCHOOL STAFF MEMBERS


MR. Valliappan


M. Henry Baskar


L. Palaniappan


R. Annamalai


N. Gopichandran


V. Sundararaman


M.T. Srinivasan


SV. Muthukumar


P. Radhakrishnan


KR. Bhuvana


M. Lakshmanan


I. Pragash


P. Senthilkumar


S. Gururajan


S. Kandasamy


J. Prakash Manimaran

SCHOOL STAFF MEMBERS



K. Kannan



A. Arulraj



B. Shanmuga Priya



T. Yogeeswaran



T. Kalaiselvi



A. Umamaheswari



V. Ganesan



N. Ravichandran



N. Vijaya



KR. Vijaya



R. Shanmugavalli



AR. Alamelu



M. Vijayalakshmi



K. Senthilnaathan



S. Palaniappan



S. Venkatesan

NON TEACHING STAFFS


S. Mythili


T. Jayapaul


M. Swaminathan


M. Kannan


RM. Annamalai


M. Balasubramanian


K. Kulandhaivelu



C. Nehru Raja

OUR FOUNDER

Thiru. Mutta. VELLAIYAN CHETTIAR




பள்ளி பிறந்த இடம்



திருவாசக மடம்

OUR DONORS

முதன்மைக் கட்டிடம் கட்டிக்கொடுத்த முதற் கொடையாளர்



ஆவி.பழ. சிதம்பரம் செட்டியார்

OUR DONORS



A.M.K. Muthukaruppan Chettiar



AVM. Saravanan



Kambar. N. Muthiah Chettiar



PR. Chockalingam



M.CT. Chidambaram Chettiar



Dr. A.C. Muthiah



Satthi. A. Thirunavukkarasu



Dr. Umayal Ramanathan



SP.M.N.VR. Narayanan

OUR DONORS


Mutha.VE.SO.N. Vellaiyan


C. Meyyappan


Justice. M. Chockalingam


S.RM.S. Narayanan Chettiar


C.RM. Arunachalam


SP.M.N.VR. Subramanian



AL.M. Ravi


Dr.V. Venkatachalam


S.L.N.S. Periyanan

பிரதானக் கட்டிடத்தின் முன்னைத் தோற்றம்





இப்போதைய பொலிவு



விழாக் குழுவினர் பள்ளி முகப்பில் அமைத்த நிகழ்ச்சி நிரல் பலகை

அலங்கார விளக்குகளுடன் முதன்மைக் கட்டிடத்தின் முகப்புத் தோற்றம்





கொடை விளக்காம் அழகப்பர் வளாகம் வரிசை விளக்குகளோடு வளமாகக் காட்சி தருகிறது

ஜானசி ஆச்சி அறநிலைக் கட்டிடத்தை அழகு செய்யும் விளக்குகள்





விருந்தினரை வரவேற்க விரைந்து முன்னிற்கும் தாளாளர் மற்றும் விழாக்குழுச் செயலர்கள்

பொன்னம்பல அடிகளாரைப் போற்றி வரவேற்கும் விழாக் குழுவினர்





நூற்றாண்டு விழா மரபு சார்ந்த மங்கள இசையோடு தொடங்குகிறது

நூற்றாண்டு விழாவை மேடையில் விளக்கேற்றித் தொடங்கி வைக்கிறார் மேதகு நீதி அமைச்சர்





நிதியரசருக்கு நீதியரசர் பொன்னாடை அணிவித்துப் போற்றும் காட்சி

நிதியமைச்சருக்குத் தாளாளர் சி. மெய்யப்பன் பொன்னாடை அணிவித்து மகிழ்கிறார்






பள்ளித் தாளாளருக்குப் பொன்னாடை அணிவித்துப் போற்றுகிறார் நிதியமைச்சர்

நல்லாசிரியர் விருது பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர் எம்.ஆர். வள்ளியப்பனுக்கு
நினைவுப் பரிசு வழங்கிப் பாராட்டுகிறார் நீதியரசர்





காரைக்குடி நகராட்சி மன்றத் தலைவிக்கு நினைவுப் பரிசு வழங்கிப் போற்றும் விழாக் குழுச் செயலர்

மத்திய நிதி அமைச்சர் மகிழ்வோடு ஸ்மார்ட் வகுப்பறையைத் திறந்து வைக்கிறார்





கட்டிடம் புதுப்பித்த கல்வெட்டைக் களிவோடு நிதி அமைச்சர் திறந்து வைக்கிறார்

விளையாட்டரங்கக் கட்டமைப்பு வசதிகள் கல்வெட்டை நீதியரசர் மெ. சொக்கலிங்கம் திறந்து வைக்கிறார்





ஆற்றல்மிகு செயலர் முத்து. பழநியப்பன் அறிமுக உரை ஆற்றுகிறார்

செயல்திறம் மிக்க எஸ். பெரியணன். செயலர் அறிக்கை வழங்குகிறார்





மாண்புமிகு நிதியமைச்சர் ப.சிதம்பரம் விழாத் தொடக்கவுரை நிகழ்த்துகிறார்


அரங்கம் நெகிழும் வண்ணம் தலைமை உரை ஆற்றுகிறார் நீதியரசர் மெ. சொக்கலிங்கம்





நூற்றாண்டு விழா மலரை நீதியரசர் வெளியிட,
பழைய மாணவர் சங்கப் பொருளாளர் கம்பார் பழ.நா. முத்தையா செட்டியார் பெற்றுக் கொள்கிறார்


மாலை நிகழ்ச்சியின் தலைமையுரை நிகழ்த்துகிறார் நம் பள்ளியின் முன்னாள் மாணவர் கோவிலூர் ஆதீனகர்த்தர் சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிகர்






பாராட்டி வாழ்த்துரை வழங்குகிறார் அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் சேது. சுடலைமுத்து

சிறப்பாகப் பணியாற்றிப் பள்ளியைத் தலைநிமிர்ந்து நிற்க வைத்திருக்கும்
தலைமை ஆசிரியரும் ஆசிரியப் பெருமக்களும்





சுயநிதி வகுப்புகளைச் சுடர்மிகு வகுப்புக்களாக ஆக்கிக் கொண்டிருக்கும்
சுயநிதிப் பிரிவு ஆசிரியப் பெருமக்கள்



தாளாளரின் வரவேற்புரை



பள்ளி வளர்ச்சிக்குழுத் தலைவர் சத்தி. அ. திருநாவுக்கரசு அவர்களின் தேனான முன்னிலை உரை.



பேராசிரியர். சுப. வீரபாண்டியன் அவர்களின் சுகமான வாழ்த்துரை.



தவத்திரு. அடிகளாரின் தகைசால் ஆசியுரை.



செயல்பாடுகள் பற்றி முன்னாள் மாணவர்கள் கலந்துரையாடலில் செயலர் முத்து. பழநியப்பன்.



மூதறிஞர் முனைவர். தமிழண்ணலின் முத்தான வாழ்த்துரை.



இயக்குநர் திலகம் சுப. முத்துராமனின் இனிய உரை.



சட்டமன்ற உறுப்பினர் சோழன். சித. பழனிச்சாமி அவர்களின் வாழ்த்துரை.



நகர்மன்றத் தலைவி பேரா. கற்பகம் இளங்கோ அவர்கள் நம் பள்ளியைப் பாராட்டுகிறார்.



நற்கதை நம்பி பேராசிரியர். அய்க்கண்ணின் நயவுரை.



மெ. செ. இராம. மெய்யப்பன் வாழ்த்துரை வழங்குகிறார்.



சிந்தனைச் செல்வர் பழ. கருப்பையாவின் செவிக்கினிய விழாநிறைவுரை.

SHRI VIDHYAA GIRI MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

Veerasekarapuram,PUDUVAYAL-630 108.PHONE ; 04565 - 272733

100% X STD MARCH 2013 RESULTS 100%

CONGRATULATIONS TO THE TOPPERS

State 3rd Rank Holder

272/272

M.MEENATCHI - 496/500

272/272

State 3rd Rank Dist. 1st Rank	Rev.Dist. 3st Rank Dev.Edu.Dist. 2nd Rank	School 3rd Rank
		
496/500	494/500	492/500
1st	2nd	3rd
M. MEENATCHI	K. HARI PRABHAKAR	T. RAJASHREE

M.P. Krishnan	Dr. R. Swaminathan	Haji M. Mohammed Meera
Chairman	Correspondent & Principal	Treasurer

நூற்றாண்டு விழா காணும்
S.M.S.V. மேல்நிலைப்பள்ளி மேலும் சிறக்க
வாழ்த்துகிறோம் ...



வள்ளி சர்ஜிக்கல் கிளினிக் & லேப்ராஸ் கோபிக் செண்டர்

கீழவீதி, மகர்நோன்பு பொட்டல் எதிரில், காரைக்குடி.

Dr. V. காமாட்சி சந்திரன்
M.S., FIAGS.,
அறுவை சிகிச்சை நிபுணர்,
அரசு மருத்துவமனை, கண்டனூர்

Dr. ராதாசந்திரன்
M.B.B.S.,
பெண்கள் மற்றும் குடும்ப நலமருத்துவர்

Master. Dr. **கவுதம் சந்திரன்** M.B.B.S.,

All Surgery under one Roof

கலைமகளின் நாவன்மையில்

காரைக்குடிக்கோர் தனியிடமுண்டு

அவள்நாவில் நர்த்தனமிடும்

எஸ்.எம்.எஸ்.வி. க்குச் சிறப்பிடமுண்டு

பிள்ளைப்பிறை நிலாக்களைப் பௌர்ணமியாக்கிப்

பார் புகழ வைத்த ஞானப்பரிதியவள்

அகவை ஈரைம்பதைத் தொடும்

அன்னையின் விழாவில் ஆனந்தத்துடன்

நான்



K. நாச்சியப்பன்

முன்னாள் மாணவன்

E, பாலாஜி அவின்யு

2, ராமன் தெரு, சிட்லபாக்கம், சென்னை - 600 004

செல் : 94441 04933



இமயமென ஓங்கும் பள்ளி

சேவு. முத்துக்குமார்
முதுகலைத் தமிழாசிரியர்
மீ.சு. மேல்நிலைப் பள்ளி

பொன்னகராம் காரைக்குடி நகரம் தன்னில்
பொலிவுடனே திகழ்ந்தோங்கும் எங்கள் பள்ளி
கண்ணைப் போல் கல்விதனைக் கருதுகின்ற
கவின்மிகுந்த நகரத்தார் படைத்த பள்ளி
மண்போற்றும் சொக்கலிங்க அய்யா வழியில்
மங்கலமாய் வெள்ளையனார் துவங்கி மேலும்
வெண்ணிலவாம் ஆவி.பழ. சிதம்ப ரனாரும்
வெகுமதியாய்த் தந்திட்ட மீ.சு.வி. பள்ளி !

நாடுபுகழ் தாளாளர் சொக்க லிங்கம்
நலமாகத் தந்துசென்ற செம்மைப் பணியை
ஏடுபுகழ் மெய்யப்பன் தொடர்ந்தே இன்று
எழிலான பள்ளியாக ஆக்கித் தந்தார்
தேடுகின்ற செல்வமான கல்வி தன்னைச்
செழுமையாய் மாணாக்கர் கற்றுத் தேரப்
பீடுநிறை கட்டடங்கள் இவர்கா லத்தே
பெருகிநிதம் வளர்கின்ற மாட்சி கண்டோம் !

பெருமைமிகு பள்ளிநிதம் சிறந்தே ஓங்க
பெறற்கரிய பணிசெய்து நித்தம் வந்து
தருவனைய தன்னலமும் சிறிதும் இன்றித்
தளராது பாடுபடும் கம்பார் நா.மு
பெருமகனார் சத்திதிரு நாவுக்கரசர்
பெருஞ்செயல் செய் புகழ்முத்து பழநி யப்பன்
வருமுகிலாய் வளம்சேர்க்கும் பெரி.சொ னாவும்
வன்மைமிகு பெரியணனும் உயர்த்தும் பள்ளி !

இலஞ்சமது வாங்குகின்ற நாடு என்றும்
இல்லாமை நிறைந்தேதான் போகும் என்று
உளம் நினைந்த காரணத்தால் இலஞ்ச ஒழிப்பு
உறுதிமொழி நாள்தோறும் மாணாக் கர்கள்
நலம் காண ஏற்கவைத்த தலைமை ஆசான்
நல்லொழுக்கத் துடனான கல்வி தந்து
பலர் போற்றப் பணிஓய்வு பெற்றிட் டாலும்
பழநிவேலு பணிஇன்றும் தொடரும் பள்ளி

தண்டமிழை ஆய்ந்துயர்ந்த தமிழண் ணலுடன்
தந்நிகரில்லாக் கவிபடைத்த முடிய ரசரும்
பண்ணெடுத்து அனிச்சஅடி காவியம் தந்த
பாவரசர் ஆ.பழநி அகிலம் போற்ற
விண்ணளக்கும் சிலையமைத்து வள்ளு வர்க்கு
வியனுலகப் பெருமைசேர் கணபதி ஸ்தபதி
தொன்மைமிகு பள்ளிபுகழ் பெற்றே ஓங்கத்
தொல்லுலகம் போற்றப்பணி செய்த பள்ளி !

கல்விவள்ளல் அழகப்பர் பயின்ற பள்ளி
கலைத்தந்தை ஏ.வி.எம். அருணாச் சலமும்
சொல்லரிய நீதிவேந்தர் சொக்க லிங்கம்
சுடரொளியாம் சொல்லரசர் கரு.முத்தையா
நல்லபல திரைப்படங்கள் இயக்கித் தந்த
நாடுபுகழ் முத்துராமன் நாரா யணனும்
பல்லாற்றல் திறன்கொண்ட பழ.கருப் பையா
பயின்றபெருமை கொண்டதுவே எங்கள் பள்ளி !


பார்போற்றும் மீ.சு.வி பள்ளி தன்னில
பலர் போற்றத் தலைமைநற் பொறுப்பை ஏற்று
ஊர்உறங்கும் நேரத்திலும் பள்ளி தன்னை
உயர்த்துதற்கு உளமாரப் பாடு பட்டுப்
பேர் சிறக்க நல்லாசான் விருதைப் பெற்று
பெருமைமிகு நூற்றாண்டுப் பள்ளி நித்தம்
சீர் பெறவே உழைக்கின்ற வள்ளி யப்பன்
சிறப்பதனைச் சொல்லுதற்கு வார்த்தை இல்லை !

கலை இலக்கியப் போட்டிகளில் ஆண்டுதோறும்
கணக்கற்ற பரிசுகளைப் பெற்று ஓங்கி
விளையாட்டு விஞ்ஞானப் போட்டி களிலும்
விருதுகளைக் குவித்துநிற்கும் எங்கள்பள்ளி
விலையில்லா அரசுதரும் நலப்பொருட்கள்
விரைவாக மாணவர்க்குக் கொண்டு சேர்த்து
மலையெனவே உயர்ந்துநிற்கும் பள்ளி மேலும்
மங்கலமே பெற்றுயரும் எண்ணம் திண்ணம்!

நாட்டுநலப் பணித்திட்ட இயக்கம் கொண்டு
நலமான பாரதத்தைத் தந்து நாளும்
ஏட்டுக்கு உதவுகின்ற சதுரங் காட்டம்
ஏற்றம் தரும் ஜே.ஆர்.சி, இன்ராக்ட் சங்கம்
காட்டுவளம் சேர்க்கின்ற திட்ட மான
கவின் பசுமைப் படையுடனே எந்நாட் போதும்
வீட்டுக்குப் பெருமைசேர் சாரணர் இயக்கம்
விழிப்புணர்வு தரும் சாலை அமைப்பும் உண்டு !

எங்கும் நிறை சுந்தரேசர் இடப்பா கத்தே
எழில்வடிவாய்த் தவம்புரிந்து மாணாக்கர்கள்
தங்குதடை இல்லாமல் கல்வி கற்கத்
தண்ணருளைத் தந்திடுவாள் ஸ்ரீமீ னாட்சி
பொங்கிவரும் காவிரியாய்க் கருணை கொண்டு
பொன்னான பள்ளியினைக் காத்து நின்று
மங்கலம்சேர் வித்யார்த்தி விநா யகரும்
மழைமேகம் போல் கருணை பொழியும் பள்ளி !

இத்தகைய பெருமைமிகு எங்கள் பள்ளி
இமயமென ஓங்குதற்கு எந்தநாளும்
நித்திரையை மறந்துவிட்டு உழைத்து நிற்கும்
நிகரில்லா அலுவலர்கள் ஆசிரி யர்கள்
பத்துத்திங்கள் பாடுபட்டு ஆண்டு தோறும்
பலனாக அறுவடையைச் செய்யும் பள்ளி
எத்தகைய மாணவரும் இங்கு கற்றால்
ஏற்றமிகக் காண்பார்கள் உண்மை ! உண்மை !



எம் அன்னைக்கு வயது 100

நீ. இரவிச்சந்திரன்
தமிழாசிரியர்
மீ.சு. மேல்நிலைப் பள்ளி

கல்வி விருட்சத்தின் வேர்

காரைக் குடிநகரில் கல்வி விருட்சத்தின்
வேரைத் தனதாக்கிக் கொண்டதுடன் - பேரையும்
மீனாட்சி சுந்தரேசர் வித்தியா சாலையாய்த்
தானாட்சி செய்தாய் தனித்து. 1

நகரத்தார் தண்ணளி

இகவுலகின் வாழ்க்கை இறைப்பணிக்கே என்னும்
தகவுடையோர் என்றுலகம் சாற்றும் - நகரத்தார்
தண்ணளியால் முன்னெழுந்த தாயே உனதருளால்
எண்ணற்றோர் பெற்றார் எழுத்து. 2

சொக்கலிங்க ஐயா

நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
கோலத் திருவடிவைக் கொண்டாடும் - சீலராம்
சொக்கலிங்க ஐயாவின் சொல்லில் உருவானாய்
மக்களெல்லாம் போற்ற மகிழ்ந்து. 3

முத்த. வெள்ளையன் செட்டியார்

முத்த. வெள் ளையன் எனும்நற் பெயர்கொண்ட
உத்தமக் கார்மேக வள்ளல்தான் - வித்தாய்த்
திருவா சகமடத்தில் ஊன்றினார் உன்னைத்
தருவாய் வளர்ந்திடத் தான். 4

ஆவி.பழ.சிதம்பரம் செட்டியார்

ஆவி.பழ.சிதம்ப ரம்மென்னும் வள்ளலவர்
ஓவியம்போல் ஒப்பற்ற கட்டடத்தை - மேவியே
உன்னைக் குடியமர்த்தி ஓங்கு புகழ்கொண்டார்
முன்னைக் கொடைமரபு மூண்டு. 5

மீனாட்சியின் அருட்பார்வை

வானாட்சி காரை வளநகரில் செய்துவரும்
மீனாட்சித் தாயவளின் பார்வையில் - தேனாட்சி
பெற்றவளே கல்விப் பெருந்தவமே கற்றோரின்
உற்றவளே நீயே உயிர். 6

பள்ளியின் குறிக்கோள்

ஒழுக்கமே கல்வியின் நல்விழுப்பம் என்னும்
எழுச்சிக் குறள்வரியை என்றும் - வழுக்காக்
குறிக்கோளாய்க் கொண்டு குவலயத்தை வென்று
அறிவுக்கும் ஆனாய் அரண். 7

மாணவராய் அழகப்பர்

கடலளவு செல்வத்தைக் கல்விக்கே ஈந்து
நடமாடும் கற்பகமாய் வாழ்ந்த - கொடைவேந்தர்
பிள்ளை அழகனாய் உன்னமுதை உண்டதனால்
வள்ளலாய் ஆனார் வளர்ந்து. 8

மெ.செ.மெ.மெ. குடும்பம்

மேகக் கொடைமரபு மெ.செ.மெ.மெ. குடும்பம்
யாகம் எனஉன்னைக் காத்திடவே - வேகம்
கெடுத்தாண்ட வேந்தன் வியன்கருணை யாலே
தொடர்ந்தின்றும் பெற்றாய் துணை. 9

தாளாளர் மெய்யப்பன்

பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
மெய்யப்பன் தாளாளர் ஆயினபின் - வையகத்தில்
பள்ளிகள் கற்கின்ற பள்ளியாய் ஆனாய்நீ
துள்ளும் வளர்ச்சி தொடர்ந்து. 10

சிறந்த நிர்வாகம்

கற்பக நல்விருட்சம் காக்கும் இமையவர்போல்
அற்புதமாய் நிர்வாகம் ஆட்சிசெய்யப் - பொற்புடனே
கண்ணின் மணியெனநீ கல்விப் பயிர்வளர்த்தாய்
மண்ணில் கலைமகளாய் வாழ்ந்து. 11

தலைமையாசிரியர் முரு.வள்ளியப்பன்

நல்லாசான் வள்ளியப்பன் நற்றலைமை ஏற்றபினர்
எல்லாத் துறைகளிலும் முன்னேறிப் - பல்லோரும்
பல்கலையின் நாற்றாங்கால் இப்பள்ளி என்றேத்தும்
வெல்புகழைப் பெற்றாய் விரைந்து. 12

கற்றுத் துறைபோன ஆசிரியர்கள்

தங்கள் துறைகளிலே தங்கம் எனவொளிரும்
சிங்கநிகர் ஆசான்கள் சீருடனே - இங்குளதால்
சொற்ப அறிவுடைய மாணவரும் உன்னிடத்தில்
சிற்பமா கின்றார் சிறந்து. 13

சாதிக்கத் தூண்டும் கல்வி

போதிக்கும் பாடம் எதுவெனினும் ஆசான்கள்
சாதிக்கும் கல்வியையும் தான்சேர்த்து - நீதிக்கும்
நேர்மைக்கும் வாழ்வில் மதிப்பளிக்கும் கல்வியைச்
சீர்பெறவே ஈவார் தினம். 14

வாழிய வாழியவே!

வாழிய தாயேநீ! வாழிய பல்லாண்டு!
வாழி உனைக்காக்கும் வள்ளல்கள்! - ஆழியின்
நீர்காற்று வானம் நெருப்புள்ள நாள்வரையில்
பார்போற்றும் நின்றன் பணி. 15





என்றும் உள எஸ்ஸெம்மெஸ்

- அய்க்கண்

ஒரு நிறுவனம், நூறு ஆண்டுகள் தொடர்ந்து இயங்கினாலே சிறப்புத்தான், ஆனால் ஒரு பள்ளி நிறுவனம், நூறு ஆண்டுகள் தொடர்ந்து பெருமையும் திறமையும் இலங்க இயங்கி வருவது, வரலாற்றுக்குரிய சிறப்பு எனலாம்.

இவ்வட்டாரத்திலே, பன்னெடுங்காலமாக, கோயில், சத்திரம், ஊருணி, பள்ளி, கல்லூரி முதலான சமுதாயப் பயன் தரும் பணிகளை ஆற்றிவரும் நகரத்தார்கள், காரைக்குடியில் தோற்றுவித்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வித்யா சாலை மேல்நிலைப்பள்ளி, நூற்றாண்டைக் கடந்து கல்விப்பணியாற்றி வருவது, வரலாற்றுக்குரிய செய்தி என்பதில் ஐயமில்லை. தொடக்கத்திலிருந்தே, மாணவர்களைப் பயிற்றுவித்தலிலும், சிறந்த அறிஞர்களாக, திறனாளர்களாக, சான்றோர்களாக உருவாக்குவதிலும் தொடர்ந்து முன்னிலை வகித்துவருவதும் பாராட்டுக்குரியதே.

'இந்த ஆண்டு அரசுப் பொதுத்தேர்வில் ஒரே ஒரு மாணவன் தோல்வியடைந்ததால், தேர்ச்சி 99.9 சதவீதமாகக் குறைந்துவிட்டது' என்று வருத்தத்தோடு தெரிவித்தார் பள்ளித் தலைமையாசிரியர் திரு.முரு. வள்ளியப்பன் அவர்கள். 'இந்த ஆண்டு பள்ளியின் நூற்றாண்டுவிழா, மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளதால், பள்ளிக்குக் கண்திருஷ்டி ஏறபட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் இப்படி தேர்ச்சிவிகிதம் சிறிது குறைந்திருக்கிறது' என்று நான் அவருக்கு ஆறுதல் கூறினேன். அந்த அளவுக்கு, நூறாண்டுக் காலம் தொடர்ந்து சிறந்த பள்ளியாகத் திகழ்ந்து வரும் சிறப்புடையது இந்தப்பள்ளி.

தமிழகத்திலேயே - ஏன், உலகத்திலேயே, ஈட்டிய பொருளையெல்லாம் கல்விப்பணிக்கு ஈந்ததோடு, ஈவதற்காகவே ஈட்டிய இணையற்ற வள்ளல் அழகப்பா, இந்தியத் தேசிய அளவிலே திரைப்படத் துறையில் வெற்றிக்கொடி நாட்டிய ஏ.வி.எம். ஆகியோர் பயின்ற பள்ளி இது. இன்னும் எத்தனையோ வரலாற்றுச் சிறப்புடைய சாதனையாளர்கள் இங்கே உருவாகியிருக்கிறார்கள். இனியும் தொடர்ந்து எத்தனையோ பேர் உருவாக, இந்த ஞான பூமி, உரிய உரமும் வளமும் பெற்றுள்ளது என்று உறுதியாகச் சொல்வேன்.

முன்னாள் மாணாக்கர்கள் மட்டுமல்ல - முன்னாள் ஆசிரியப் பெருமக்களாலும், புகழுக்கும் பெருமைக்கும் உரிய பள்ளியாக இது திகழ்கிறது. உலகப் புகழ்பெற்ற - 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையைக் குமரிமுனையிலும், கலையழகு மிக்க வள்ளுவர் கோட்டத்தைச் சென்னையிலும் அமைத்து, இன்னும் பல சாதனைகளையும் நிகழ்த்தியுள்ள சிற்பி கணபதி ஸ்தபதி அவர்கள், இந்தப் பள்ளியில் கணித ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பது சுவையான செய்தி.

மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியவரும், தேசிய அளவில் மதிப்புறு பேராசியராகத் திகழ்கின்றவரும் ஆகிய முனைவர் தமிழண்ணல் அவர்கள், இப்பள்ளியில் பணியாற்றிச் சென்றவர்களில் ஒருவர்.

'பூங்கொடி' என்னும் புகழ்மிக்க காப்பியம் இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்த கவிஞர் முடியரசன் அவர்கள், தமிழாசிரியராகப் பணியாற்றிய பள்ளி இது.

தமிழ்கூறு நல்லுலகத்தின் கவிஞர்களெல்லாம் பங்கேற்ற காப்பியப் போட்டியில், தமது 'அனிச்ச அடி' என்னும் நூலுக்கு முதல் பரிசுபெற்ற பாவலர் மணி ஆ. பழநி அவர்களும், இப்பள்ளியில் பணியாற்றியவரே.

சமுதாய முன்னேற்றத்தில் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்த கவிஞர்கோ. க. தேசிகன் அவர்கள், மரபுயாப்பில் எண்ணற்ற கவிதைகளைப் படைத்த பெருமகனார். அவர் இப்பள்ளியில் பணியாற்றிப் பின்னர் அழகப்பா கல்லூரியில் பேராசிரியராகப் பணியேற்றபோது, அவரால் பயிற்றுவிக்கப் பெறும் பேறுபெற்றவர்களில் எளியேனும் ஒருவன்.

இத்தகைய தமிழறிஞர் பெருமக்களால், இப்பள்ளிக்குப் பெயரும் புகழும் தமிழக வரலாற்றில் இடம் பெற்றது எனலாம்.

இன்றும் இப்பள்ளியில் புகழுக்கும் பெருமைக்கும் உரிய ஆசிரியப் பெருமக்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதையும், இவர்களால் வருங்காலத்தில் மேலும் பல சாதனையாளர்களும் புகழாளர்களும் உருவாக்கப் பெறுவார்கள் என்பதையும் உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

இன்று, நேற்றல்ல, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே, இந்தப் பள்ளியோடு எனக்கு ஏற்பட்டிருந்த தொடர்புகளை, மலரும் நினைவுகளாக, மனத் திரையில் மீள்பார்வையிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், நான் கோட்டையூரிலிருந்து மாட்டுவண்டியில் வந்து இந்தப்பள்ளியில்தான் E.S.L.C அரசுத் தேர்வு எழுதினேன்.

கோட்டையூர்ப் பள்ளியில் படிப்பு முடித்து, E.S.L.C கணக்கில் 100-க்கு 100 மதிப்பெண் வாங்கியும் எனக்கு ஒன்பதாம் வகுப்புப் படிக்க S.M.S.V பள்ளியில் இடம் கிடைக்கவில்லை. பக்கத்து ஊரான கண்டனூரில் உள்ள உயர்நிலைப்பள்ளியிலும் இடம் இல்லை. பக்கத்தில் வேறெந்த உயர்நிலைப்பள்ளியும் இல்லாததால், S.M.S.V பள்ளி போல, தொன்மைச் சிறப்புமிக்க பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர்நிலைப்பள்ளிக்குப் போய்ச் சேர்ந்தேன். படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் ஐந்து மைல் நடந்துபோய்த்தான் படிக்க வேண்டும் என்ற தலையெழுத்து இருக்கும்போது, வீட்டிலிருந்து தெற்குத்திசையில் நடந்தாலென்ன, வடக்குத் திசையில் நடந்தாலென்ன?

படிக்க இடம் இல்லையென்றாலும், S.M.S.V பள்ளியோடு எனக்கு, கால்பந்து விளையாட்டு மூலம் தொடர்பு இருந்துவந்தது. அந்தக் காலத்தில் மாவட்ட அளவில் (மாவட்டம் என்றால், இராமநாதபுரம் வரை, நீண்ட, பெரிய மாவட்டம்) கால்பந்து விளையாட்டுக்குப் புகழ் பெற்றது S.M.S.V பள்ளிக்குழு. அவர்களோடு எங்கள் பள்ளிக் குழு, அடிக்கடி போட்டியிட்டுப் போராடித் தோற்கும் வழக்கம் இருந்தது.

பிறகு, அழகப்பா கல்லூரியில் பி.ஏ. தேர்வு முடித்ததும், மத்திய அரசின் நேஷனல் சாம்பிள் சர்வே துறையில் வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன். அதற்கான நேர்முகத்தேர்வு, மதுரையில் வைத்திருந்தார்கள். தேர்வுக்குழுவினர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் பலர் விடையளித்துவிட்டார்கள். கடைசியில் - குழுவில் கல்கத்தாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி கேட்ட ஒரு கேள்வி- "அண்மையில், உலகமெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்ட விமானவிபத்து எது?" - என்ற கேள்வி, எல்லோரையும் தலைகுப்புற வீழ்த்திவிட்டது.

நான் மட்டும் சரியான பதிலைச் சொன்னேன்:
"உலகக் கால்பந்துப் போட்டிக்காக, அர்ஜென்டினா நாட்டிலிருந்து சென்ற உலகப்புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் அனைவரையும், ஒரே சமயத்தில் பலி கொண்டு, அந்த நாட்டின் வெற்றியையும் சாகடித்த விமான விபத்து."

அடுத்து, வேலைக்கு விண்ணப்பங்கள் அனுப்பிக்கொண்டே, பொழுதுபோக்காக அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தேன். பி.டி பட்டம் பெற்றதும் என் மாமனாரின் நண்பர் ஒருவர் "எஸ்.எம்.எஸ் ஸ்கூலில் ஒரு கணக்கு வாத்தியார் வேலை காலியாயிருக்குனு கேள்விப்பட்டேன். நீ போய் ஹெட்மாஸ்டரைப் பார்!" என்று ஆற்றுப்படுத்தினார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, மறுபடி அந்தப் பள்ளிக்குள் நுழைந்தேன். தலைமையாசிரியர் அறையில் ஹெட்மாஸ்டர் ஆறாவமுத அய்யங்கார் அவர்கள் வீற்றிருந்தார்கள். ஒல்லியான உருவம் தான். ஆனால் முகம் எங்கும் கம்பீரம். கண்களில் அறிவின் தீட்சண்யம், குரலில் அனுபவத்தின் கனம்.

என்னை மேலும் கீழும் பார்த்து அளந்துவிட்டு கணக்குப் பாடத்தில் குறுக்கும் நெடுக்குமாக, கடகட என்று கேள்விகளைக் கேட்டார். நான் பயந்தபடியே மெலிந்த குரலில் மடமட என்று பதில்களைச் சொன்னேன்.

"பேஷ் !... பேஷ் !... இன்னிக்கே நோக்கு அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் டைப் செஞ்சு கொடுத்திடச் சொல்றேன்..உடனே வேலையிலே ஜாய்ன் பண்ணிரு" என்றார் அந்த ஹெட்மாஸ்டர். அன்றைக்கு ஜுன் மாதத்தில் நடுவில் ஒருநாள் 16 அல்லது 17 ஆம் தேதி. இந்தத் தேதியிலே சேர்ந்தால் முழுதாக மாதச் சம்பளம் கொடுக்க முடியாது. ஒரு மாதத்திற்கு 85 ரூபாய் சம்பளம் என்றால் 13 நாள் அல்லது 14 நாட்களுக்கு எவ்வளவு ரூபாய் சம்பளம் என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். ஆகவே முதல் தேதி வேலையிலே சேர்ந்தால், மாத முடிவில் முழுதாக 85 ரூபாய் சம்பளம் வாங்கலாம். இப்படிக் கணக்குப்போட்டது எனது "புத்தி கெட்ட மூளை" ..அடுத்த மாதம் முதல் தேதியை எதிர்பார்த்திருந்தேன்.

இடையில் திடீரென்று அரசுக் கல்வித் துறையிலிருந்து "புதுக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில் கணக்கு ஆசிரியராக உடனே பணியில் சேருங்கள்" என்ற ஆணை வந்துவிட்டது.

"அந்தக் காலத்தில் கக்கூஸ் கழுவும் வேலை என்றாலும் கவர்மெண்ட் உத்தியோகம்" என்ற "கௌரவம்" இருந்தது. அரசுப் பள்ளியில் ஆசிரியர் உத்தியோகத்தில் சேர்ந்தால் படிப்படியாக முன்னேறி D.E.O முதல் D.P.I வரை உயரலாம் என்ற நிலை இருந்தது. அதை விட இன்னொரு பொருளாதாரக் கவர்ச்சி இருந்தது. மற்ற பள்ளிகளை விட அரசுப் பள்ளிகளில் கணக்கு ஆசிரியர்களுக்கு மட்டும் அடிப்படைச் சம்பளம் 100 ரூபாய். அதாவது கணக்கு ஆசிரியர் என்பதற்காக 3 இன்கிரிமென்ட்ஸ் (3X5 ரூபாய்) அதிகமாக முன்னமேயே கொடுப்பார்கள். அந்தக் காலத்தில் 85 ரூபாயை விட 100 ரூபாய் அதிகப்படியான வருமானம் ஆகவே என்னைப் புதுக்கோட்டைக்கு அனுப்பிவைத்தார்கள் என் குடும்பத்தார்.

திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணிக்குச் சேர்ந்த பிறகும், S.M.S.V பள்ளியோடு எனக்குத் தொடர்பு இருந்து வந்தது. பள்ளியின் தலைமையாசிரியராக என் மைத்துனர் திரு.சுப. பழநிவேலு அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, பள்ளியோடு தொடர்பு மிகுந்தது. என்னுடைய படைப்புகள் பலவற்றுக்கு, பள்ளியின் நூலகத்திலுள்ள புத்தகங்கள் பெரிதும் துணை செய்ததை நான் நன்றியுடன் நினைவில் வைத்திருக்கிறேன்.

பள்ளியின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும், அளப்பரிய ஆர்வமும் ஈடுபாடும் துடிப்பும் மிக்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் - அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் ஆட்சிக் குழு உறுப்பினர் திருமிகு. சத்தி அ. திருநாவுக்கரசு அவர்கள், தொழில் வணிகக் கழகத் தலைவர் திருமிகு. முத்து. பழநியப்பன் அவர்கள், ரோட்டரி முன்னாள் ஆளுநர் திருமிகு. எஸ். பெரியணன் அவர்கள் ஆகியோரிடம் எளியேனுக்கு ஏற்பட்ட தொடர்புகளும், பள்ளியுடனான தொடர்பாகப் பரிணமித்துள்ளன.

காரைக்குடியில் கடந்த 11 ஆண்டுகளாக நடைபெறும் புத்தகத்திருவிழாவில் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியப் பெருமக்கள், அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோரின் உதவியையும், ஒத்துழைப்பையும் பங்கேற்பையும் நன்றியோடு போற்றி மகிழ்கிறேன். புத்தகத் திருவிழாவின் முதல் நிகழ்ச்சியான மாணவர் பேரணி, S.M.S.V பள்ளியிலிருந்தே தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

பள்ளியின் எதிர்கால வளர்ச்சியிலும் சிறப்பிலும் புகழிலும் ஆர்வம் கொண்டுள்ள நலம் விரும்பிகளில் நானும் ஒருவனாகப் பங்கேற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

கல்வி, கலைகள், விளையாட்டு, தனித்திறன்கள் முதலான பல்வேறு துறைகளிலும், என்றென்றும் நிலைத்த புகழுடனும் பெருமையுடனும் வளத்துடனும் நிலைபெற்றிருக்கின்ற பள்ளியை 'இன்று போல் என்றும் வாழ்க' என வாழ்த்தலாம். 'என்றும் உள தென்றமிழ்' என்று போற்றுவது போல, 'என்றும் உள எஸ்ஸெம்மெஸ்' என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.



காரைக்குடி கண்ட கல்விக் கோயில்

இயக்குநர் **SP. முத்துராமன்**
முன்னாள் மாணவர்

கல்வி அதிகாரத்தில் வள்ளுவர் சொல்கிற
"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

என்ற குறளுக்கு ஏற்ப மாணவர்கள் கல்வி பெற, அதுவும் பிழையில்லாத கல்வி பெற வேண்டும். அப்படிப்பட்ட கல்வியை வழங்குவது பள்ளிகளின் கடமை. அந்தக் கடமையை சிறப்பாக நிறைவேற்றும் பள்ளிதான் S.M.S.V. மேல்நிலைப் பள்ளி.

அந்தப் பள்ளி 13.6.1913 அன்று திருவாசக மடத்தில் MTT.VE. வெள்ளையன் செட்டியார் அவர்களால் தொடங்கப்பட்டது. ஆரம்பப் பள்ளியாக ஆங்கில முறைக்கல்வியோடு தொடங்கப்பட்டது. திவான் பகதூர், AVPL. சிதம்பரம் செட்டியார் பள்ளிக்கான கட்டிடங்களைக் கொடையாகக் கொடுத்தார்கள்.

பள்ளியின் வெள்ளிவிழா 1938 ல் கொண்டாடப்பட்டது. வள்ளல் அழகப்பர் அவர்கள் அதற்குத் தலைமை தாங்கினார்கள். அதே போல் பவள விழா AS. அண்ணாமலை செட்டியார், S.N. நாராயணன் செட்டியார் மற்றும் முத்து பழனியப்பன் ஆகியோரால் சிறப்புற நடத்தப்பட்டது.

முதல் தலைமையாசிரியர் மீனாட்சி சுந்தரம் தொடங்கித் தற்போது தலைமையாசிரியர் MR.வள்ளிப்பன் வரை திறமையான தலைமையாசிரியர்கள் அமைந்தார்கள். மாணவர்களுக்குச் சிறந்த கல்வி வழங்கி பள்ளியை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள்.

திரு. பெரியண்ணன் செட்டியார் முதல் தாளாளர், திரு. சி. மெய்யப்பன் தற்போதைய தாளாளர் அனைவரும் பள்ளியின் வளர்ச்சிக்குத் தேவையான வழிகாட்டுதலையும், ஆதரவையும் வழங்கினார்கள்.

927ல் பழைய மாணவர் கழகம் அமைக்கப்பட்டது. பழைய மாணவர்களில் வள்ளல் அழகப்ப செட்டியார், ஏவி. மெய்யப்பச் செட்டியார், நீதிபதி M. சொக்கலிங்கம், போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

அறிஞர் தமிழண்ணல், கவியரசு முடியரசன், பாவலர் மணி, ஆ. பழனி, நல்லாசிரியர் நடராஜன் போன்ற பல மேதைகள் இப்பள்ளியில் பணியாற்றியிருக்கிறார்கள். இப்பள்ளி சிறந்த ஆசிரியர்களைக் கொண்டிருப்பதால் மாணவர்கள் பள்ளிப் பாடங்களையும் தாண்டி உலக அறிவு பெற்று வருகிறார்கள். இந்தப் பள்ளியில் நான் 6 & 7 ம் வகுப்புகளில், மாணவனாகப் படித்ததைப் பெருமையாக நினைக்கிறேன்.

நூற்றாண்டு விழா காணும் இப்பள்ளி, பல லட்சம் மாணவர்களை, "மனித நேயமுள்ள மனிதர்களாக" உருவாக்க மனமார வாழ்த்துகிறேன்.



நெஞ்சினலைகள் ஓய்வதில்லை

முனைவர் **பழ. சபாரெத்தினம்,**
மேனாள் பதிவாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
பழைய மாணவர், 1952 - 1959.

கரையிலாக் கல்விப் பணியில் நூறாண்டுகளாக இயங்கிவரும் பள்ளி, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலா உயர்நிலைப் பள்ளி (இன்று மேல்நிலைப் பள்ளி). பள்ளி நூற்றாண்டு விழாக் காண்பதை எல்லோருடனும் கண்டு மகிழ்வதில் பழைய மாணவனகிய நான் பெருமிதம் அடைகின்றேன்.

பழைய மாணவர் பல்லாயிரம் பேர்; முதன்மையானவர் கோடி கொடுத்த கொடைஞன், குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வம், வள்ளல் அழகப்பர், பழைய மாணவர் சங்க வெள்ளி விழா, வள்ளல் அழகப்பர் பங்கேற்றார். அழகப்பாவின் ஆசிரியர், முன்னாள் தலைமை ஆசிரியர் N.S.V (N.V. வெங்கடராமைய்யர்) விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். தரையில் அமர்ந்திருந்த ஆசிரியருக்கு மேடையில் நாற்காலி போட்டு அமரச் செய்தால்தான், தான் மேடை ஏறுவேன் என அழகப்பர் சொன்னார். இருவருக்கும் உரிய ஆசனங்கள் தரப்பட்டன. அழகப்பர் சொன்னாராம் "I am seeing Mr.N.S.V. only today without a cane in his hand". N.S.V. அவ்வளவு கண்டிப்பானவர். என் சின்னய்யா மகன் டெல்லி மட்டம் லேனா, திருமணமான பின்பு தாமதமாகப் பள்ளிக்குச் சென்றிருக்கிறார்; பிரம்படி வாங்கியிருக்கிறார். அடுத்த நாளும் தாமதமாகச் சென்றிருக்கிறார். எங்கள் சின்னய்யா, 'அவனுக்குக் கல்யாணமாகி விட்டது. அவனை அடிக்கலாமா?', என்று கேட்க, N.S.V. 'அப்ப வீட்ல வச்சிக்குங்க. இன்று லேட்டா வந்ததனால் இன்றைய முறைக்குப் பிரம்படி வாங்கிக்கட்டும்' என்றாராம். பின்னாளில் மாப்பிள்ளையாக வந்த மாணவருக்கும் பிரம்படி கொடுத்த பெருமை N.S.V. -க்கு உண்டு. வெள்ளி விழாவில் வள்ளல் அழகப்பர் ரூபாய் பத்தாயிரத்தை N.S.V.-க்கு நன்கொடையாக அளிக்க, அதைப் பள்ளி பழைய மாணவர் சங்கத்திற்கே அளித்த பெருமை N.S.V. யைச் சாரும்.

English Dictionary -ல் நூறு வகை வைத்திருப்பாராம். ஒரு அகராதியில் இருந்து அகர வரிசைப்படி 100 வார்த்தைகளுக்கு மேல் சொல்லக்கூடிய திறமை, ஞாபகசக்தி படைத்தவராம். அவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகத் திகழ்ந்த ஸ்ரீமான் ஸ்ரீனிவாச சாஸ்திரியுடன் ஆங்கிலப் புலமையைப் பரிமாற்றம் செய்து கொண்டவர். என் சித்தப்பா முத்து விலாஸ் மாணிக்கம் செட்டியார் (மலேசியாவில் 'இங்கிலீஷ் மாவன்னா' எனப் பெயர்). வள்ளல் அழகப்பர், 'நோட்டரி பப்ளிக்' பார்த்தசாரதி அய்யங்கார், A.V.M, ஆகிய நால்வரும் வகுப்புத் தோழர்கள். First Batch S.S.L.C., என் சித்தப்பாவுக்கு

கணிதத்தில் 100-க்கு 120 மதிப்பெண்களாம். காரணம் கேட்டால், N.S.V. சரியான விடைகளுக்காக 100. எப்படிச் செய்தேன் என்பதற்கான வழி - விளக்கம் எழுதியிருக்கிறானே அதற்காக 20 என்பராம். சித்தப்பா மகன் மா. கண்ணப்பன் நாடறிந்த நற்கவிஞர். 1941-ல் N.S.V., SMSV பள்ளியை விட்டுப் போக வேண்டிய கட்டாயம். மன்னார்குடி நேஷனல் ஹைஸ்கூலுக்குச் சென்றார். அவர் மேல் வைத்திருந்த அபிமானத்தாலும், மரியாதையாலும், என் தகப்பனார் என் அண்ணன் பழ. சண்முகம் அவர்களையும், AVM தம்மகன் AVM.PL. -ஐயும், எங்கள் பங்காளி. தமிழில்லம் கட்டராமையா, அவர்தம் மகன் பழ. அழகப்பன் அவர்களையும் N.S.V. -யின் பராமரிப்பில் மன்னார்குடியில் படிக்க வைத்தார்கள்.

கணக்கில் ஜீனியஸ் R.S (R. சுந்தரராஜ ஐயங்கார்) அவர்களின் தந்தையார் இராமனுஜ ஐயங்கார் தலைமையாசிரியர்களில் ஒருவர். அவரைப் பாராட்டி,

"கண்கள் திறந்தெமது காது குளிரவே
பண்களமை பாடல் பொருளுரைப்பாய் - மண் குளிர
பெய்மழை போல் பேசு பெரும, உமதடிக்கு
மெய் வணக்கம் மெய்வணக்க மே.

க. தேசிகனார் எழுதிய பாடலை நினைவு கூர்ந்து என்னிடம் சொல்லியவர், பள்ளியின் முன்னாள் மாணவர் அமராவதிபுதூர் திரு. RM.KP.வெங்கா அவர்கள். பாடலின் சிறப்பு: தலைமையாசிரியருக்கிருந்த, மங்கலான கண் பார்வை, காது கேளாமைக் குறைபாடுகளை மறந்து, நிறைவான திறமையைப் பாராட்டியது. தலைமையாசிரியர்கள் (தற்போதுள்ள திரு. வள்ளியப்பன் உட்பட) பன்னிருவரில் எழுவரை யானறிவேன். நான் சேர்ந்த போது தலைமையாசிரியர் KR.S (KR. சீனிவாசய்யர்). பின்னர், V.A. (V. ஆறாவமுது ஐய்யங்கார்),

T.S.R (T.S. ராஜகோபாலன் - ஐய்யர், தெலுங்கு பிராமணர், N.S.V -க்கு உறவினர்). பாரதி பித்தர். அவர் வீட்டிற்கு, பாரதி இல்லம் எனப் பெயர் சூட்டியவர். தமிழ்த் துறையில் மும்மணிகள், ப. மாசிலாமணி தேசிகர் (P.M.) கவிஞர் முடியரசன் (K.S.D.-கா.சு. துரைராஜ். துரைராஜின் தமிழ் வடிவம் முடியரசன்), தமிழண்ணல் RM.P. - இராம. பெரியகருப்பன்) மாணவர்களில் சிலபேருக்குத்தான் ஆசிரியர்களின் பெயர்கள் தெரியும். இன்றும் கூட அப்படித்தான். முழுப்பெயர்களை எழுத இடமின்மையால் கால அட்டவணையில் பெயர்களின் சுருக்கத்தை மட்டும் அதுவும் ஆங்கிலத்தில், எழுதி வந்ததால், மாணவர்கள் K.S.D., RM.P., என்றுதான் அறிவார்கள். கணக்குப் பாடம் நடத்தியவர் V.G. (வை. கணபதி - பின்னாளில் கணபதி ஸ்தபதி என்றறியப்பட்டவர்). பள்ளியில் வேலை பார்த்த ஆசிரியர்களில் மேற்கொண்டு படித்துத் தங்களைக் கல்லூரிப் பேராசிரியர்களாக ஆக்கிக் கொண்ட பெருமை சிலரைச் சாரும். எனக்குத் தெரிந்தவரை திருவாளர்கள் க. தேசிகன், பூ. அமிர்தலிங்கம், தமிழண்ணல், S. சிதம்பரம் (S.Cd.) ஆகியோர் தங்களை மேம்படுத்திக் கொண்டார்கள்.

பள்ளித் தாமரை (ஆண்டு மலர்) ஆண்டுக்கொருமுறை மலரும். ஆசிரியர் மாணவர்கள் பங்கதிகம். அதிலோர் இதழில், குழறுக, கழறுக என்ற தலைப்பில் B.S.M. (B.S. Muthu Iyer). "அவளை அவலளக்கச் சொன்னேன். அவள் அவலளேன் என்றாள். இவளை அவலளக்கச் சொன்னேன். இவளும் அவலளேன் என்றாள். அவளும் இவளும் அவலளக்காவிட்டால் எவள் அவலளப்பாள்?" என்று எழுதியிருந்தார்.

அரசியல் சமுதாயப் பணிகளில் குறிப்பிடத்தக்க பழைய மாணவர் இருவர். ஒருவர் முன்னாள் (என் முன்னர் படித்தவர்) M.L.A. சினா. தானா. காரைக்குடியில் குடிநீர்த் தொட்டிகள் அமைவதற்கு அடித்தளம் இட்டவர். அடுத்தவர், பின்னர் படித்து ஒன்றாகப் படித்த காரைக்குடி குடிநீர்க் காவலர் பழ.கருப்பையா. சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்து இயக்குநராகப் பரிமளிப்பவர் இராம.நாராயணன். நாடறிந்த நல்லதொரு இயக்குநர் எஸ்.பி.முத்துராமன். கதை வசனகர்த்தா காரைக்குடி நாராயணன். நான் படித்தபோது படித்தவர் மிருதங்க வித்வான் காரைக்குடி மணி - ஆசிரியர் T.R.-ன் (T. ராமநாத அய்யர்) மகன் எனக்கு முன்னர் படித்தவர், இன்றைய கோவிலூர் ஆதின கர்த்தர், சீர்வளர் சீர் மெய்யப்ப சுவாமிகள்.

என் இளமையில் எனக்குத் திருமணம் -1958 ஜனவரி. 1958 மார்ச் S.S.L.C யில் தோல்வி. 1958 டிசம்பரில் மகள். 1959 மார்ச் S.S.L.C.- தேர்வில் தேர்ச்சி. திரு.பழ.கருப்பையா என்னைப் பார்த்தால் மறவாமல், சபாபதி ஆத்தா, சபாபதிக்குச் சின்ன பிள்ளையிலே - எஸ்எஸ்எல்சியிலே - கால்கட்டுப் போட்டு விட்டார் என்று சொல்லி என் புராணத்தைப் பிறர் அறியச் செய்வார்.

கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பற்பல பரிசுகள். பள்ளி ஆண்டு விழாவில் நாடகங்களில் பங்கேற்றது மறக்க முடியாது. முதல் வேடம் ராஜ ராஜ சோழனில் பெரிய குந்தவையார். கிருஷ்ணா பிரஸ் மீனாட்சி சுந்தரம், குந்தவை. இயக்குனர் முத்துராமனின் இளவல் சுப.செல்வமணி, ராஜேந்திரன். 'M.R.S.' வீட்டு வேணு, குண்டுக் கருப்பையாவாகவே மாறிப் போனார். பின்னர் ராஜாதேசிங்கில் திருவண்ணாமலை அரசர். இறுதியாக வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்க்கையில்தான் எதிரியென்றில்லை; என் சித்தப்பா மகன் மா. வீரப்பன், ஜாக்ஸன் துரை. நாடகம் முடிந்ததும் எங்கள் அத்தான் ரெங்கலெட்சுமணன் எங்கள் இருவருக்கும் மாலைகள் அணிவித்துப் பாராட்டியதை மறக்க முடியாது. நாடகங்களில் ஒப்பனை, அண்ணன் - சித்தப்பா - அரு.(குறள்) இலக்குவன்.

அக்காலத்தில் பிராமணர்கள், கிறிஸ்துவர்கள் என இரு பிரிவினரிடையே இருந்த கல்வியை (விதிவிலக்கு - தமிழ்ப் பண்டிதர்கள்) - வளர்த்த கல்வியை - இன்று இனப்பாகுபாடின்றி எல்லோரும் கற்பிக்கின்ற நிலை உண்டாகி உள்ளது. எவ்வளவோ எழுதலாம். சுருக்கம் கருதி, நிறைவாக, பள்ளியை நிறுவிக் காத்துவந்த பெருமக்களுக்கும் அவர்தம் வழி வந்தோருக்கும், பள்ளியின் முன்னாள் இன்னாள் ஆசிரியருக்கும் பாராட்டுக்களையும், பள்ளியின் பழைய இன்றைய மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பள்ளி ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்: பணிபுரிக, இப்பள்ளியில் பணியாற்றுவதைப் பெரும் பேறாகக் கருதுக, ஈடுபாட்டுடன் செயல்படுக, மாணவர்களுக்கு: கல்வி கரையில. எனவே படியுங்கள், படியுங்கள், படித்துக் கொண்டே இருங்கள். முடிவாக,

பாரத நாடு பழம்பெரும் நாடு
SMS வித்யாசாலை அதிலோர் அங்கம்
நீரதன் புதல்வர். இந்நினைவகற்றாதீர்.



நூற்றாண்டு விழாக் காணும் பள்ளி வாழ்க! வளர்க!

முனைவர் சே. குமரப்பன்,
முதல்வர், நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி,
கோவிலூர்

சிவகங்கை மாவட்டம் சிறிய மாவட்டம். நதிகள், மலைகள், கடற்கரைகள் எனச் சொல்லும் அளவு இயற்கை வளங்கள் இல்லை. பெரிய தொழிற்சாலைகளும் இல்லை. இருந்த போதிலும், பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடிய கணியன் பூங்குன்றனார், ஒக்கூர் மாசாத்தியார், முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீரமங்கை வேலு நாச்சியார், மருது சகோதரர்கள், திருமந்திரத்தைப் பாமரர்க்கு உரைத்த இராமானுஜர் போன்றோர் வாழ்ந்த மாவட்டம். தொழிலதிபர்கள் ஏ.எம்.எம். அருணாசலம் செட்டியார், கரு.முத்து.தியாகராசன் செட்டியார், ராஜாசர் குடும்பம், பத்திரிக்கையாளர் குமுதம் எஸ்.ஏ.பி. அண்ணாமலை, அரு. ராமனாதன், தமிழ்வாணன், தமிழறிஞர்கள் டாக்டர் வ.சுப.மா, ராய.சொ., கம்பனடிப்பொடி, சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா, புகழ் பெற்ற கணபதி ஸ்தபதி, மா.வைத்தியநாத ஸ்தபதி போன்றோர் தோன்றிய மாவட்டம்.

அம்பத்தூரைத் தொழில் நகரமாகவும், கோடம்பாக்கத்தைச் சினிமா நகரமாகவும் மாற்றியவர்கள் தோன்றிய பூமி. இத்தகைய சிறப்பு மிக்க மாவட்டத்தின் தலையாகத் திகழ்வது காரைக்குடி.

காரைக்குடி பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. தமிழ்த் தாய் கோவில், கம்பன் மணி மண்டபம், கண்ணதாசன் மணி மண்டபம், மத்திய மின் வேதியியல் ஆய்வகம் போன்ற பல புகழ் பெற்ற கட்டிடங்களும், நிறுவனங்களும் உள்ள நகரம். சிவகங்கை தான் மாவட்டத்தின் தலைநகரம் என்றாலும் அறிவிக்கப்படாத உண்மையான தலை நகரமாகக் காரைக்குடி விளங்குகிறது. சிவகங்கை மாவட்டத்திற்கு மட்டுமல்ல செட்டி நாடு அல்லது நகரத்தார்களின் தலை நகரமாகத் திகழ்கிறது. மாவட்டத்தின் முதல் புகை வண்டி சந்திப்பு, முதல் நகராட்சி, பாரதி, வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, ஜீவா, வ.உ.சி, டாக்டர். ராதாகிருஷ்ணன், ஜவஹர்லால் நேரு, சர்.சி.வி. ராமன், எஸ்.எஸ். பட்நாகர், சர்சிபி ராமசாமி ஐயர், ஏ.எல். முதலியார் போன்றவர்கள் கால் பதித்த பூமி.

சிவகங்கை மாவட்டத்தின் சிரசாகத் திகழ்வது காரைக்குடி. அச்சிரசின் நெற்றித் திலகமாகத் திகழ்வது நூற்றாண்டு விழாக் காணும் S.M.S.V பள்ளி. சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மூன்று மாவட்டத்திற்கும் முதலாவதாகத் தோன்றிய உயர்நிலைப்பள்ளி என்ற சிறப்புக்குரிய பள்ளி.

தேவகோட்டைச் சாலையில் ஸ்டுடியோ அமைத்துப் படமெடுத்து, எண்ணற்ற நடிகர்களை உருவாக்கி திரை உலகின் அத்துணை துறைகளிலும் முத்திரை பதித்த திரையுலக முன்னோடி ஏ.வி.மெய்யப்ப செட்டியார். குடியிருந்த வீடும் கொடுத்து கல்லூரி அமைத்த கொடை வள்ளல் ராம. அழகப்ப செட்டியார், 75 திரைப்படங்கள் 25 தொலைக்காட்சித் தொடர்களை இயக்கிய பெருமைக்குரிய இயக்குநர் S.P. முத்துராமன், 100 படங்களுக்கு மேல் 8 மொழிகளில் திரைப்படங்கள் தயாரித்து, சட்டமன்ற உறுப்பினர், திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர், இயல் இசை நாடக மன்றத் தலைவர் எனப் பதவி வகித்த ராம. நாராயணன், 25க்கும் மேற்பட்ட படங்களுக்குக் கதை வசனம், 500 திரைப்படப் பாடல்கள் என எழுதிப் பல்வேறு திரைப்படங்களைத் தயாரித்து இசைஞானி இளையராஜாவை அறிமுகப்படுத்திய பஞ்சு அருணாசலம், 30 படங்களைத் தயாரித்து, பல படங்களுக்குக் கதை வசனம் எழுதி விருது பெற்ற 'திக்கற்ற பார்வதி', 'அச்சாணி' படங்கள் புகழ் காரைக்குடி நாராயணன், உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றி பசுமைத் தீர்ப்பாய நீதிபதியாகப் பணியாற்றிவரும் நீதியரசர் சொக்கலிங்கம் போன்ற சாதனையாளர்கள் நூற்றுக்கணக்கானோரையும் பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள், அறிஞர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்களையும் உருவாக்கிய பெருமைமிகு பள்ளி.

அனிச்சஅடி புகழ் ஆ. பழனி, புகழ் பெற்ற கவிஞர் முடியரசன், பல்வேறு நூல்கள் படைத்துப் பல்கலைக்கழகத் துறைத் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் தமிழண்ணல் போன்றோர் ஆசிரியராகப் பணிபுரிந்த சிறப்புக்குரிய பள்ளி.

அண்மைக்காலமாகத் தலைமையாசிரியர் பழனிவேலு தலைமையிலும், தற்போதைய தலைமையாசிரியர் வள்ளியப்பன் தலைமையிலும் சாதனை பல படைத்துப் பீடு நடைபோடும் பள்ளி நூற்றாண்டு விழா காண்பது மன மகிழ்வைத் தருகிறது.

நகரின் நடுநாயகமாக, நகரத்தார் பலரின் நல் உதவியோடு, ஒருங்கிணைந்த சிறப்பான நிர்வாகத்தில் பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு இலவசமாகத் தரமான கல்வி அளித்து வாழ்வில் ஒளியேற்றும் S.M.S.V மேல் நிலைப்பள்ளி மேலும் வளர்ந்து சிறக்கவும் பல நூற்றாண்டு விழாக்களைக் காணவும் வாழ்த்துக்கள்.



என் பள்ளி - நீங்காத நினைவுகள்

சுப. பழநிவேலு

முன்னாள் தலைமை ஆசிரியர்,

மீ.சு. மேல்நிலைப் பள்ளி

1954 ஆம் ஆண்டு.... சிறிய ஆரம்பப்பள்ளியில் ஏட்டுச் சுவடியுடன் படித்து முடித்த பின், ஆறாம்வகுப்பு (I Form) சேரும் கனவைத் தாங்கி, அரைக்கால் டிராயருடன் S.M.S.V. பள்ளியின் நுழைவாயிலில் வந்து நின்றேன். பள்ளியின் தோற்றம் ஏதோ ஓர் அரண்மனையில் நுழைவது போன்ற உணர்வை எனக்குள் ஏற்படுத்தியது. ஆம்!.... ஆறாம் வகுப்பு சேர்க்கைக்கான விண்ணப்பத்தை, முகப்பில் உள்ள சன்னல் வழியே எழுத்தர் திரு. கிருஷ்ணய்யர் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் என் முகத்தைக்கூடப் பார்க்காமல், பெயரைப் பார்த்ததும் வகுப்புப் பிரிவை (A,B,C,.....D) ஒதுக்கிய பாங்கு ஒரு சுகமான அனுபவம். என் போன்றவர்களுக்குப் பெரும்பாலும் 'D' பிரிவுதான். ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை (I Form to VI Form) 40 வகுப்புகள்... அதிகமான மாணவ-மாணவிகள்..பள்ளி முடியும் வேளையில், அதன் முன் மாணவர்கள் கூட்டம் ஒரு திருவிழாக் கூட்டம் போல் இருக்கும்.

பிரதான பள்ளிக் கட்டடத்தின் மையப்பகுதியான முற்றத்தில் ஒரு நெல்லிமரம் இருந்தது. அதன் காய்கள் கீழே விழுந்து கிடந்தாலும், எந்த ஒரு மாணவரும் பள்ளி நேரத்தில் முற்றத்தில் இறங்கி எடுக்க முடியாது. அவ்வளவு கண்டிப்பு....! அம்மரம் 1956 ஆம் ஆண்டு புயலில் வேரோடு சாய்ந்து எங்களை ஆழ்ந்த சோகத்தில் மூழ்கடித்தது.

நான் இங்கு படிக்கும்போது, எங்களது ஆசிரியர்கள் திரு. V. ஆறாவமுது ஐயங்கார், திரு. TS. ராஜ கோபாலய்யர், திரு. R. சுந்தரராச ஐயங்கார், திரு. B.S. முத்து ஐயர், டாக்டர் தமிழண்ணல், கவிஞர் முடியரசன், திரு. மாசிலாமணி தேசிகர், திரு. முத்துசம்பந்தம், பாவலர்மணி ஆ. பழநி, திரு. V. கணபதி ஸ்தபதி (கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை நிர்மாணித்தவர்) மற்றும் பலர் எங்களை ஒரு முகப்படுத்தி, பல்துறைகளிலும் வெற்றிவாகை சூடுவதற்கு உதவியாக இருந்தார்கள்.

இப்பள்ளியில் என் ஆசிரியர் திரு.T.S ராஜகோபாலய்யர் அவர்கள் ஒவ்வொரு மாணவரின் குடும்பவிவரங்களை நேரடியாக அறிந்து, மாணவர் நலனுக்காக அரும்பாடுபட்டவர். அவர் ஒரு தீவிரமான காந்தியவாதி. திரு. B.S. முத்து ஐயர் அவர்களது கம்பீரமான குரல் ,அவர் ஆங்கிலம் மற்றும் அறிவியல் பயிற்றும் போது அவர் கையாளும் அணுகுமுறை ஆகியவை ஒரு தனித் தன்மை வாய்ந்தது. இன்றைய நிலையில் அவர்களது தனித்தன்மையை மற்றவர்வகளிடம் காண்பது அரிதாகும். என்னை முதுகலைத் தேர்வு எழுதும்படி ஊக்குவித்தவரும் அவரே.

விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு.V. பீட்டர் சாமுவேல், மாணவர்களுக்கு பலபயிற்சிகளைக் கொடுத்து பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள ஊக்கமளித்தவர். அவரது தாய்மையுடன் கூடிய தொண்டுள்ளம் என்றும் நினைவு கூரத்தக்கவை.

எங்கள் பள்ளியில் பணியாற்றிய தமிழாசிரியர்கள் அனைவரும் தமிழகம் முழுவதும் அறிமுகமானவர்கள். அந்நாட்களில் பணிபுரிந்த இப்பள்ளி ஆசிரியர்கள் எல்லோரும் மாணவர்களுக்கு நன்கு தெளிவுறக் கற்றுக் கொடுத்தலையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றியதைத் தவிர வேறு ஒன்றும் செய்யத் தெரியாதவர்கள்....பாவம்!! ஆனால் இன்றைய நிலையில் அனைத்தும் மாறுபட்டிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவை யாவும் காலத்தின் மாறுபாடு என மனநிம்மதி அடைவோம்.

இப்பள்ளியில் படிப்பை முடித்துவிட்டு 1960ஆம் ஆண்டில் அழகப்பா கலைக்கல்லூரியில் புகுமுக வகுப்பில் சேர விண்ணப்பம் கொடுப்பதற்காகச் சென்றேன். அப்பொழுது எப்போதுமே எளிமையான தோற்றமுள்ள இயற்பியல் துறை ஆசிரியர் திரு.D. சேஷாத்திரி என்பவர் நான் அரைக்கால் டிராயருடன் நின்ற தோற்றத்தைப் பார்த்து உரத்த குரலில் "நீ எந்தப் பள்ளி" என வினவினார். அவர் ஓர் ஆசிரியர் என்பது எனக்குத் தெரியாது. எனவே எனக்குள் நிறைந்துள்ள என் பள்ளியைப் பற்றிய பெருமித உணர்வுடன் "The Great S.M.S" எனக் கூறினேன். அவருக்கு உணர்ச்சியுடன் மகிழ்ச்சி மேலிட்டு நானும் அதே "The Great S.M.S" தான் எனப் பதிலளித்தது எனக்கு பெரும்வியப்பைத் தந்தது. பின்னர் அவர் என்னைக் கல்லூரியில் பெயர் சொல்லி அழைக்காமல் "The Great S.M.S" என்றே அழைத்தார். இன்று எம்பள்ளியில் 100வது ஆண்டு நிறைவு விழாவின் போது "The Great S.M.S" என்பதன் உண்மையை பெருமையுடன் திரும்பத் திரும்ப நினைவு கூர்ந்து மகிழ்கிறேன்.

நான் கல்லூரியில் சேர்ந்த போது, வழங்கப்பட்ட கால அட்டவணையில் வள்ளல் அழகப்பரைப் பற்றிய குறிப்பில், "School Education at S.M.S Vidyasala, Karaikudi, and it is the Pioneer institution to start this college" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. வள்ளல் அழகப்பர் மறைந்து விட்டாலும், அவர் தாமே ஈட்டிய பொருளனைத்தும் கொடுத்து நிறுவிய கல்வி நிறுவனங்கள் அவரது அழியாப் புகழை நிலைபெறச் செய்துள்ளன.

வள்ளல் அழகப்பர் இப்பள்ளியின் பழைய மாணவர் மட்டுமல்ல. இப்பள்ளியின் பழைய மாணவர் சங்கத்தின் ஈடு இணையில்லாத செயலராகவும் தம் வாழ்நாளின் இறுதிவரை செயலாற்றியுள்ளார். அச்சங்கத்தின் மூலம் பள்ளியின் வளர்ச்சிக்கு அவருடன் சேர்ந்து சேவை செய்தவர்களில் திரு.AV. மெய்யப்பச் செட்டியார், திரு.V.ஆறாவமுது ஐயங்கார் திரு. பார்த்தசாரதி ஐயங்கார், மற்றும் பலர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1965ஆம் ஆண்டு இப்பள்ளியின் பழைய மாணவர் என்ற முறையில் எனக்கு அறிவியல் ஆசிரியராகப் பணியில் சேர வாய்ப்புக் கிடைத்தது. என் ஆசிரியப்பணி சிறக்க எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தந்தவர்கள் என் பள்ளி ஆசிரியர்களே. நிர்வாகத்தினரால் 1986 ஆம் ஆண்டு எனக்குப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அந்த ஆண்டில் இப்பள்ளியின் பழைய மாணவர்களான திரு.அ.சொ. அண்ணாமலை செட்டியார், திரு.மெ.செ.மெ.மெ. சொக்கலிங்கம் செட்டியார், திரு.சா.நா.நாராயணன் செட்டியார், திரு. கம்பார் பழ.நா.முத்தையா செட்டியார்,

திரு. சத்தி.அ. திருநாவுக்கரசு செட்டியார், திரு.PR. சொக்கலிங்கம் செட்டியார், திரு.முத்துபழநியப்பன், திரு. T. பார்த்தசாரதி ஐயங்கார் மற்றும் பலரது இடைவிடாத ஆர்வம் மற்றும் வழிகாட்டுதல் மூலம், பழைய மாணவர் சங்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு நன்முறையில் இயங்கி வருகிறது. பழைய மாணவர் சங்கத்தின் நன்கொடையால் பள்ளிக்குப் பல வகுப்பறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. அவர்களது முயற்சியினால் 1987 ஆம் ஆண்டு இப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

பள்ளிக்குப் பழைய மாணவர்கள் வரும்போதெல்லாம், நான் உரிமையுடன் விடுத்த வேண்டுகோளை அவர்கள் முழுமனத்துடன் ஏற்று, பலவகைகளில் அனைவரும் பள்ளியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். அவர்களுக்கு என் பணிவான நன்றியை இத்தருணத்தில் புலப்படுத்திக் கொள்கிறேன். பழைய மாணவர் சங்கம் புதுப்பிக்கப்பட்டு, அதன் செயலாக்கம் வரும்போது அவர்களது ஈடுபாட்டால் தான், இப்பள்ளியில் அழகுமிகு கட்டிடங்கள், ஆய்வகங்கள், புதுத் தளவாடங்கள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுப் பள்ளி புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. அவர்களது அர்ப்பணிப்புப் பணி என்றும் அனைவராலும் நினைவு கூரத்தக்கவை.

நான் இப்பள்ளியிலேயே படித்து, அறிவியல் ஆசிரியராகவும் பின்னர் தலைமையாசிரியாராகவும் பணிபுரியும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். அது எனக்குக் கிடைத்த முன் ஜென்ம புண்ணியத்தின் பலன் .. இப்பள்ளியில் எந்தெந்தத் துறையில் குறைபாடுகள் உள்ளன என்பதை நான் ஓரளவு அறிந்திருந்ததால் அவற்றைக் களையும், முயற்சியில் முழுமையாக ஈடுபட்டேன். அப்போது பள்ளிக்குழுச் செயலர் மற்றும் உறுப்பினர்களின் முழுஒத்துழைப்பும் அவர்கள் அளித்திருந்த நிர்வாக சுதந்திரமும் மற்றும் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் என்றும் நினைந்து போற்றுதற்கு உரியன. அவர்கள் அனைவருக்கும் நன்றிக் கடனாக என்ன செய்வது என்பது எனக்குத் தெரியவில்லை. அவர்களனைவரையும் வணங்கி மகிழ்ந்து என் நன்றியைப் புலப்படுத்துகிறேன். நான் பள்ளியின் மேம்பாட்டுக்காக எடுத்த முயற்சிகள் அனைத்தையும் எனது M.Phil., தேர்வின் போது ஓர் ஆய்வுக் கட்டுரையாக " Improvement of Education is S.M.S.V Higher Secondary School" எனச் சமர்ப்பித்துள்ளளேன்.

நான் பல குடும்ப நண்பர்களைப் பெற்றது இப்பள்ளியில் பயின்றதால் தான். என் வாழ்வு உயர என் நண்பர்கள் செய்த உதவிகள் என்றும் நினைக்கத்தக்கவை ஆகும். இப்பள்ளியின் பழைய மாணவன், பள்ளியில் ஆசிரியர், பள்ளியின் தலைமையாசிரியர் என்ற நிலைகளில் எனக்கு ஒரு சிறப்பிடம் கொடுத்து, சமுதாயத்தில் ஒரு நிலையான முகவரியைப் பெற்றுத் தந்தது இப்பள்ளி நிர்வாகத்தினர்தான். அவர்கள் அனைவருக்கும் என்றும் நன்றியுடையேன்.

"நாம் எங்கு, எந்த நிலையில் இருந்தாலும் என்றும் இப்பள்ளியின் மாணவர் தான்" என்ற உணர்வு மேலோங்க, நம் பள்ளியின் கல்விப் பணி சிறக்க அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி இந்த 100வது ஆண்டு நிறைவு விழா மூலம் என் பணிவான வேண்டுகோளை சமர்ப்பிக்கிறேன்.



புன் முறுவல்

சுப.மு.நா.வீர. சுப்பிரமணியன்
முன்னாள் மாணவர்

இளம் காலை வேளை. பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. சாலையில் நடைப்பயிற்சி (வாக்கிங்) சென்று கொண்டிருந்தேன். அப்போது எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த ஒருவர் என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தபடி, கையை ஆட்டிக் கொண்டே சென்றார். அன்றைய கவலைகளில் ஆழ்ந்திருந்த என் மனம் அவற்றிலிருந்து விலகி ஒரு மகிழ்ச்சியில் நிலைபெற்றது.

மாநகரச் சாலையில் பள்ளிகள் / அலுவலகங்கள் முடிந்து அனைவரும் வீடுதிரும்பும் நெருக்கடியான நேரம். கார்களின் நெரிசல், ஒற்றை வரிசையாகக் கார்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. நான் ஓட்டிக் கொண்டிருந்த காருக்கு அருகில் மற்றொரு கார் வந்து என் கார் வரிசையில் இணையும் போக்கில் நின்றது. பல கார்களை முந்திக் கொண்டு வந்த அதன் காரோட்டி என்னைப் பார்த்துத் தனக்கு வழிவிடுமாறு பாவனை செய்தார். அவர் செய்வது தப்புத்தான். அவருக்கு என்ன அவசரமோ? யாருக்குத் தெரியும்? பாவம் என்று என் காரைச் சற்றே தாமதித்து அவருடைய காருக்கு வழிவிட்டேன். அவரது கார் என் வரிசையில் நுழையும் தருணத்தில் அவர் என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். என் மனத்திற்குள் ஒரு மகிழ்ச்சி அலை.

எனது அடுத்த வீட்டுக்காரரின் சிறு பெண், நான் என் தோட்டத்தில் தண்ணீர் ஊற்றும் போதும், வீட்டை விட்டு வெளியே வரும்போதும், அவ்வப்போது என்னைப் பார்க்கும் சமயங்களில் "ஹாய்" என்று புன்னகை பூப்பதைக் காணும்போது மனத்தில் ஒரு மகிழ்ச்சி அலை பரவத்தான் செய்கிறது.

இப்படிப் புன்முறுவல் செய்ய நமக்கு ஆகும் நேரம் ஒரு சில வினாடிகளே. செலவோ ஒன்றுமில்லை. ஆனால் அதைக் காணும் மற்றவருக்கு ஏற்படும் இன்ப அலைகள் எத்தனையோ? ஆகவே அதற்காக எத்தனை விநாடிகள் - விநாடிகள் என்ன நிமிடங்களே கூடச் செலவிடலாம். நம்மால், தெரிந்தவரோ, தெரியாதவரோ - யாரோ ஒருவர் மகிழ்ச்சி அடைகிறார், அவரது மன இறுக்கம் தளர்கிறது என்றால் அது பெரிய செய்திதானே?

யாரையும் பார்த்துப் புன்முறுவல் செய்வது என்பது ஒரு நல்ல பழக்கம். 'முறுவல்', 'நகை' என்பன சிரிப்பைக் குறிக்கும் சொற்கள். 'புன்' என்பது 'சிறிய' என்ற பொருளைத் தரும் அடைமொழி. ஆகவே, புன்முறுவல் அல்லது புன்னகை என்றால் 'சின்னஞ்சிறு சிரிப்பு' என்று பொருள் கொள்ளலாம்.

வாழ்க்கையில் எவ்வளவு வசதியிருந்தாலும் நிம்மதியும் மகிழ்ச்சியுமே இன்றியமையாதவை. வங்கியில் பல கோடி டெபாசிட் (வைப்புத் தொகை) இருக்கலாம், ஊருக்கு ஊர் சொத்துக்கள் இருக்கலாம், தினசரி வருமானம் ஆயிரக் கணக்கில் அல்லது இலட்சக் கணக்கில் கூட இருக்கலாம், அணிந்துகொள்ள ஆயிரம் உடை, நகை இருக்கலாம், வீட்டில் வகைக்கு ஒன்றாக எத்தனையோ கார்கள் அணிவகுத்து நிற்கலாம், வேலைக்காரர்கள் நாம் சொன்ன வேலையைச் செய்யக் கைகட்டி நிற்கலாம், உண்பதற்குச் சுவையான உணவு வகைகள், பழங்கள் மேசை மீது அடுக்கி வைத்திருக்கலாம், வீடு முழுவதும் குளிர் சாதன வசதி இருக்கலாம் - அனுபவிக்க இத்தனை இருந்தும் மனத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் இல்லாவிட்டால் என்ன பயன்?

ஆகவே, நிம்மதியும் மகிழ்ச்சியுமே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதில் ஐயமில்லை. நம்மிடமிருந்து ஒருவருக்கு என்னவோ உதவி தேவைப்படலாம். அதைச் செய்யக்கூடிய வசதியும் நமக்கு இருக்கலாம். ஆனால் அதற்கு நமக்கு மனம் இல்லாமல் இருக்கலாம் அல்லது அவ்வாறு உதவமுடியாதபடி நம் வீட்டவர் தடைக்கல்லாக இருக்கலாம். ஆகவே போதிய வசதி வாய்ப்புக்கள் இருந்தும் நாம் பிறருக்கு உதவி செய்ய முடியாத நிலை ஏற்படலாம். ஆனால் அடுத்தவரைப் பார்த்து அரை நிமிட நேரம் புன்னகை செய்ய நமக்குக் காசோ, பணமோ, கையிருப்போ தேவையில்லை. யாருடைய அனுமதியும் தேவையில்லை. அதனால் உடல்வலியும் வருவதற்கு இல்லை. அத்தனை எளிமையான காரியம் அது.

புன்சிரிப்போடு ஒருவரைச் சந்தித்தால் நம்மைப் பற்றி எதிராளிக்கு நல்ல எண்ணம் உண்டாகும். அதனால் நம் காரியங்களும் எளிதாக முடியும். இது புன்னகையால் நமக்குக் கிடைக்கும் ஆதாயம்.

ஞானச் செல்வராகிய மாணிக்கவாசகர், உன்னுடைய முகத்தில் வீசும் ஒளியையும், வாயில் தோன்றும் புன்னகையையும் காண ஆசைப்படுகிறேன் என்று இறைவனிடம் வேண்டுகின்றார்.

முத்தா உன்தன் முகவொளி
    நோக்கி முறுவல் நகை காண
அத்தா சால ஆசைப்
    பட்டேன் கண்டாய் அம்மானே

இறைவன் தன்னை நோக்கிப் புன்முறுவல் செய்தால் அது தனக்கு அவன் அருள்புரிந்ததற்கான அடையாளம் என்பது அவர் முடிவு. அதுபோல் நம்மைப் பார்த்து ஒருவர் புன்னகை பூத்தால் அதை அவர் நம் மீது கொண்ட நல்லெண்ணமாகக் கொள்ளலாமே.

ஆகவே, நமக்கு எந்தச் செலவும் இன்றி நாம் செய்யும் புன்னகையால் அடுத்தவருக்கு மகிழ்ச்சி; நமக்கும் ஆதாயம். சரி, இனி என்ன தடை புன்னகைக்கு?



பழைய மாணவனின் பசுமை நினைவுகள்...

எஸ்.எல்.என்.எஸ். நாராயணன்
முன்னாள் மாணவர்

ஐந்தாம் வகுப்பு முதல், பள்ளி இறுதி வகுப்புவரை தொடர்ந்து இப்பள்ளியில் பயின்றவன் நான். ஏழு ஆண்டுகளில் முடிய வேண்டிய பள்ளிப் படிப்பு, ஒன்பது ஆண்டாக நீண்டது, படிப்பில் கவனமின்மையே காரணம். உடன் படித்தவர்கள் எல்லாம் உண்மை நண்பர்களாகவும், ஆசிரியர்கள் எல்லாம் பாசம் மிக்கவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலையில், மாதா பிதா வீட்டோடு இருந்து வளர்ச்சிக்கு வழிகாட்டுவார்கள். அவர்களால் அடையாளம் காட்டப் பெறுபவரே குரு. குருவின் போதனையால் தான் நாம் தெய்வத்தையும் உணரமுடியும்.

அந்த உயரிய நிலையில், தலைமை ஆசிரியராக இருந்த திரு. ஆறாவமுது அய்யங்காரும், திரு. R. சீனிவாச அய்யங்காரும் இருந்து, பல நல்லவற்றைக் கற்றுத் தந்தார்கள். நெற்றியில் விபூதி குங்குமம் இல்லை என்றால் R.S. கோபித்துக் கொள்வார். அவரால் அன்று ஏற்பட்ட விபூதி குங்குமம் இடும் பழக்கம் இன்றும் தொடர்கிறது. அவர்கள் தான், என் இறைவழிபாட்டையும், ஆன்மீகப்பற்றையும் வளர்த்துவிட்டார்கள்.

அங்கயற்கன்னி அழகேசன் கலைக்கூடத்தில் நான் கற்றதைவிட பட்டறிந்ததும், பண்பட்டதும் மிகுதி. அந்தப்பண்பாடே என்னை இன்று, "அறப்பணி அண்ணலாக"வும், திருப்பணிச் செம்மலாகவும் திகழச் செய்துள்ளது.

1950 - 60 களில் எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியப் பெருமக்கள் அனைவருமே மாமேதைகள், தமிழ்ப் பண்டிதர் திரு.ப. மாசிலாமணி தேசிகர் பெரும் வித்தகர். எங்களுக்கு மூன்று ஆண்டுகள் வகுப்பு நடத்தினார். பலசிறு கதைகளைச் சொல்லி, நேரம் போவதே தெரியாமல், சுவையாக நடத்துவார். திரு. முடியரசனும்,திரு. தமிழண்ணலும் எங்களுக்கு வகுப்பு எடுத்தார்கள். இணைபிரியா இரட்டையர்கள். அவர்களிடம் தமிழ் படித்தோம் என்றாலே பெருமை. அத்தகைய சரித்திரம் படைத்தவர்கள். வை. கணபதிஸ்தபதி (VG) அவர்கள் எங்களுக்கு வகுப்பு ஆசிரியர். அமைதியாகப் பாடம் நடத்தி மனத்தில் ஆழமாகப் பதிய வைப்பதில் வல்லவர்.

இத்தகைய உயர்ந்த தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் உருவாக்கப் பெற்றவர்களில் நாங்களும் இணைவோம். எங்கள் நண்பர் குழு இருபத்திஐந்து பேரைக் கொண்டது. இன்று அவரவர் துறையில் சிறந்து, முத்திரை பதித்துள்ளனர்.

திரு.பழ. சபாரெத்தினம் அவர்கள் அண்ணமலை பல்கலையில் உயர்ந்த பதவியில் இருந்தார்கள். திரு.பழ. கருப்பையா அவர்கள் இலக்கியத்திலும் அரசியலிலும் சிறப்படைந்தவர்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளில் நானும், பழ. கருப்பையாவும் மிக நெருக்கமாக பழகிப் வருகிறோம். எப்பொழுதும் ஏன்டா

நாராயணா என்பான். நான் வாடா கருப்பையா என்பேன். வித்தியாசமின்றிப் பழகும் விவேக், வெளிப்படையாகப் பேசுபவன். கவிஞர் திரு.சித. சிதம்பரம் என் மனத்தில் நிறைந்த இனிய நண்பர். அவரது இறுதி மூச்சுவரை உறவாடி மகிழ்ந்தோம். திரு. ராம. அருணாசலம் (மற்றொரு பெயர் காந்தி) காந்திமஹாத்மாதான். அமைதியின் பிறப்பிடம் அடக்கத்தின் உறைவிடம். கரு. ராமநாதன் வில்லாளன் என்றும், கரு. முத்தையா கடற் செல்வன் என்றும் பெயரை மாற்றிக் கொண்டவர்கள். தமிழ் மொழியில் கொண்ட பற்றே காரணம். காரைக்குடி, நாராயணன் கணப்பொழுதில் கவிதை எழுதும் ஆற்றல் படைத்தவர். விளையாட்டாகப் பேசிக் கவலைகளை மறக்கச் செய்துவிடுவார். இப்பள்ளியைச் சீரமைத்த திரு. சுப. பழனிவேலு, திறமைசாலி, ஊக்கம் மிக்கவர். பள்ளியை உயரிய நிலைக்குக் கொண்டு சென்ற தலைமை ஆசிரியர் ஒரு தோப்பில் விளைந்த கனிகள், பல சந்தைகளில் விலையாகி, பலருக்கும் பயனாவதைப் போல் நாங்களும் வளர்ந்தோம். வளமாக இருக்கின்றோம். அனைவருக்குமே மணிவிழா முடிந்துவிட்டது. எழுபதை எட்டிவிட்டோம்.

இப்பள்ளிக்கு மிகப்பெரிய ராசி "நம்பினார் கெடுவதில்லை" என்பதனை மெய்ப்பித்துவிடும். தன்னை அண்டிவந்தவர்களை அறிவாளிகளாகவோ திறமைசாலிகளாகவோ, வெற்றியாளர்களாகவோ மாற்றிவிடும். எங்களை அடுத்துப் பயின்றவர்களில் என் பங்காளி ராமநாராயணன் திரையுலகில் சாதனை படைத்தவர். அடக்கமும், அமைதியும் நிறைந்தவர். அதுபோலவே என் இனிய நண்பரும், நேர்மை தவறாதவருமான, முன்னாள் உயர்நீதிமன்ற நீதி அரசர், இந்நாள் பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர், உயர் திரு. மெ. சொக்கலிங்கம் அவர்கள். இப்பள்ளியில் கண்டிப்புடன் படித்ததையும், அவர்கள் அய்த்தான் வீரப்ப செட்டியார் அவர்கள் கட்டுப்பாட்டுடன் வளர்த்ததையும், பலமுறை என்னிடம் மகிழ்ச்சியாகக் கூறியுள்ளார்கள்.

"கண்டிப்பிலும்", "கட்டுப்பாட்டிலும்" மகிழ்ச்சியைக் காண்பவர்கள் தான், வாழ்க்கையில் வெற்றியாளர்களாகத் திகழ முடியும். நமக்கு முன் தலைமுறையினரான, ராவ்பகதூர், பெரியணன் செட்டியார், வள்ளல் அழகப்பர், திரையுலக மேதை, A.V. மெய்யப்ப செட்டியார் ஆகியோரும் இப்பள்ளியின் மாணவர்களே என்று கூறும்பொழுது பள்ளிப் பெருமை இன்றைய விலைவாசியைப் போல விண்ணைத் தொட்டுவிடும்.

அத்தகைய பெரியவர்களெல்லாம், படித்த பள்ளியில், நாமும் படித்தோம், வளர்ந்தோம், இன்று சிறப்பாக வாழ்கிறோம் என்பது மனத்துக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இது இறைவன் கொடுத்த வரம். எதற்கும் கொடுப்பினை வேண்டும் என்பார்கள். மனிதனின் வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் அது மிகவும் இன்றியமையாதது.

நீ எத்தனை கோடிகளுக்கு முதலாளியாய் இருந்தாய் என்பது முக்கியமல்ல. நீ எத்தனை கோடிகளைப் பிறருக்குத் தர்மம் செய்து மகிழ்ந்தாய் என்பதே முக்கியம் என்று என் ஆசிரியர் R.S கூறுவார்.

அவரது கூற்றுக்கு இணங்கக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஆன்மிகத்திற்கு நிறையச் செய்து வருகிறேன். முழு நேரப்பணியாகச் செய்து வருகிறேன்.

இதுவே, நான் இப்பள்ளியில் பயின்ற பயனாலும் ஆசிரியர்களின் அறிவுரையாலும் கண்ட பலன். இதுபோல், அவரவர் துறையில் சிறந்து விளங்கி, மனத்துக்குப் பிடித்த நல்லவற்றைப் பிறருக்குச் செய்ய வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



நான் வணங்கும் ஆலயம்

MR. வள்ளியப்பன்
தலைமை ஆசிரியர்
மீ.சு.மேல்நிலைப்பள்ளி

காரைக்குடி நகரைக் கல்வி நகராக்கிய வள்ளல் அழகப்பர் பயின்ற பெருமைக்குரிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாசாலை மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழாக்கொண்டாடும் இவ்வேளையில் எனது எண்ண ஓட்டங்களைப் பதிவு செய்வதில் பெருமை அடைகிறேன்.

ஒரு நாட்டின் தலையெழுத்தே பள்ளிக் கூடங்களில்தான் தீர்மானிக்கப் படுகிறது என்பது பண்டித ஜவஹர்லால் நேருவின் கூற்று அவர் கூற்றிற்கிணங்க ஒழுக்கம் கல்வியின் விழுப்பம் என்னும் உயரிய கொள்கையோடு துவங்கப்பெற்ற எம் பள்ளி இன்று ஊர் போற்றும் உலகு போற்றும் உன்னதப்பள்ளியாக உயர்ந்து நூற்றாண்டைக் காணும் பேற்றை அடைந்துள்ளது. இத்தகு உயர்நிலைப்பள்ளி அமையக் காரணமாக இருந்த சான்றோர் பெருமக்களை நினைத்து, என் உள்ளம் பேருவகை அடைகிறது. அத்தகையோரை உளாமார நினைவுகூரும் கடப்பாடு உடையவனாக நான் இருப்பேன்.

1913ல் திரு. சொக்கலிங்கம் அய்யா வழிகாட்டுதலின் பேரில், திரு. முத்த. வெ. வெள்ளையன் செட்டியார் அவர்களால் திருவாசக மடத்தில் துவங்கப்பெற்ற எம்பள்ளி, 1918ல் திரு.ஆவி.பழ.சிதம்பரம் செட்டியார் அவர்களின் மிகுந்த நன்கொடையால் எழில்மிகு தோற்றம் தரும் பள்ளியாக உயர்ந்தது.

கல்விப்பணியை அறப்பணியாகக் கருதும் நகரத்தார் பெருமக்கள் பலரின் நல்ஒத்துழைப்புடன், காரைக்குடி நகரில் கல்விப்பயிர் வளர்க்கும் மெ.செ.மெ.மெ. குடும்பத்தார் பள்ளியைச் செம்மையாக வழிநடத்த, நூற்றாண்டு விழாக் கண்டு, மிகுந்த பூரிப்புடன் திகழ்கின்றாள் எம்பள்ளித் தாய்.

தொழில் துறையிலும், கலைத்துறையிலும், விஞ்ஞானத் துறையிலும், அரசுத் துறையிலும், கல்வித்துறையிலும் எண்ணற்ற சாதனையாளர்களை உருவாக்கிய, எம் பள்ளியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்கள் முன்னாள் தாளாளர்கள் திரு.எம்.ஆர்.எம். பெரியணன் செட்டியார், திரு. மெ.செ.மெ.மெ. மெய்யப்பச் செட்டியார், திரு. மெ.செ.மெ.மெ. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோர் ஆவார்கள். அவர்கள் வழியில் திரு. சொ. மெய்யப்பன் அவர்கள் தாளாளராக இருந்து பள்ளியைச் சீரோடும் சிறப்போடும் நடத்தி வருகின்றார்கள்.

பள்ளித்தேர் ஓட அச்சாணியாக இருந்து செயல்படும் திரு. சத்தி.அ.திருநாவுக்கரசு, கம்பார் நா. முத்தையா செட்டியார், திரு. PR. சொக்கலிங்கம், திரு. முத்து பழனியப்பன், திரு.எஸ். பெரியணன் பள்ளியின் புகழை உச்சத்திற்குச் கொண்டு சென்ற முன்னாள் தலைமையாசிரியர் திரு.SP. பழனிவேலு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது, சீரிய வழிகாட்டுதலில் "என் கடன் பணி செய்து கிடப்பதே"
என்ற அப்பர் பெருமான் வாக்கிற்கிணங்க, 2002 ஆம் ஆண்டு தலைமையாசிரியாராகப் பொறுப்பபேற்றபின், இயன்றளவு என்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு கல்வி, விளையாட்டு, கலை, இலக்கியம் மற்றும் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கும் பள்ளியாக நடத்தி வரும் காரணத்தினால், தொடர்ந்து பத்து மற்றும் பன்னிரென்டாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 99 %, 100% சதவீத வெற்றி பெற்று வருவதோடு அல்லாமல், தமிழக அரசின் நல்லாசிரியர்க்கான மேன்மை விருதாம் எஸ். இராதாகிருஷ்ணன் விருது பெற்றிடும் பேறும் பெற்றேன்.

'கல்வி என்பது காட்டு முள் அல்ல; தானே வளரும் தாவரமும் அல்ல ; அது வளர்க்கப்படும் பயிர்' என்றார் டாக்டர் மு.வ, அத்தகைய கல்விப்பயிர் செழிப்பாக வளர, என்னோடு இணைந்து பணியாற்றும் ஆசிரிய, அலுவலர்களின் பணி அளப்பரியது.

ஆசிரியப்பணி என்பது அறப்பணி. பெற்றோர்களை விடப் பெருமதிப்பு உடையவர்கள் ஆசிரியர்கள். பெற்றோர்கள் உயிர் மட்டுமே அளிக்கிறார்கள். ஆசியர்களோ நல் வாழ்வு நல்கும் கலையைத் கற்றுத் தருகின்றார்கள். அத்தகு சிறப்பு வாய்ந்த, தகுதி நிறைந்த ஆசிரியர்களைப் பெற்ற காரணத்தால் ஆண்டுதோறும் பள்ளி அடையும் வளர்ச்சி அளப்பரியது. இதனால் மக்கள்தம் பிள்ளைகளைச் சேர்க்கப் பள்ளி வாயிலில் தவம் இருக்கின்றனர்.

தன்னலம் கருதாத அன்பையும், அரவணைப்புடன் கூடிய கல்வியையும் பெற்ற எம் பள்ளி மாணவர்கள் இன்று உலகமெங்கும் விரவிக் காணப்படுகின்றார்கள். அவர்கள் உள்ளத்தில் தாயாம் ஸ்ரீ.மீ.சு.வி. பள்ளிக்கு மிகுந்த இடம் தந்து
'எந்தம் பள்ளி எம்மால் உயர்க!
எந்தம் பள்ளி எம்மை உயர்த்துக!'
என்னும் மந்திரத்தை உச்சரித்து, நன்றிப் பெருக்கோடு நாளும் பள்ளிக்கு வந்து நலம் விசாரிப்பதை எண்ணி உளப்பூரிப்பு அடைகிறேன்.

இத்தகைய பெருமைமிகு தாளாளர், ஆட்சிக் குழு உறுப்பிளர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் உறுதுணையோடு, நான் தலைமைப்பொறுப்பு ஏற்றபின் நடைபெற்ற சில நல்ல நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்வதில் ''பெருமை அடைகிறேன்.

2003 ல் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் மாவட்ட முதலிடம் 2008 மூன்றாமிடம்.

2004ல் பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுக்கு, பள்ளியிலேயே தேர்வு மையம்

2004 -2005ஆம் ஆண்டில் அரசு அங்கீகாரத்துடன் ஆங்கில வழிக்கல்வி ஆரம்பிக்கப்பெற்று, தொடர்ந்து ஆங்கில வழியில் 100% தேர்ச்சி.

மாணவர் நலம் சார்ந்த சமுதாய அமைப்புள் NSS, தேசிய பசுமைப் படை, Red Ribbon Club, இதயம் காப்போம் திட்டம், சாலைப் பாதுகாப்புப் படை கொண்டு வரப்பட்டது.

மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்தியது.

2009 -2010, 2010- 2011, ஆண்டுகளில் கலை இலக்கியப் போட்டிகளில் சிவகங்கை மாவட்ட அளவில் முதலிடம் பெற்றது.

நிர்வாகத்தின் பேருதவியாலும், நன்கொடையாளர்களின் கொடையாலும் நூற்றாண்டை முன்னிட்டு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நவீன கழிப்றை, விளைாட்டு மைதானச் சுற்றுச் சுவர், நவீன இயற்பியல் வேதியியல் ஆய்வகம், அதற்கான உபகரணங்கள், நவீன கணிப்பொறி வளாகம், அழகப்பர் வளாகத்தில் வகுப்பறைகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஜானகி ஆச்சி டிரஸ்ட் மூலம் 6 வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், ஆசிரியர் அறை. அழகப்பா டிரஸ்ட் மூலம் அழகப்பர் நூற்றாண்டு விழா அரங்கம், மாணவர்களுக்கு விசாலமான இருக்கை வசதிகள், பழைய மெயின் கட்டிடம் புதுப்பிக்கப்பெற்று விசாலமான 10 வகுப்பறைகள், புதுப்பொலிவுடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத்திடல், இயற்பியலைக் காணொளிக் காட்சி மூலம் கற்கும் உபகரணங்கள், ரோட்டரி ஹெரிட்டேஜ் சங்கம் மூலம் ஆழ்துளைக் கிணறு போன்ற மாணவர் நலஞ்சார் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

2004 - 2005ஆம் கல்வியாண்டில் சரக விளையாட்டுப் போட்டிகளை நம் பள்ளியில் சிறப்புற நடத்தியது.

பள்ளிக் கல்வித்துறை நடத்திய பேச்சு, நடனம் நாடகப் போட்டியில் மாநில விருது.

விளையாட்டுத் துறையில் மாவட்ட அளவினும் மாநில அளவினும் எண்ணற்ற மெடல்களைப் பெற்றது.

இவ்வாறாக எண்ணற்ற வளர்ச்சிப் பணிகளைச் சொல்வதற்கு மலரில் இடம் போதாது. அறிவையும் ஒழுக்கத்தையும் வாழ்விற்கு வழங்குவதுதான் கல்வியின் பயன் என்ற திரு.வி.கவின் கூற்றிற்கிணங்கச் சமுதாயத்தில் பின்தங்கிய மாணவர்கள், எந்நிலையில் இருந்தாலும் அவர்கள் வாழ்விற்கு ஏற்றம் தரும் பள்ளியாக, கலங்கரை விளக்கமாக அறிவூட்டும் ஞான விளக்காக, விழிப்புணர்வுப் பெட்டகமாக, கல்விக் கோயிலாக எம் பள்ளி திகழ்கிறது என்பது உண்மையிலும் உண்மை.

ஆற்றல்மிகு கல்வியினை எமக்களித்த
ஆசிரியர் அனைவருக்கும்
போற்றும்நல் லன்புடனே நன்றியினைக்
காணிக்கை ஆக்கும் இந்நாள்
நூற்றாண்டு விழாக்காணும் எஸ்.எம்.எஸ்.வி
மேல்நிலைப் பள்ளி இன்னும்
ஏற்றமுடன் பல்லாண்டு கல்விப்பணி
சிறந்திடவே வாழ்த்துகின்றோம் !

அன்புடன்

N.S. நாராயணன்

N.S. வைரவன்

N.S. ஞானசம்பந்தன்

"கீழ வீடு"

முத்துப்பட்டணம் முதல் வீதி,

காரைக்குடி.



- அழகாபுரி. **இளங்கோவன்**
(பாடுவார் பேரன்)

என்னைநான் அறியாத அகவை தன்னில்
　　என்தந்தை பள்ளியிலே சேர்த்து விட்டார்
மண்ணில்நான் மகிழ்வோடு ஓடி யாடி
　　மனம்போன போக்கினிலே திரிதல் விட்டுத்
திண்ணையிலே பள்ளிவகுப் பறையில் வந்தே
　　சிறைப்பட்டேன் துன்புற்றேன் சோர்ந்து விட்டேன்!
விண்மீதில் பறக்கின்ற சிட்டுப் போல்வேன்
　　விழுந்தேன்நான் பள்ளியெனும் சிறையில் வந்தே! (1)

பசித்தாலும் பசியாத போதும் நானே
　　பண்டங்கள் எப்போதும் உண்டி ருப்பேன்
ருசித்தேதான் தின்றதெலாம் படிக்க வந்தால்
　　நொடிப்போதும் முடியாது என்ற றிந்தேன்!
கசிகின்ற பேனாவைக் கொண்ட தாலே
　　கையோடு பையெல்லாம் மையாப் போச்சு!
விசித்தேதான் அழுகின்றேன் அடித்த போது
　　விளம்புகிறேன் பள்ளியிலே பட்ட தெல்லாம் ! (2)

கரும்பான கல்வியினை விரும்பு என்றார்
　　கற்கண்டாம் செந்தேனாம் கல்வி என்றார்
இரும்பாலே உத்தரமாம் கல்வி என்றே
　　எண்ணியதால் எப்போதும் துன்பப் பட்டேன்!
நறுந்தேனாம் தமிழ்ப்பாடல் பாடு என்றார்
　　நான்பாடும் பாடலையே பாடு கின்றேன்!
விருப்போடு பள்ளிக்கே வாவா வென்றார்
　　வெறுக்கின்றேன் பள்ளிக்குச் செல்வ தற்கே! (3)

சேர்க்கின்ற போதினிலே பள்ளி வந்த
　　திருவுடைய தந்தையவர் அதற்குப் பின்னால்
பார்க்கின்ற வழக்கமெலாம் இலவே இல்லை!
　　படிப்புநிலை அதைப்பற்றிக் கவலை இல்லை!
வேர்க்கின்றார் தேர்வில்நான் தோற்றுப் போனால்
　　விலங்கன்றோ போடுகிறார் தண்டித் தற்கு
பார்க்கின்றீர் கல்விநிலை இதுதான் இன்று
　　பாப்பாக்கள் எதிர்காலம் இருண்ட காலம்! (4)

புத்தகங்கள் படிப்பதற்கு வாங்கித் தந்தால்
புழுதியிலே அதைப்போட்டுப் புரட்டி வைத்து
நித்தநித்தம் ஒன்றாகக் கிழித்து வந்தேன்
நிமிடத்தில் எஞ்சியதைத் தொலைத்தும் விட்டேன்!
எத்தனை நூல் ஓராண்டு படிப்பதற்கு
எரிந்தன்றோ விழுகின்றார் என்றன் அப்பா
சத்தியமாய்ப் படிப்பினிலே நாட்ட மில்லை
சரியாகப் பள்ளிக்கும் செல்வ தில்லை (5)

வள்ளுவனின் குறளமுதை வகுப்பில் ஆசான்
வாஞ்சையுடன் சொல்லுவதைக் கேட்டி டாமல்
பள்ளிவரும் மனக்கினிய நண்ப ரோடு
பக்கத்தில் வம்பளந்து பேசு கின்றேன்!
கள்ளிருக்கும் அமுதனைய பாட லெல்லாம்
கற்காமல் வேம்பெனவே ஒதுக்கு கின்றேன்!
எள்ளிருக்கும் எண்ணெய்வரச் செக்கி லோடும்
எருதுகளைப் போலன்றோ சுற்று கின்றேன்! (6)

கணக்கென்றால் பிணக்கென்றேன் ஆங்கி லத்தைக்
கற்றிடவே ஆசைதான் கசக்கு தையா!
மனக்கினிய தமிழ் படிக்க எண்ணி னாலும்
மலிவான பிழைகண்டே விண்மீன் நாணும்!
இணக்கமுடன் அறிவியலைப் படிப்ப தற்கே
என்னறிவுக் குறைஎண்ணி ஒதுக்கி விட்டேன்!
வனப்புடைய வரலாற்றைப் படிப்ப தற்கே
வருந்துகிறேன் மனத்திலது நிற்க வில்லை ! (7)

சத்தான கல்வியிலே நாட்ட மில்லை
சாப்பாட்டை எப்போதும் நினைத்தி ருப்பேன்
வித்தான நல்லறிவை வளர்த்துக் கொள்ள
விரும்பாமல் வீண்பொழுது போக்கு கின்றேன்!
முத்தாக மணியாக எழுத வேண்டும்
முன்னேற்றம் படிப்பாலே எய்த வேண்டும்
இத்தருணம் கற்றுமிகத் தேர்ந்து விட்டால்
ஏழ்பிறப்பும் இன்பந்தான் குறளே சான்றாம்! (8)

பள்ளியிலே கள்ளிமுளைப் பதுபோ லன்றோ
படர்கிறது அரசியல்தான் எவ்வி டத்தும்!
துள்ளிவரும் சிறுவனையும் கட்சி சேர்ப்பார்
துதிபாடிச் சாக்கடையில் வீழ்கின் றாரே!
எள்ளிருக்கும் இடங்கூட விடுவ தில்லை
எங்கெங்கும் சுவரொட்டி கவர்ந்தி ழுக்கும்
துள்ளிவரும் சிறுவன்நான் படிப்ப தெங்கே
தொல்லைகளைக் களைந்தன்றோ கற்க வேண்டும் (9)

ஊருக்கூர் கோவிலிலே கூட்ட மில்லை
உயர்வான திரையரங்கில் இடந்தா னில்லை!
சோற்றுக்கே வழியில்லாச் சுப்பன் கூடச்
சுகமென்றே படத்துக்கே ஓடு கின்றான்!
பேர்புகழை மூலைமுடுக் கெங்கும் பாடிப்
பெருகிவரும் ஒலிபெருக்கிக் கூச்சல் வேறு!
வேருக்கே வெந்நீரை ஊற்று கின்றார்
வேறெங்கே நான்சென்று படிப்ப தையா! (10)

ஊர்விடுத்துக் கூட்டமிலா இடத்தை நாடி
உருப்படவே ஒதுப்புறமாய்ப் படிக்கச் சென்றால்
ஆளுக்காள் தள்ளாடி நடன மாடி
அப்படியே என்மீதும் மோது கின்றார்!
பாழுங்கள் சாராயக் கடைக ளன்றோ
பார்க்குமிடம் எங்கும்நிறைந் திருக்கு தையா!
நாளுக்கு நாள்நலிவே பெருகு திங்கே
நான்மட்டும் படிப்பதெனில் முயலின் கொம்பே! (11)

ஆர்வமுடன் பள்ளியிலே படிக்க வேண்டும்
அக்கறையை விளையாட்டில் காட்ட வேண்டும்
ஓர்குலமாய் ஓரினமாய் வாழ வேண்டும்
ஒருமைப்பாட் டுணர்வினையே கொள்ள வேண்டும்
நீர்ஓட்டம் போலறிவி லூற்றம் வேண்டும்
நிறைவான பண்புநலம் சிறக்க வேண்டும்
பார்போற்றும் மேதைகளாய் ஆதல் வேண்டும்
பண்போடும் மொழிப்பற்றும் என்றும் வேண்டும் (12)

பெரியோரைத் துணைக்கொண்டு வாழ வேண்டும்
பெயர்புகழை நிலைநாட்ட முயல வேண்டும்
உரியோராம் ஆசான்சொல் கேட்க வேண்டும்
உயர்வடைய எந்நாளும் உழைக்க வேண்டும்
அரிசிவனை எந்நாளும் வணங்க வேண்டும்
ஆர்வமுடன் அன்பினையே பெருக்க வேண்டும்
சரிநிகராய் அனைவரையும் மதிக்க வேண்டும்
சத்தியமாய் அன்புவழி செல்ல வேண்டும் (13)



இன்னுமொரு நூற்றாண்டு இனிதே காண்க

- பொற்கிழிக்கவிஞர். **கா. நாகப்பன்**
தலைமை ஆசிரியர்,
அ.உ.பள்ளி. திருவேலன்குடி.

வீசுதென்றல் காற்றுத்தான் குழலில் சென்று
வியக்கின்ற இன்னிசையைத் தருதல்போல,
"மீசுபள்ளி" படித்தவரில் என்னை "மீனாள்"
மேலாக்கிப் பொற்கிழியை நல்கிக் காத்தாள்;
ஆசுகவிப் பட்டமுடன் ஆற்றல் மிக்க
தலைமையாசான் அரசுபள்ளி வாழ்வும் தந்தாள்;
மூசுபலா மாவாழைக் கனிகள் தோய்ந்தே
மீனாட்சி சுந்தரேசர் பள்ளி ஆனார்;

இயலிசைசேர் கூத்தான தமிழின் பாடம்
இம்மூவர் அக்கால அம்மூவ னாரே!
நயமிக்க "பூங்கொடி" யாள் "முடியரசய்யா"
நாடுபுகழ் "அனிச்சவடி" பழநி ஐயா
இயம்புமுறை எழுச்சி "முத்து சம்பந் தரய்யா"
கயல்மீனாய் என்தம்பி வள்ளியப்பன்
சிறப்புறவே கற்றிருந்து தலைமை பெற்றார்!

"சேசய்யன்" சேக்கிழாரின் புராண வாழ்வைச்
செம்மாந்து கண்முன்னே நிறுத்தி வைத்தார்;
தேசத்தின் பிதாபடம் பெரிதாய் வைத்துப்
பாசமலர் இப்பள்ளி பயின்றோர் எல்லாம்
"பார்அட்லா அழகப்பர்" சிறப்பைப் பெற்றார்;
வாசமுல்லை மணம்பரப்பி ஆசான் குழுவும்,
அலுவலரும் நூற்றாண்டைக் கண்டார் வாழ்க!



கற்றுக் கொள் !

- காரைக்குடி மு. அப்துல்சலாம்
முன்னாள் மாணவர்

இளைஞனே ! இனிய மாணவனே !
செலவழிக்க வேண்டுமெனில்
சேமிக்கக் கற்றுக் கொள் !
சேமிக்க வேண்டுமெனில்
சம்பாதிக்கக் கற்றுக்கொள் !
சம்பாதிக்க வேண்டுமென்றால்
சிறந்த கல்வி அறிவைப் பெற்றுக்கொள் !
கல்வி அறிவைப் பெற வேண்டுமெனில்
அனுபவம் மிக்க ஆசானைப் பெற்றுக் கொள் !
அனுபவம் மிக்க ஆசானைப் பெற
ஆற்றல் மிக்க மாணவனாய் இரு !
ஆற்றல்மிகு மாணவன் ஆவதற்கு
உன் சிந்தையை ஒழுங்கு படுத்திக் கொள் !
உன் சிந்தையை ஒழுங்கு படுத்த
நல்லநூல்களையும், நண்பர்களையும் துணைக்கொள் !
முன்னேற, முன்னேற
உன்மீது ஒரு கண்ணும் நீ சார்ந்த சமுதாயத்தின் மீது
ஒரு கண்ணும் இருக்கட்டும் !
பிறகென்ன
ஊரும் உலகும் உன்னைப் பாராட்டும் !
பேரும், புகழும் உன்னைத் தாலாட்டும் !

முள்ளைக் கடந்துதான்
ரோஜாவைக் கிள்ள முடியும் !
முத்தெடுக்க வேண்டுமெனில்
நீரில் மூழ்கத்தான் வேண்டும் !
வியர்வை சிந்தினால்தான் நல்ல
விளைச்சல் தென்படும் !
போட்டியை எதிர் கொண்டுதான்
பெரும் வெற்றியை ஈட்டிட இயலும் !
விடா முயற்சிதான் சிகரத்தின்
உச்சிக்குக் கொண்டு செல்லும் !

எல்லாவற்றுக்கும் மேலாக
இறையச்சம், இறையருள் இருந்தால்தான்
எதுவுமே சாத்தியம் !
எனவே இளைஞர்களே ! மாணவர்களே !
உங்களுக்கு இன்றையத் தேவை
பெரிய போர்வையல்ல -
சுகமாய் உறங்குவதற்கு :
புதிய பார்வை -
சுயமாய் உயர்வதற்கு !



கல்விக்கு ஒரு கோவில்

எஸ். வெங்கடேசன்
கலை ஆசிரியர், மீ.சு மேல்நிலைப்பள்ளி

நகரத்தாருக்கு இரு கண்களாம்......
கடவுள் பணியும்.....! கல்விப்பணியும்.....!
நகருக்கு இரு கண்களாய்....
நகரச்சிவன் கோவிலும்....
ஆலயம் பார்த்த வண்ணம்
அம்மையப்பன் பெயரில்
கல்விக்கு ஒரு கோவிலும் !
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்தியாசாலை
கல்வியை வேள்வியாய்க் கொண்ட நிறுவனம் !
அறிவைப் போதிக்கும் யாகத்தில்
ஆசிரியர் மட்டுமன்றி....
இங்கு அனைவருமே ஆகுதியாம்...!
வியப்பதற்கு ஒன்றுமில்லை...!
நகரத்தார் நிர்வகிப்பில்
கல்விக் கூடமும்...
ஆலயத் தூய்மையுடன்...!
பள்ளியில் திரும்பும் திசையெல்லாம்
திருப்பணிகள்...!
ஆண்டுக்கொரு முறை
அன்னை மீனாட்சியே இங்கு வந்தமர்ந்து...
தவமியற்றும் பள்ளி !
என்ன தவம் செய்தோமோ....?!
இக்கல்விக் கோவிலில்
படிக் கல்லாய்க் கிடந்திட....!
ஒன்று மட்டும் சத்தியம் !
இங்கு...
பயின்றவர்....! பயில்பவர் மட்டுமல்ல....!
பணிபுரிந்தோர்....! பணிபுரிவோர் மட்டுமல்ல....!
இப்பள்ளியின் படிகளில்...
பாதம் பதித்த அனைவருமே
பாக்கிய சாலிகள் !



நன்றி சொல்லும் நேரமிது

- K. சிதம்பரம்
T.C.S, சென்னை

எம் குடும்பம் தழைத்திடவே
எந்நாளும் உறுதுணையாய்
இன்றளவும் நிற்கின்ற
எழில் பள்ளி எஸ்.எம்.எஸ்.வி

சதுரங்க விளையாட்டில் - நான்
சாதனைகள் பலபெறவே
உறுதுணையாய் இருந்திட்ட
உயர்பள்ளி எஸ்.எம்.எஸ்.வி

என்னருமைச் சகோதரன்
அரவிந்த் சிதம்பரம்
சதுரங்க விளையாட்டில்
அவனிபுகழ் பவனிவர
அடித்தளம் அமைத்திட்ட
அறிவுத் திருக்கோயில் எஸ்.எம்.எஸ்.வி

எனது ராமவிலாஸ் அய்யா
வீர. சிதம்பரமும்
காலி வீட்டு அய்யா
கரு. கருப்பஞ் செட்டியும்
முத்துவிலாஸ் பாட்டி ஆயா
லெட்சுமியும்
படித்து உயர்ந்திடவே
பாங்காய் அமைந்திட்ட
பண்புசால் பள்ளி எஸ்.எம்.எஸ்.வி

என் அப்பா கண்ணன்
பயின்றிட்ட இப்பள்ளி
என் அம்மா புவனாவை
ஆசிரியை ஆகவே
ஏற்றிவிடும் ஏணியாய்
அமைந்திட்ட எஸ்.எம்.எஸ்.வி

நூறாண்டு மட்டுமல்ல
பல்லாயிரம் ஆண்டு காண
நன்றிகள் பல கூறி
வாழ்த்துகிறேன் வாழி ! வாழி !



அறிவு தேடும் பறவைகளின் ஆலமரம்

- லேனா தமிழ்வாணன்
பத்திரிக்கையாளர், பதிப்பாளர்

ஒரு கல்வி நிறுவனம் நூறு ஆண்டு காலம் காண்பது என்பது சொல்வதற்கு எளிதாக இருக்குமே தவிர, சற்று சிந்தனை செலுத்தினால் அது அளப்பரிய மலைப்பிற்குரியது.

திரு. வள்ளியப்பன் அவர்கள் இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தபோது மாணவர்கள் மத்தியில் உரையாற்றியிருக்கிறேன். அவ்வமயம் இப்பள்ளியின் அருமை பெருமைகளை அவர் எடுத்துச் சொன்னபோது, 'அடேங்கப்பா !' என்று ஆனேன். அண்மைக்காலத்தில் தமிழகத்தில் நூறுகோடிகள், ஆயிரம் கோடிகள் சம்பாதித்தவர்களும் பெரிய அளவில் தொழிற்சாலைகளை அமைத்தார்களா? எப்படி இவர்கள் (6)மகா கோடீஸ்வரர்களாக ஆனார்கள்? கல்விச் சாலைகளை ஆரம்பித்துத்தான் இவர்கள் இந்திய அளவிலான பணக்காரர்களாக ஆகிவிட்டார்கள். ஆக, இன்று கல்வி என்பது தொழிற்சாலைகளையே பின்னுக்குத் தள்ளும் வருமானக்களமாக ஆகிவிட்டது. ஆனால் அந்தக்காலத்தில் நகரத்தார் பெருமக்கள் கல்விச்சாலைகளை அறச்சாலைகளாகத்தான் பார்த்தார்கள்.

கைக் காசைச் செலவழிக்க ஆன்மிகத்திற்கு அடுத்துக் கல்வியைத்தான் களமாக்கிக் கொண்டார்கள்.

இப்படிப்பட்ட உன்னதமான நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளி ஆலமரமாய் விரிந்து நின்று எத்தனையோ மாணவப் பறவைகளுக்கு அருங்கல்வி ஊட்டும் அறக்களமாக வளர்ந்து எண்ணற்ற மாணவர்களின் வாழ்வில் மறக்கமுடியாத விதைக் கருவூலமாகி இன்றளவும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது.

'Too Many cooks spoil the Broth' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நிறையச் சமையற்காரர்கள் சேர்ந்து ஒன்றைச் செய்தால், அந்தச் சாப்பாடு கெடுக்கப்பட்டு விடும் என்ற இந்த ஆங்கிலப் பழமொழியை உடைத்தெறிந்து தலைமுறை தலைமுறையாக ஒரு நிர்வாகத்தை மிஞ்சுகிற இன்னொரு நிர்வாகம் உருவாகிக் கல்வி எனும் அறப்பணியை அற்புதப் பணியாக மாற்றி வருகிறது. எவ்வளவுதான் நிர்வாகக்குழு மாறினாலும் எவ்வளவு தலைமைகள் மாறினாலும் எந்த நோக்கத்துடன் நகரத்தார் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்டதோ, அதே நோக்கத்துடன் கற்பு மாறா நெறிமுறையை, கடைப்பிடித்து இன்றளவும் சிறந்து விளங்குகிறது.

அறங்காவலர்களையும், நிர்வாகத்தையும் பாராட்டுவதோடு மட்டும் நான் எல்லைக்கோடு போட்டுக் கொள்ள முடியாது. மிகச்சிறந்த தலைமை ஆசிரியர்கள், ஒப்பற்ற ஆசிரியப் பெருமக்கள், முதுகெலும்பாக இருக்கும் பள்ளி அலுவலர்கள், அலுவலக உதவியாளர்கள் என எல்லா நிலையினரின் கூட்டு முயற்சிதான் இந்த நீண்ட நெடிய வரலாற்றின் சாதனை வடிவம்.

இன்னும் எண்ணற்ற ஆண்டுகள் இதே நிலைப்பாட்டுடன் வளர்ந்து தொடர்ந்து இப்பெருமைக்குரிய கல்வி நிறுவனம் அறிவுச் சேவை ஆற்றிட என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து வாழ்த்துகிறேன்.

நூற்றாண்டு விழா அழைப்பிதழ் பார்த்தேன். எப்பேர்ப்பட்ட பெருமக்களின் சங்கமம் இது. பேச்சாளப் பெருமக்களின் பட்டியலைப் பார்வையிடும்போது இவ்விழா காலங் காலமாகப் பேசப்படும் என்றே மனத்திற்குப் படுகிறது.

விழா சிறக்க வாழ்த்துகிறேன்...



நகரத்தாரும் சைவமும்

- டாக்டர். சபா. அருணாசலம்

நூற்றாண்டு காணும் காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப் பள்ளியில் திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் சைவசித்தாந்த வகுப்பு நடைபெற்று வருகிறது. நாங்கள் பாடம் நடத்தும் கூடத்தில் ஒளிதிகழ் மேனியுடன் சொக்கலிங்க அய்யா அவர்களின் அழகிய பெரியபடம் காட்சியளிக்கிறது. சைவப் பெரியாராகச் சாத்திரமும் தோத்திரமும் கற்பிப்பதில் வல்லவராக விளங்கிய சொக்கலிங்க அய்யா திருமுன்பு இன்று சைவசித்தாந்த வகுப்பு நடைபெறுவது இறையருளாகும். இந்தப் பள்ளியைத் தொடங்கிய மூல காரணர்களுள் சொக்கலிங்க அய்யா முதன்மைக் காரணர்.

இருளை அகற்றி ஒளிதந்து பொருள்களைக் காட்டும் கதிரவன் போல் இறைவன் உயிர்களின் அறியாமையை அகற்றி ஞானமாகிய கல்வி தந்து உயிர்களுக்கு நலம் பயக்கிறான் என்பது சைவ சித்தாந்தம். உயிர்களின் அறியாமை நீக்கி அறிவூட்டும் கல்விப்பணி செய்யச் சைவசித்தாந்தியாகிய சொக்கலிங்க அய்யா முயன்றது இயல்பேயாகும். அந்த வழியைப் பின்பற்றியே தேவகோட்டையில் நகரத்தார் ஸ்ரீ மீனாட்சி வித்யா பரிபாலன சங்க மேல்நிலைப்பள்ளி தொடங்கப் பெற்றது.

நகரத்தார் தொடக்கத்தில் சிவ வழிபாட்டினராகவே இருந்தனர். இடையில் சிலர் சமணம் தழுவினர் போலும். நகரத்தார் வரலாற்றுக் குறிப்புக்களைத் தரும் சிலப்பதிகாரம் 'வேறுவைத்தல்' எனும் நமது பழக்கத்தை மனையறம் படுத்த காதையில் கூறுகிறது. நாம் பயன்படுத்தும் தடுக்கு பற்றிய குறிப்பும் உண்டு. அந்நூலில் கோவலன் சமணம் சார்ந்தவனாகக் காட்டப் பெறுகிறான்.

காவிரிப் பூம்பட்டினத்தில் நகரத்தார்கள் மானம் கருதிக் கூட்டாக உயிர் துறந்தபோது தமது ஆண்குழந்தைகளை மட்டும் ஆத்மநாத சாஸ்திரியிடம் ஒப்படைத்துச் சென்றனர் என்பது வரலாறு. நகரத்தார்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்குக் காரணம் சிவ பூசை வழிபாட்டை மறந்தமைதான் என்று சிதம்பரம் ஈசான சிவாசாரியார் கூற அவரையே குல குருவாகக் கொண்டு உபதேசம் பெற்றுச் சிவ வழிபாடு செய்தனர். நகரத்தார் ஆண்களுக்கு அந்தணர் வழி வந்த குருவும் பெண்களுக்கு வாஞ்சியத்தில் இருந்து அழைத்து வரப்பெற்ற வேளாளர் குல வழிவந்த குருவும், முறையே பாதரக்குடி கலாமடம், துலாவூர்

நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் ஆகியவற்றில் உபதேசம் செய்து வருகின்றனர். நகரத்தார் பழநிக் காவடி முதன்முதல் சென்றபொழுது உபதேச குருவும் உடன் சென்றனர் என்பர். அந்நாளில் நகரத்தார் இளைஞர்கள் இளமையிலேயே உபதேசம் பெற்றனர். இன்றும் பட்டினத்தார் திருவிழாவில் திருவெண்காடர் திருமணத்திற்கு முன்பாகவே உபதேசம் கேட்கும் நிகழ்ச்சி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஆண்கள் கழுத்தில் உருத்திராக்கமும் பெண்கள் கழுத்துரு என்று சொல்லப்படும் அணிக்குள் உருத்திராக்கமும் வைத்து அணிவது வழக்கமாக இருந்தது.

பாண்டிய நாட்டிற்குக் குடிபெயர்ந்த பிறகு நகரத்தார் ஏழு வழி மரபினர் சிவன் கோவில்களை மையமாக வைத்தே தமது குடிவழி மரபுகளை அமைத்துக் கொண்டனர். இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்கோவில், நேமம், இலுப்பைக்குடி, சூரக்குடி, வேலங்குடி என்னும் ஏழு கோவில்கள் பின்னர் இரணிக் கோவில், பிள்ளையார்பட்டியுடன் ஒன்பதாக விரிந்தன. இன்று நகரத்தார் அனைவரும் இக்கோவில்களில் ஒன்றைச் சார்ந்தே இருப்பர். திருமணத்திற்குக் கோவில் மாலை வருவதும், திருமணத்தின் பின் ஆண்மகன் அவர் சார்ந்த கோவிலில் புள்ளிவரி செலுத்திப் புள்ளியாகப் பதிவு பெறுவதும் நடைமுறை.

நகரத்தார் வரலாறு தேவகோட்டை மேலவீடு லெ.வீர. சிந்நயச் செட்டியார் அவர்களால் பூங்கொன்றை வேலங்குடிக் கல்வெட்டில் இருந்து தொகுக்கப் பெற்றுத் துலாவூர் மடத்தில் இருந்தது. அதுவே இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் மூல வரலாற்று நூல். வேலங்குடிக் கல்வெட்டில் "நகரத்தார் சிவ மதத்தில் தவிரப் பிற மதத்தில் சேருவதில்லை" என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. நகரத்தார் வரலாற்றைச் சைவமடமே பாதுகாத்து நமக்குத் தந்துள்ளது.

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர் தேவகோட்டை வன்றொண்டச் செட்டியார் என்ற நாராயணன் செட்டியார். அவரது மாணவர் காரைக்குடி சொக்கலிங்க அய்யா, அவருடைய மாணவர்கள் பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வ.சுப. மாணிக்கனார், தேவகோட்டை பாலகவி, வே. இராமநாதன் செட்டியார் ஆகியோராவர். இவ்வாறு காரைக்குடிக்கும் தேவகோட்டைக்கும் உள்ள சைவத் தொடர்பே இன்று இப்பள்ளியில் சபா. அருணாசலம் ஆகிய நான் சைவசித்தாந்தம் நடத்த வழி வகுத்தது போலும்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவசித்தாந்தம் பயில்வோருக்குச் 'சித்தாந்த ரத்தினம்' என்ற பட்டம் வழங்கப் பெறுகிறது. இந்த ரத்தினம் என்ற சொல் சைவசித்தாந்த வித்தகர் முரு.பழ. ரத்தினம் செட்டியாரைக் குறிக்கும். அவரது மாணவர் வைத்தியநாதன் தமது ஆசிரியரைப் போற்றும் வகையில் இப்பட்டத்தை உருவாக்கினார். இரத்தினம் செட்டியார் மலேயா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் சைவம் பரப்பியவர். கடவுளால் முடியாத செயல்கள், தடைகளும் விடைகளும் போன்ற அவரது நூல்கள் குறிப்பிடத்தக்கவை. மலேசியாவில் டான்ஸ்ரீ. சோமசுந்தரம் செட்டியார் சைவம் வளர்த்து வருகிறார்.

பலவான்குடியில் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் சிவநேசன் இதழ் வெளிவந்தது. பல்வேறு ஊர்களினும் நகரத்தார்கள் குருபூசை மடங்கள் திருவாசக மடங்கள் நிறுவி வழிபட்டு வருகின்றனர். காரைக்குடி இராய. சொக்கலிங்கனார் சிவம் பெருக்கும் சீலர் என

அழைக்கப்பெற்றார். அவருடைய திருவாசகத்தேன். தேவாரத் தெள்ளமுது. கம்பனும் சிவனும், வில்லியும் சிவனும் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை. சிவஞான சித்தியார் நூலை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ள பழ. முத்தப்பன் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். தேவகோட்டையில் சிவாகம சங்கம் என ஓர் அமைப்பு இருந்தது. அங்கு சித்தாந்த வகுப்பும் ஆராய்ச்சியும் நடைபெற்றன. பல தமிழ் வடமொழிச் சித்தாந்த ஆகம நூல்கள் வெளியிடப் பெற்றன.

உலகின் அறிவியல் பூர்வமான சைவசமயத்திற்கு இணையாக வேறு சமயம் இல்லை எனச் சான்றோர்கள் போற்றுகின்றனர். ஆகவே நகரத்தார் அதைக் கொண்டொழுகியதில் வியப்பில்லை.

நாம் ஏன் பிறந்துள்ளோம்?

புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்க் கல்லாய் மனிதராய்த் தேவராய்க் கணங்களாய் வல் அசுரர் ஆகி முனிவர் ஆகி இவ்வாறு பல்வேறு பிறப்புக்களில் பிறந்தும் இறந்தும் ஓடிஓடி இளைத்து எய்த்துப்போன நான் இப்போது மனிதனாக ஏன் பிறந்துள்ளேன். என் பிறவியின் நோக்கம் என்ன?

இதற்குத் திருமுறை ஆசிரியர்களில் காலத்தால் மூத்தவரான நகரத்தார் பெண்மணி காரைக்காலம்மையார் விடை கூறுகிறார்.

நாம் இனிமேல் மண்மேல் பிறவாதிருக்க முயற்சி செய்யவே இப்போது பிறந்துள்ளோம். அதற்கு வழி என்ன? சிவ வழிபாடு. சைவநெறி நிற்றல்.

பிறவாமை வேண்டும் - மீண்டும்
பிறப்பு உண்டேல் உனை என்றும்
மறவாமை வேண்டும்.

எனக் காரைக்காலம்மையார் கயிலைமலையில் சிவபெருமானிடம் வேண்டியதாகச் சேக்கிழார் பாடுவார்.

யானே தவமுடை யேன்
என் நெஞ்சே நன்னெஞ்சம்
யானே அக்கைம்மாவின்
உரிபோர்த்த செம்மேனி
அம்மானுக் காளாயினேன்

எனக் காரைக்காலம்மையார் பாடுவார்.

அதற்கு வழி சிவவழிபாடு. திருநீறு அணிதல். திருஐந்தெழுத்து ஓதுதல். சைவம் போற்றும் நகரத்தார் குலத்தில் பிறந்தமைக்கு நாம் பெருமைப்பட வேண்டும். நமது இளைஞர்கள் மரபுவழி ஒழுகிச் சைவநெறி போற்றி வாழவேண்டும்.



ஓர் அமுத சுரபியின் ஆயுள் ரேகை

- டாக்டர். **வ. தேனப்பன்**

காரைக்குடியைக் கல்விக்குடியாக்கிய பெருமை, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேனிலைப் பள்ளிக்கும் அழகப்பா பல்கலைக் கழகத்திற்கும் உண்டு.

நூற்றாண்டு விழாக்காணும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேனிலைப் பள்ளியின் சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கல்வியை மட்டுமே ஆணி வேராகக் கொண்டு தழைத்து வளர்ந்து பல ஆயிரம் நன் மாணாக்க விழுதுகளைத் தோற்றுவித்து இன்னும் பல நூற்றாண்டுகள் வளர்ந்து செழிக்கும் தனித்தன்மை பெற்றுள்ள உயர்நிலைப் பள்ளி அது. (இ.கு : உயர்நிலை = வினைத்தொகை)

உண்மையான கல்வி, உண்மையான ஆசிரியர்கள், உண்மையான மாணவர்களுக்குச் சான்றாக விளங்குகிறது இக் கல்விக் கழகம்.

ஆரம்பப்பள்ளி,உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியனவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் எவ்வாறு அமைய வேண்டும் என உவமை கூறுவார் பேராசிரியர் ஸ்ரீகாந்த். அவர்கள் கூறிய மூன்று உவமைகளைக் கீழே காண்போம்.

சுரங்கத்தில் தங்கம் கலந்த மண்ணை எடுத்துவரும் தொழிலாளி போன்றவர், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்.

மண்ணிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்கும் தொழிலாளி போன்றவர், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்.

தங்கத்தை ஒளிவீசச் செய்யும் அணிகலன்களாக்கும் பணியாளர், கல்லூரி ஆசிரியர் என்பார் அவர்.

மக்களிடமிருந்து பணத்தை உறிஞ்சி எடுப்பதையே இக்காலக் கல்வி நிறுவனங்கள் கைக்கொண்டிருந்தாலும், காலத்தால் மறக்க முடியாத காவியங்களைப் படைத்த கல்வி நிறுவனம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேனிலைப்பள்ளி என்பதில் எள் அளவும் எனக்குச் சந்தேகமில்லை. காரணம், அங்கே வைர மனம்படைத் மாணவர்களைத் தங்க மனம் படைத்த ஆசிரியர்கள் உருவாக்குகின்றார்கள்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்ற வள்ளுவத்திற்கேற்ப அங்கு மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் தினசரி

படிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்! மேலும் மேலும் படித்துத் தங்கள் தகுதியை உயர்த்திக் கொண்டே வளர்ந்து வருகின்றனர்.

அவ்வாறு தமிழாசிரியராக அங்கு பணியில் சேர்ந்த திரு.இராம. பெரிய கருப்பன் என்பவர், மேலும் படித்துத் தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளரானார். பின்பு அதற்கு மேலும் படித்து உயர்ந்து பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து டாக்டர் தமிழண்ணல் என்ற புகழ்ப் பெயருடன் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிப் புலத்துறைத் தலைவராக விளங்கினார். தற்போது செம்மொழிக்காகப் பாடுபட்டுப் பல்வேறு நாடுகளிலும் கருத்தரங்கத் தலைவராகப் புகழ்பெற்று வருகின்றார்.

நல்லாசிரியருக்கு ஒரு சான்று டாக்டர் தமிழண்ணல். நன்மாணாக்கருக்குச் சான்று டாக்டர் கரு. முத்தய்யா. தமிழ் எங்கள் மூச்சு என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு, இப்பள்ளியில் முழுமையாகப் படித்த காரணத்தால் கல்லூரியில் மாணவர் தலைவராகிப் பல்வேறு கல்லூரிகளில் தமிழ் பேராசிரியராகப் பணிபுரிந்து "ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு" பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

இன்றும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வருகிறார். பயணக் கட்டுரைகளை எழுதுகிறார். கலைக் களஞ்சியமாக விளங்குகிறார். பலநூறு ஆய்வு மாணவர்களுக்கு வழிகாட்டுகிறார். பல்வேறு கருத்தரங்குகளிலும், பட்டி மன்றங்களிலும் புகழ்க் கொடி நாட்டுகிறார். கல்லூரி, பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தமிழ்ப் பணியிலிருந்து ஓய்வு பெறாமல் உழைத்துக் கொண்டே இருக்கின்றார்.

ஒரு பள்ளியின் உயர்தரத்தைக் காட்டும் தர்மா மீட்டர் இது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, நல்லாசிரியருக்கு ஒரு சான்று; நன் மாணாக்கர்களுக்கு ஒரு சான்று. இது ஒன்றே போதும் ஒரு மேனிலைப் பள்ளியின் மேல்நிலையைச் சுட்டிக் காட்டிப் பாராட்ட!

இந்தக் கல்விச் சுரபியின் குருமேடு எப்போதும் உயர்ந்தே காணப்படுவதால், இதன் கல்வி ரேகையும் புகழ் ரேகையும் வளர்ந்து கொண்டே போகின்றன. ஆதலால் தீர்க்க தரிசனமாகக் கணியன் பூங்குன்றனார் பாணியில் சரியாகக் கணித்துச் சொல்வதென்றால்... இப்பள்ளியின் ஆயுள் ரேகை மேலும் மேலும் உயர்ந்து கொண்டேதான் செல்லும் என்பது உறுதி.

மீ.சு.மேல்நிலைப் பள்ளியும் இசை உலகும்

- இசைக்கலை ரசிகமணி காரை. ஏ. சங்கர சேது

இசை உலகுக்கும் காரைக்குடி மீ.சு.மேல்நிலைப் பள்ளிக்கும் உள்ள தொடர்புகளைச் சில குறிப்புக்களாகத் தருகிறேன்.

1. இசையுலகில் தன்னிகரற்று விளங்கிய சங்கீத கலாநிதி அரியக்குடி இராமானுஜ ஐயங்காரின் குரு பூச்சி சீனிவாச ஐயங்கார், தம் தாய்வழி மாமா முகுந்த ஐயங்கார் வீட்டில் தங்கி மீ.சு.மேல்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் கல்வி பயின்றார்.

2. சங்கீத கலாநிதி அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் தம் 6ஆவது, 7ஆவது வகுப்புகளை இப்பள்ளியில்தான் பயின்றார்.

3. இவர் காரைக்குடியை விட்டு, கும்பகோணத்திற்குச் சென்றபோது, தம் வீட்டில் இருந்த மேசை, நாற்காலிகள் அனைத்தையும் (அவை பர்மா தேக்கில் செய்தவை) மீ.சு.மேல்நிலைப் பள்ளிக்கு நன்கொடையாக வழங்கிவிட்டுச் சென்றார் என்ற செய்தியை, இராமானுஜ ஐயங்காரின் சீடர்கள் பி. ராஜமய்யர், கே.வி. நாராயணசாமி ஆகியோர் என்னிடம் கூறியுள்ளனர்.

4. இன்று மிருதங்க உலகில் பிரகாசிக்கும் குரு காரைக்குடி. ஆர்.மணி இப்பள்ளியின் முன்னாள் மாணவர்.

5. இவரது தந்தை டி. இராமனாதய்யர், மீ.சு.மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் நல்ல பாடகரும் கூட.

6. அரியக்குடி இராமானுஜ ஐய்யங்கார் நூற்றாண்டு விழாவின்போது அவர் படித்த மீ.சு.மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று N.K.Vision எனும் படத்தை எடுத்தோம். இன்றும் டெல்லியிலிருந்து வரும் நிகழ்ச்சியில் Ariyakkudi Episode இல் மீ.சு.மேல்நிலைப் பள்ளி இடம்பெறுகிறது. இப்படமெடுக்கும் பணிக்கு இப்பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் கழனிவாசல் எஸ்.பி.பழநிவேலு மிகவும் உறுதுணையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.



LOOKING AGELESS AND PRICELESS

- R. Annamalai
Teacher, SMSV Hr.Sec.School, Karaikudi.

Delighted we are that our ears are ringing with the word 'Centenary Festival' of our SMSV School wherever we turn. Age is venerated only in terms of invaluable experiences and accomplishments. Schools are umpteen. But our SMSV is for accounting achievements in innumerable academic activities. Education is valued only when it is imparted with morality. Filled with ecstasy, we state that our SMSV Hr.Sec. School has reached its zenith in imparting education blended with morality.


100-it is a number it seems; but it shows our school's 100 percent in Academic Results, District ranks in Science, Cultural, Social, Co-curricular, Extracurricular and Sports and Games activities. The number 100 shows our School's all round development.

Our SMSV School is rooted in Karaikudi blossoming internationally. The Face Book shows the faces of our school's alumni all over the world. The alumni are vibrant in recalling their invaluable experiences and reminiscences they have gained from our school and teachers. Most of our alumni are software engineers and research scholars abroad with green cards recalling their green memories of their studies at our school through the windows not of thier compartments but of their computers.

Doctors, produced from our school, are countable but they are appreciable. Many count the age of our school but we account the success of the school in 100 years. Our school record shows that our achievements are countless and copious. Our school is an eye opener to the illiterate and the downtrodden.

We are proud of telling that our SMSV School stands as an Uncrowned Monarch of all academic achievements at multifaceted levels. We have been adding feathers in plenty to the crown of our school. Diligence, dexterity, dedication, devotion and determination with a noble aim of making the school reach the pinnacle of success in imparting qualitative education with morality are the basic qualities imbibed in the blood of our industrious teachers - beacons to the stranded students. We have been rearing up not only the students with splendour but also the students with gloom.

Our correspondent Mr.C. Meyyappan hailing from the tradition and culture bound MSMM family along with our School Committees and the Headmaster Mr.MR. Valliappan has been encouraging the teaching and the non-teaching with the fond touch of making them filled with vigour, vitality and vibration to execute mammoth tasks assigned to every one of us for quality education with discipline. We have been proven examples to state that Education and Morality are the two eyes of our SMSV Hr. Sec. School.



இலக்கியத்தில் அரிய காட்சிகள்

பி.எஸ்.ஜோசப்
ஓய்வு பெற்ற முதுகலைத் தமிழாசிரியர்.

இலக்கியம் என்பது படிக்கப் படிக்கத் தெவிட்டாதது. இன்பம் பயப்பது. நினைந்து நினைந்து மகிழச் செய்வது. சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்கள் வீரத்தையும், காதலையும், அறிவாற்றலையும் விளக்கிக் கூறுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் இப்படி வாழ்ந்திருப்பாரா என்ற வியப்பை நமக்கு உணர்த்துகின்றன.

புறநானூற்றில் ஓரி என்ற மன்னனின் வில்லாற்றலைக் குறித்து ஒரு பாடல் உள்ளது. அதில் நாம் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத அளவில் ஓரியின் வில் அம்பு முதலில் யானை மேல் பாய்ந்து வெளிச்சென்று, தூரத்தில் நிற்கும புலியைப் பிளந்து, மேயும் கலைமானைக் கொன்று உருட்டிப் போட்ட பின் உடல் வேறு தலைவேறு என்றாக்கி விட்டு, அங்கு திரியும் பன்றியின் வயிற்றில் பாய்ந்து அதனை வீழ்த்தி இறுதியில் தாழ்வாக ஊர்ந்து சென்ற உடும்பில் குத்தி அதனையும் கொன்று நின்றது. இதனை விளக்கும் பாடல் இதோ.

“வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும் பிறிதொரீஇ
புழற்றலைப் புகர்க்கலை உருட்டி உடற்றலை
கேழற் பன்றி வீழ அயலது
தாழச் சென்று உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்”

சீவக சிந்தாமணி என்ற பெருங்காப்பியத்தில் பிறிதோர் பாடலில் ஏமாங்கத நாட்டின் வளத்தைப் பற்றிக் கூறுமிடத்து மலையின் உச்சியில் உள்ள தென்னை மரத்தில் இருந்து வீழ்ந்த ஒரு தேங்காய் கீழ்ப்பகுதியில் ஓங்கி வளர்ந்து நிற்கும் பூக்களைக் கொண்ட கமுகு மரத்தில் கட்டியுள்ள தேன்கூட்டில் விழுந்து அதனைக் கிழிக்க, அதிலிருந்து தேன் முழுவதும் வடிய, மீண்டும் அந்தத் தேங்காய் பலாமரத்தின் நன்கு பழுத்துள்ள பலாப்பழத்தில் வீழ்ந்து அதிலிருந்த பலாச்சுளைகள் எல்லாம் சிதற, மீண்டும் மாமரத்தில் பழுத்திருக்கும் மாங்கனி மேலே வீழ்ந்து, கனிகள் சிதற, இறுதியாக வாழைமரத்தில் பட்டு வாழைப்பழங்கள் சிதறி விழுந்தன. என்னே மலை வளம்!

இதனை உணர்த்தும் பாடல்,

"காய் மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கத மென்றிசையால் திசை போயதுண்டே"

இது போன்று கம்பரின் தனிப்பாடல் ஒன்று தென்றல் காற்றுப் புகுந்து செல்லும் இடங்களையெல்லாம் சுவைபடக் கூறுகிறது. தென்றல் காற்றானது சோலையில் நுழைந்து, பின் குளத்தில் புகுந்து, அதில் உள்ள தாமரை மலர்களையெல்லாம் தழுவி, மல்லிகை, முல்லை போன்ற மலர்ப்பந்தல்களின் வழியே அருமையான மணங்களைப் பெற்று, குளிர்ந்த காற்றாய் மெல்லென்று தவழ்ந்து வீசிற்று. இது அறிவைத்தேடும் கலைஞன் போல் உள்ளது என்று பாடினார். பாடலைக் காண்போம்,

"பொங்கரில் நுழைந்து வாவி புகுந்து பங்கயம் துழாவி
பைங்கடி மயிலை, முல்லை, மல்லிகைப் பந்தர் தாவி,
கொங்கலர் மணம் கூட்டுண்டு குளிர்ந்து மெல்லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்குமன்றே".

அகநானூற்றில் கபிலர் பாடிய ஒரு பாடலில் காட்டிலே ஒரு விழா நடப்பது போலவும், விறலி ஆடுவது போன்றும், இயற்கையாய் அமைந்த மூங்கில் வழியே காற்றுப் புகுந்து இனிய குழல் இசையை உண்டாக்குவது போன்றும், அருவிகளில் இருந்து வீழும் நீரின் சத்தம் இன்னிசை விருந்தைத் தருவது போலவும், காட்டில் உள்ள எண்ணற்ற மான்களின் முனகும் ஒலி தும்பு இசை போலவும், வண்டுகள் ரீங்காரமிடும் ஒலி யாழின் இசையைப் போலவும், இந்த இசையெல்லாம் கேட்டு மகிழ்ந்த குரங்குகள் திகைத்து நிற்கும் காட்சியுடன், மூங்கில் அடர்ந்து வளர்ந்த புதரின் அருகே மயில் தோகை விரித்து ஆடும் காட்சி நாடக மேடை போன்றுள்ளது என்று எடுத்தியம்புகிறார்.

"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை அவ்வளி குழலிசையாக
பாடின்னருவிப் பனிநீர் இன்னிசை
கணக்கலை இருக்கும் கடுங்குரற் றூம்பொடு
மலைப் பூஞ்சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வனநோக்க
கழைவளர் அடுக்கத்தில் இயலி ஆடும்மயில்
விழவுக்கள விறலியில் தோன்றும்நாட"

இதுபோன்ற பாடல்களை நாம் படிக்கும் போது இயற்கையில் அமைந்த காடுகளின் வளமும் கவிஞரின் திறனும் வெளிப்படுகின்றன.



நெஞ்சினில் நிலைக்கும் நீங்கா நினைவுகள்

ஜெ. பிரகாஷ் மணிமாறன்
பட்டதாரி ஆசிரியர்
மீ.சு. மேல்நிலைப்பள்ளி, காரைக்குடி.

என் நெஞ்சமதில் நிரவிப் பரவிக் கிடக்கும் நினைவுகளை நினைத்தாலே இனிக்கிறது. உள்ளம் பூரிக்கின்றது. உவகை ததும்புகின்றது. அப்படி என் நெஞ்சத்தில் அடைகாத்து வைத்திருப்பது என்ன?

அது என் பள்ளி, என் கல்வி, என் பணி.

சாமானியர்களைச் சாதிக்க வைத்தது நான் பயின்ற எஸ்.எம்.எஸ்.வி. பள்ளி. பல தலைமுறைகளைத் தலைநிமிர்ந்து நிற்க வைத்துள்ளது எங்கள் பள்ளி.

இந்தப் பள்ளியில் தான் என் தந்தை பயின்றார். அவர் பொறியாளர் பட்டம் பெற்று, பொதுப் பணித்துறையில் நிர்வாகப் பொறியாளராக நிறைவாகப் பணியாற்றி, பணி நிறைவு கண்டுள்ளார். என் தம்பிமார்கள் எல்லாம் இப்பள்ளியில் படித்து முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர். என் பெயருக்குப் பின்னாலே எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பி.எட்., மற்றும் முனைவர் பட்டத்திற்கான ஆய்வை மேற்கொள்ள வைத்தது அனைத்தும் இப்பள்ளிதான்.

ஆன்மீகப் பணியிலும் அறப்பணியிலும் ஆர்வம் காட்டி அளப்பரிய பணிகள் ஆற்றிவரும் நகரத்தார்களைக் கல்விப் பணியிலும் தடம் பதிக்க வைத்தது இப்பள்ளிதான்.

மனிதன் செய்யும் அறங்களில் தலையாயது கல்விக் கொடை எனக் கருதி நகரத்தார்கள் நல்லதொரு பள்ளி நிறுவி என் போன்ற சாமான்யரும் கல்வி பெற வைத்ததுடன் நல்ல நல்ல பிள்ளைகளை நாட்டுக்கீந்து வருகிறார்கள். அதுவும் ஓராண்டா ஈராண்டா இல்லை இல்லை நூறாண்டு. இனியும் நூறாயிரம் ஆண்டு ஊர் போற்ற, இப்பள்ளி, சிறக்கும் என்பது திண்ணம்.

இப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் நான்
“குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு”

என்னும் நாலடியார் கூற்றுக்கேற்பவும் “ஆசிரியர் பணி அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி” - என்பதற்கேற்பவும் கல்விப் பணியில் என்னை அர்ப்பணித்து வருகிறேன்.

A bright teacher only can make a student much brighter - என்ற பார்முலாவைப் பின்பற்றி என் ஆசிரியப்பணியை ஆற்றி வருகிறேன்.

அதற்கு எனக்கு இடமளித்தது இந்த எஸ்.எம்.எஸ்.வி. பள்ளிதான். நான் மாணவனாய்க் கற்ற இடத்திலேயே ஆசிரியனாய்க் கற்பிக்கின்றேன் என்பதை நினைக்கும் போதே நெஞ்சம் இனிக்கிறது.

சின்ன விதைக்குள்ளேதான் பெரிய விருட்சம் உறங்குகிறது என்பது எவ்வளவு நிதர்சனம். அதுபோல் ஒவ்வொரு குழந்தையிடமும் மகத்தான மனிதனாக மலரத்தக்க உள்ளாற்றல்கள் (Potentialities) பொதிந்துள்ளன. அதனை உணர்ந்து மாணவனின் அபார ஆற்றலை அரங்கேற்ற முனைகிறேன். அதற்கு என்னோடு பணியாற்றும் என் இனிய சகாக்கள் தான் வழிகாட்டும் விளக்கு.

உள்ளுவதெல்லாம் உயர்வு.

பள்ளியின் ஒரு நூற்றாண்டுக் காலப் பயணத்தையும்,
அதனால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பயன்களையும் எண்ணி
இறும்பூதெய்துகின்றேன்.
அறிவுக் கொடையில் நகரத்தார் சமூகத்தின் பங்களிப்பு எல்லையற்றது;
என்றும் நினைந்து போற்றத்தக்கது.

- பாவலர்மணி. ஆ. பழநி



A HOME AWAY FROM HOME

- **S. Kandasamy**
Teacher, SMSV Hr. Sec. School

Our S.M.S.V. Hr. Sec. School has completed its hundred years of service in imparting Education qualitatively and quantitatiely to the tens of thousands of students in and around Karaikudi belonging to the socially and economically downtrodden people and is progressing in its second century without changing its colour, quality as was its motto when it was established by MTT. Vellaiyan Chettiar a century ago.

Most of our alumni are Judges, Engineers, Scientists, Doctors, Businessmen and Philanthropists etc. It is coming into reality because of the excellent Management, Efficient Headmasters and Intellectual Teachers.

The recruitment of faculty in our school is an unique one. They are selected purely on merit basis without getting any donation, by a panel of subject experts.

I am also the one who attended the interview for the post of Secondary Grade Assistant on 7th of July 1993. I recieved the call letter for the same and came to Karaikudi, a place known for Chettinad heritage with so much hopes and dreams.

The panel was headed by Mr. Srinivasan, the Former Headmaster of M.CT.M.C.C. High School, Kanadukathan and supported by, Mr.SP. Palanivelu, one of the most renowned Headmasters in the history of our school and who changed it into a premier Institution in Karaikudi both in discipline and education. Our school committee members had also participated in it. Questions were fired on me by all the members and I answered them immediately. To my remembrance, none of the questions went unanswered. At the end, my colleague Mr. Sundararaman came to our room and told me the panel's decision to appoint me for the post. On hearing it, my joy knew no bounds. This transparency in recruitment setting aside the recommendations from many angles is a unique and particular for our school only, We can't find such a system anywhere else.

The trusted and cordial understanding between the management and the teachers have made us stand high and feel elated. It is evident when our management gave me permission to sue the education department in High Court when my promotion was rejected by the DEO office. I came out of this legal battle quite successfully and I am repromoted as BT.Asst. in English. I am very grateful to the management thanks to the strong recommdation made by Mr. SP. Palanivelu Rtd.HM and Mr. MR. Valliappan the present Headmaster.

Our Headmaster MR. Valliappan insisted us that we should get cent percent result in Xth std & XIIth Std Public Examination to be held in 2013. He also added that it will be a fitting one to announce the cent percent result in the Centenary function. We the crew members, worked hard and got the centum result in xth Std Public Examination and third in a row. We feel elated and ecstatic that our school's first SSLC Batch in year 1920 and the last batch before the Centenary Celebration in 2013 got centum result.

The most memorable moment in my life as a teacher here in our school is that I was given the assignment of Teacher in charge for the Centenary celebration by Thiru. SLNS. Periyanan, and Muthu. Palaniappan, the Secretaries of the Centenary Committee. I feel proud and took a pledge that all the activities should be exacted properly and sincerely as I am trusted by them as a right person to carry out the job. The assignment includes receiving advertisements, sending them to the souvenir committee, keeping the bank accounts, making payment to the expenses etc. I have done it with the help of Dr. KR. Muthiah whom I am grateful to. He gave me valuable advice in executing my work along with T. Yogeeswaran, BT.Asst. of our School.

All the work related to the centenary celebrations have been successfully carried out in a day to day basis and sometimes we have got to work upto late night. These are all made possible and I wouldn't have done it except with the kind co-operation and sheer enthusiasm showered on me by my beloved wife.

A Home is a place where we get peace, kindness, cooperation, warmth, mutual understanding and solace. I found it and experienced it in our S.M.S.V.Hr.Sec.School in my twenty years of service so far. That's why I rightly deem it as my second home.

We pray to Lord Shiva and Goddess Meenakshi to extent their boon and blessings for our school's eternity.

Long live our School's name and fame!

